# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM

பக்கங்கள் - 24

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 247 ஆடி 18 ஆம் நாள் சனிக்கிழமை 03 ஓகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## மீண்டும் ஆட்சிப் பீடமேறியதும்

# போர்க் குற்றவாளிகளை ஒருபோதும் தண்டிக்கோம்

### அடித்துக் கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஓகஸ்ட் 3

நாம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியதும் அரசியல் தீர்வு உட்பட வடக்கு – கிழக்குத் தமிழருக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் படிப்படியாக நிறைவேற்றியே தீருவோம். ஆனால், எந்தக் காரணம் கொண்டும் போர்க் குற்றவாளிகள் என்ற பெயரில் எவரையும் தண்டிக்கவேமாட்டோம். போருக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதியை விரும்பிய தமிழர்கள், அந்தப் போரில் பங்கேற்று சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த படையினரை ஏன் வெறுக்கின்றார்கள்? அந்தப் போர் வீரர்களை ஏன் போர்க்குற்றவாளிகள் என்று அழைக்கின்றார்கள்? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் அரச தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச. 19

## பால்மா விலை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 3

இறக்குமதியாகும் பால்மாவின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பால் 19

## கருங்குளவிகளின் அட்டகாசம் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

### நேற்றும் இருவர் மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக கருங்குளவிகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட இருவர் சாவடைந்துள்ளதுடன், நூற் 07

## விபத்தில் காயமடைந்தவரை மீட்க வந்த இருவர் கைது

### போலி இலக்கத்தகட்டுடன் பயணித்தனர் என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஓக. 3

விபத்தில் காயமடைந்தவரை மீட்க வந்த இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட் 19

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுப்பு

கொழும்பு, ஓக. 3

இந்தோனேசியாவில் ரிக்டர் அளவுகோலில் 6.8 அளவு சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இலங்கை கரையோர மக்களுக்கு 19

## இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்ட பொதுமக்கள் நினைவு கூரப்பட்டனர்

### வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்றது

யாழ்ப்பாணம், ஓக. 3

இலங்கையில், தமிழர் தாயகத்தில் வந்திறங்கிய இந்திய இராணுவத்தினரால், கேட்டுக் கேள்வி 19

## எதிர்வரும் தேர்தலில்

# சுயநலம்தான் வெல்லப்போகின்றது பொதுநலம் காற்றில் பறக்கப்போகிறது

### எதிர்வுகூறுகிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஓக. 3

எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையே கொள்கைசார் ஒற்றுமைக்குப் பதிலாக பிரிந்த மனப்பாங்கே மேலோங்கும். உண்மையில் நான் வலிந்து ஒரு சாராரை கொள்கை ரீதியாக எம்முடன் சேருமாறு கூறி பணிந்து சென்றமை இவ்வாறான ஒரு நிலமை வரும் தேர் 19



## பலாலி வானூர்தித் தளம்

# அபிவிருத்திப் பணிகள் துரிதமாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

பலாலி வானூர்தி நிலையத்தை பன்னாட்டு வானூர்தி நிலையமாகத் தரமுயர்த்தி மறுசீரமைப்புச் செய்யும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 19

## ரூ. 3 லட்சம் செலவில்

# சோதனைச் சாவடிகளை வழங்கியது மாநகரசபை

### நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஓக. 3

நல்லூர் ஆலயத் திருவிழாவின்போது, ஆலயத்துக்கு வரும் பக்தர்களை சோதனைக்கு உட்படுத் 07

## தூக்குக் காவடிகள்:

# பருத்தித்துறை வீதி ஊடாகவே அனுமதி

### நல்லூர்த் திருவிழா ஏற்பாடு குறித்து முதல்வர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

நல்லூர் ஆலய உற்சவக் காலத்தில் சாதாரண காவடிகள் முதன்மை வீதிகள் ஊடாக உட்செல்ல அனுமதிக்கப்படும். அதே நேரம் ஆலயத்துக்கு வரும் தூக்குக் 19


யாழில் பிரமாண்டமான வளாகத்தில்

One year Top Up Degree

UGC Recognized International Degree

www.blccampus.edu.lk

- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

✓ தனித்துவமான உயர்கல்விச் சேவை.

✓ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443

Entry requirement
HND / any Equal Qualification in the similar study

BLC CAMPUS

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk




## வடமாகாண ஆணழகன் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஓக.3
வடக்கு மாகாண ஆண ழகன்களுக்கு இடையி லான போட்டி யாழ்ப்பா ணத்தில் இடம்பெறவுள் ளது.
இந்தப் போட்டியானது இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என்று உடல் கட்டழகு மற்றும் உடற் தகைமைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



தீவிர பயிற்சியில் ஈடுபடும் யுவன்டாஸ் அணி வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ.

யுவேந்திர சாகலுக்கு

## கிரிக்கெட்டுக்கான கற்றல் செஸ்ஸிலிருந்து பிறந்தது

தந்தை பெருமிதம்


இந்திய அணியில் முக்கிய துருப்புச் சீட்டாக சுழற்பந்து வீச்சாளர் யுவேந்திர சாகல் விளங்குகின்றார். இவர் தனது சிறு வயதில் இந்தியாவின் செஸ் சம்பியனாக இருந்துள்ளார். இந்தத் தகவலை அவரது தந்தை வெளியிட்டுள்ளார்.
இது குறித்து அவர் தெரிவிக்கையில்:
சாகலுக்கு ஆறு வயதிலேயே செஸ்ஸை அறிமுகம் செய்துவிட்டேன். மையை வெளிப்படுத்திய போதிலும் மகனின் முதல் விருப்பம் கிரிக்கெட்டே. அவனிடம் எதனையாவது சாதிக்கவேண்டும் என்ற வெறி காணப்பட்டது. எனது மகன் இன்று இந்த நிலையிலிருப்பதற்கு இதுவே காரணம்.
செஸ் என்பது மூளையை, மனதை பயன்படுத்தி விளையாடும் தீவிரமான மற்றும் கடுமையான விளையாட்டு. சாகல் வழ



அவர் ஆக்கபூர்வமான விடயமொன்றில் கவனம் செலுத்தவேண்டும் என்பதே எனது முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது.
சாகல் 2003 ஆம் ஆண்டு இந்தியாவுக்காக பன்னாட்டு போட்டிகளில் பங்கெடுத்தான். எனினும் செஸ்ஸில் இத்தனை திற மைக்கு மாறாக சிந்திப்பதற்கான திறனை அவன் அதிலிருந்தே பெற்றான். தனது பந்தில் சிக்சர் அடிக்கப்பட்டாலும் அமைதியாக யிருந்து விட்டு மீண்டும் சிறப்பாக பந்து வீசுவதற்கான திறன் செஸ் விளையாட்டிலிருந்தே மகனுக்கு கிடைத்தது - என்றார்.

# நான் கிரிக்கெட்டுக்காக மீண்டு வந்துள்ளேன்

ஸ்மித் பெருமிதம்



நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவேனா எனத் தெரியாத நிலையிருந்தேன் என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் தெரிவிக்கையில்;
ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டியில் கடுமையாகப் போராடி 144 ஓட்டங்களைப் பெற்றேன். நான் மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவேனா எனத் தெரியாத நிலையிலிருந்தேன். கடந்த 15 மாதத்தில் நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவேனா எனத் தெரியாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.
எனது உடலில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக அறுவைச் சிகிச்சைக்கு என்னை உட்படுத்திக்கொண்டவேளை நான் அவ்வாறு சிந்தித்தேன்.
நான் கிரிக்கெட் மீதான விருப்பத்தை இழந்தேன். குறிப்பாக அறுவைச் சிகிச்சையின் பின்னர் நான் ஆர்வமிழந்தேன்.
இந்த ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸில் அணியை இக்கட்டான நிலையிலிருந்து மீட்டமை குறித்து பெருமிதம் கொள்கிறேன். எனது சிறந்த சதங்களில் இதுவும் ஒன்று.
இதேவேளை, இங்கிலாந்து ரசிகர்களின் கூச்சல், கேலிகளை நான் கவனத்தில் கொள்ளவில்லை - என்றார்.

தடையின் பின்னர்

## ஸ்மித்தின் கடுமையான உழைப்பு அவரின் சதத்தில் தெரிகிறது

தந்தை பீட்டர் ஸ்மித் நெகிழ்ச்சி

தென்னாபிரிக்கா டெஸ்ட் போட்டி ஒன்றில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்மித், வோர்னர், பேங்கிராப்ட் சிக்கிய போது ஸ்மித்தின் தந்தை தன் மகன் மீதுள்ள கோபத்தில் அவரது கிரிக்கெட் மட்டையைத் தூக்கி எறிந்தது அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது.
ஆனால் ஓராண்டுகாலத் தடைக்குப் பின்னர் மீண்டும் ஆஸ்திரேலிய அணியில் இணைந்தார். நேற்று முன்தினம் ஆரம்பமான ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட இலக்குகள் இழக்கப்பட்ட ஸ்மித் தன் அபாரமான ஆட்டத்தால் அணியை மீட்டெடுத்தார். அவர் 144 ஓட்டங்களைக் குவித்தார்.
இது குறித்து ஸ்மித்தின் தந்தை பீட்டர் ஸ்மித், தெரிவிக்கையில்;
“ஸ்மித்துக்கு இது பெரிய தொரு ஆரம்பம். நாமும் அவருடன் இதனைப் பகிர்ந்து கொள்கிறோம். மீண்டும் வந்து இந்தச் சதத்தை எடுத்ததன் பின்னணியில் ஸ்மித்தின் மிக மிகக் கடுமையான உழைப்பு இருந்தது. மிகவும் கடினமான இன்னிங்ஸ் இது. இந்தச் சதத்தில் அந்தக் கடினம் தெரிந்தது. இது அவனிடம் ஏற்படுத்திய விளைவிலிருந்து நாம் அதை ஊகிக்க முடிகிறது. தடைக்காலம் மிகவும் மோசமானது. அதனால்தான் அவனுடனேயே நாங்களும் செல்ல வேண்டியிருந்தது.
ஆனால் ஸ்மித் சதத்தை நெருங்கும் போது எனக்கு எப்போதும் இல்லாத அளவுக்கு நடுக்கமும் பயமும் இருந்தது. அதனால் இப்போது உணர்ச்சிவயப்பட்ட நிலையில் உள்ளேன். சதம் எடுத்ததைப் பார்த்த போது உணர்ச்சி வசப்பட்டோர். இன்னும் கூட நான் உணர்ச்சிகரமாகத்தான் இருக்கிறேன். ஆனாலும், கடந்த ஆஷஸ் தொடரில் பிரிஸ்பனில் ஸ்மித் அடித்த சதம்தான் என்னைப் பொறுத்தவரையில் சிறந்த சதமாகும். ஆனால் இந்தச் சதம் அணியின் இக்கட்டான நிலையில் பெறப்பட்டதால் இதுவும் பெரிய சதம்தான் - என்றார்.

# வோர்னரை கிண்டல் செய்த இங்கிலாந்து ரசிகர்கள்

ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணி வீரரான டேவிட் வோர்னரை இங்கிலாந்து ரசிகர்கள் கடுப்பேற்றினர்.
பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் இருந்து மீண்டு வந்த வோர்னர், ஸ்மித், பேங்கிராப்ட் இந்த ஆஷஸ் தொடரில் இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில், ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முக்கிய தொடராக பார்க்கப்படும் ஆஷஸ் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.
டேவிட் வோர்னர், பான்கிராப்ட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். இதில் வோர்னர் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.
வோர்னர் ஆட்டமிழந்து வெளியேறும் போது இங்கிலாந்து



ரசிகர்கள் பலரும் அவரை கடுப்பேற்றும் விதமாக, உப்புத் தாளை வெகுநேரம் காண்பித்து வழியனுப்பினர்.



# முரளிதரனாக விஜய் சேதுபதி நடிக்க எதிர்ப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர்கள் சச்சின் டெண்டுல்கர், டோனி ஆகியோரின் வாழ்க்கை திரைப்படங்களாக வெளி வந்தன. கபில்தேவ் தலைமையில் இந்திய கிரிக்கெட் அணி உலக கோப்பையை வென்ற நிகழ்வை மையமாக வைத்து '83' என்ற பெயரில் புதிய படம் தயாராகிறது.

இந்த நிலையில் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் வாழ்க்கையையும் சினிமா படமாக எடுக்கின்றனர். முரளிதரன் வேடத்தில் விஜய் சேதுபதி நடிக்கிறார். படத்துக்கு '800' என்ற தலைப்பை வைத்துள்ளனர். ஶ்ரீபதி ரங்கசாமி டைரக்டு செய்கிறார்.

இந்த படத்தில் நடிப்பது குறித்து விஜய் சேதுபதி கூறும்போது, "உலக அளவில் கிரிக்கெட் விளையாட்டில் முத்திரை பதித்த முரளிதரன் கதாபாத்திரத்தில் நடிப்பது பெருமையாகவுள்ளது. இந்த கதாபாத்திரம் எனக்கு சவாலாக இருக்கும்" என்றார். முரளிதரன் வேடத்தில் விஜய் சேதுபதி நடிப்பதற்கு பலரும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர்.

"முரளிதரன் கண்டியில் பிறந்த தமிழராக இருந்தாலும் சிங்களராகவே வாழ்ந்து வருகிறார். விடுதலைப்புலிகள் போராடியபோது சிங்களத்தின் பக்கம் நின்று துரோகம் செய்தார். அவரது கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி நடிப்பதை ஈழத்தமிழர்கள் ஏற்கமாட்டார்கள் " என்று பலரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதுபோல் சமூக வலைத்தளத்திலும் முரளிதரன் வேடத்தில் விஜய் சேதுபதி நடிப்பதை எதிர்த்து வருகிறார்கள்.

# உழைப்பு உடலை பலப்படுத்தும்



- உழைப்பு மூன்று தீமைகளைக் களைகிறது.
  பொழுது போகாமை, கெட்ட பழக்கம் வறுமை!
  வால்டேர்
- கடினமான உழைப்பு, தெய்வ வழி பாட்டுக்குச் சமம்.
  லால் பகதூர் சாஸ்திரி
- உழைப்பு இல்லாமல் வெற்றி கிடைக்காது.
  ஜேம்ஸ் ஆலன்
- அடிமையைப் போல் உழைப்பவன் அரசனைப் போல் உண்பான்.
  கதே
- எண்ணங்கள் அனைத்தும் உயர்வாகஇருக்கவேண்டும். அதைஅடைய கடுமையாக உழைக்க வேண்டும். இதன்மூலம் சாதனைகள் படைக்க முடியும்.
  அப்துல் கலாம்.
- அடுத்தவர் பணத்தில் நெய்ச்சோறு உண்பதைக்காட்டிலும் தான் உழைத்துச் சம்பாதித்த பணத்தில் உண்ணும் தண்ணீரும் சோறும் சிறந்தது. அப்படி உண்பதில் மனநிறைவும் மகிழ்ச்சியும் உண்டாகும்.
  வாரியார் சுவாமிகள்.
- உழைக்க வேண்டுமென்பது சம்பாதித்து வயிற்றை நிரப்ப வேண்டும் என்பதற்கல்ல…, உரிய பெருமையுடன் வாழ்வதற்காகவே!
  ப்ரௌனிங்.
- உழைப்பு உடலைப் பலப்படுத்தும். கஷ்டங்கள் மனதைப் பலப்படுத்தும்.
  ப்ளெமிங்
- எப்போதும் பாடுபடு. துன்பம் போன்ற எல்லா பேய்களும் உழைப்பைக் கண்டால் ஓடி ஒளிந்து விடும்.
  மகாகவி பாரதியார்.

# நான்கு நபர்கள்

நான்கு நபர்களை புறக்கணி..
- மடையன்
- தர்கிப்பவன்
- முட்டாள்
- ஓய்வாக இருப்பவன்

நான்கு நபர்களுடன் தோழமை கொள்ளாதே..
- பொய்யன்
- கள்வன்
- பொறாமைக்காரன்
- மமதை பிடித்தவன்

நான்கு நபர்களுடன் கடினமாக நடக்காதே..
- அநாதை
- ஏழை
- வறியவன்
- நோயாளி

நான்கு நபர்களுக்கு உனது கொடையை தடுக்காதே..
- மனைவி
- பிள்ளைகள்
- குடும்பம்
- நண்பர்கள்


நான்கு விடயங்களை ஆபரணமாக அணி...
- பொறுமை
- சாந்த குணம்
- அறிவு
- கொடை

நான்கு நபர்களை வெறுக்காதே..
- தந்தை
- தாய்
- சகோதரன்
- சகோதரி

நான்கு விடயங்களை குறை..
- உணவு
- தூக்கம்
- சோம்பல்
- பேச்சு

நான்கு நபர்களுடன் சேர்ந்து இரு..
- மனத்தூய்மை உள்ளவன்
- வாக்கை நிறைவேற்றுபவன்
- கண்ணியமானவன்
- உண்மையாளன்

# கோமாதா பேசினால்!



ஒரு நாள் பசுவதை செய்யும் இடத்தில் ஒருவன் கோமாதாவை கொல்வதற்கு வந்தான். கோமாதா அவனை பார்த்து சிரித்தது. அதைப் பார்த்து அவன் கேட்டான். "நான் உன்னை கொல்லப் போறேன். அது தெரிந்தும் கூட நீ எதற்காக சிரிக்கின்றாய்?" என்று கேட்டான்.

அப்பொழுது கோமாதா சொன்னது. "நான் எப்பொழுதும் மாமிசத்தை உண்டதில்லை. ஆனாலும் என் இறப்பு கோரமாக இருக்கப் போகிறது.

எந்த தப்பும் செய்யாமல், யாருக்கும் எத்தகைய ஆபத்தையும் விளைவிக்காத என்னை, நீ கொன்று, என் மாமிசத்தை சாப்பிடும் உன் சாவு எவ்வளவு கோரமாக இருக்குமோ?" என்று நினைத்து நான் சிரித்தேன்.

"பால் கொடுத்து உங்களை வளர்த்தேன். உங்கள் பிள்ளைளுக்குப் பால் கொடுக்கிறேன். ஆனால் நான் சாப்பிடுவது புல்லை மட்டுமே. பாலிலிருந்து வெண்ணெய் எடுத்தீர்கள். வெண்ணெய்யினால் நெய்யை செய்தீர்கள். அதில் கிடைக்கும் பணத்தால் இன்பமான் வாழ்க்கையை வாழ்கிறீர்கள். ஆனால் எனக்கு மட்டும் அழுகிப் போன காய்கறிளையும் காய்ந்து போன புல்லையும் தந்தீர்கள். உங்கள் வீட்டை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு கொண்டு வந்தீர்கள். ஆனால் என்னை கசாப்புக்காரன் போல் கொல்ல வந்திருக்கிறாய்... என்னுடைய பாலிலிருந்து கிடைத்த சக்தியால் தான் என்னை கொல்ல ஆயுதத்தைத் தூக்க முடிந்தது.

அந்த ஆயுதத்தை தூக்கும் சக்தி உனக்குக் கிடைத்தது என்னால் தான். என் மூலம் நிறைய சம்பாதித்து வீட்டை கட்டிக் கொண்டாய். ஆனால் என்னை மட்டும் ஒரு குடிசையில் வைத்தாய்.

உன்னை பெற்ற தாயை விட மேலாக உனக்கு நானிருந்தேன். எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்கும் உன் கதி என்னவாகும்? உன் வருங்காலத்தை குறித்து நினைத்து நான் சிரித்தேன்" என்று சொன்னது.










# பக்தி

- சாதத்துடன் பக்தி இணையும்போது, அது பிரசாதமாகிவிடும்..!
- பட்டினியுடன் பக்தி சேரும்போது, அது விரதமாகிவிடும்..!
- தண்ணீருடன் பக்தி சேரும்போது, அது புனித நீராகிவிடும்..!
- பயணத்துடன் பக்தி சேரும்போது, அது யாத்திரையாகிவிடும்..!
- இசையுடன் பக்தி சேரும்போது, அது கீர்த்தனையாகிவிடும்..!
- பக்தியில் வீடு திளைக்கும்போது, அது கோயிலாகிவிடும்..!
- செயல்களுடன் பக்தி சேரும்போது, அது சேவையாகிவிடும்..!
- வேலையுடன் பக்தி சேரும்போது, அது கர்மவினையாகிவிடும்..!
- பிரம்மச்சரியத்தோடு பக்தி சேரும் போது, அது துறவறம் ஆகின்றது..!
- இல்லறத்தோடு பக்தி சேரும் போது தான் அது ஆன்மீகம் ஆகின்றது..!
- ஒருவனை பக்தி ஆக்கிரமிக்கும்போது அவன் மனிதனாகிவிடுகிறான்..!
- மதம் எதுவானாலும், மனிதன் நல்லவனாக இருக்க வேண்டும்...!!!

## இலங்கைக் கணக்காளர் சேவை தரம் III

### ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை – நவம்பர் 2019

**விண்ணப்பத் தகமைகள்**

- வயதெல்லை 22-30 (2019-08-02இல்)
- கல்வித் தகமைகள்
  - * உரிய பல்கலைக் கழகப் பட்டம்
  - * HND (கணக்கியல் / வர்த்தகம்)
  - * CA- Intermediate Level
  - * CIMA - Operational Level
  - * ACCA - Skill Level

**பரீட்சைக் கட்டமைப்பு**

- நிதிக் கணக்கியல் I
- நிதிக் கணக்கியல் II
- செலவின முகாமைக் கணக்கியல்
- கணக்காய்வு
- பொது விவேகம், கிரகித்தல்
- அரச நிதி முகாமை

யாழ் மண்ணின் சிறந்த விரிவுரையாளர் குழுவின் வழிகாட்டலின் கீழ் உங்கள் வெற்றியை உறுதி செய்து ஓர் வலுமிக்க வேலைவாய்ப்பிற்கு அடித்தளமிடுங்கள்

◊ முழுமையான பாடத்திட்ட விரிவுரைகள்
◊ பரீட்சை நோக்கிலான மீட்டல்கள்
◊ 4 கடந்தகாலப் பரீட்சைகளின் மீளாய்வு
◊ பரீட்சை தயார்படுத்தல் எதிர்வுகூறல்

IBM Quality Learning for Life
**Innovative Business Managers**
No. 61, Palali Road, Jaffna
**021 222 4111 | 0777 83 6653**
ஆரம்பம் 17-08-2019

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (29.06.2019) சனிக்கிழமை
சிவபதம் அடைந்த எமது குடும்ப தலைவி

### அமரர் தியாகராஜா சீதாதேவி



அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 04.08.2019 ஞாயிற்றுக்கிழமை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**


**குடும்பத்தினர்.**

(CS 27091) (14)

## மரண அறிவித்தல்

### வெற்றிவேல் பசுபதி

(ஓய்வுபெற்ற காணிப்பகுதி வெளிக்கள உத்தியோகத்தர்)



தோற்றம் 04.12.1931 | மறைவு 01.08.2019

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் 4ஆம் ஒழுங்கை அரசடி வீதி, கந்தர்மடம் நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேல் பசுபதி கடந்த (01.08.2019) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் அன்னப்பிள்ளை தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற செல்லம்மாவின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா , குழந்தைவேல், குணமணி, சண்முகம், மனோன்மணி, ஈஸ்வரி, வசந்தராணி, பரமேஸ்வரி, மாங்களேஸ்வரன் ஆகியோரினதும் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, ஞானேஸ்வரி, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை , திரேசம்மா, யாதவராயர், சபாரட்ணம், மகேந்திரராஜா மற்றும் சண்முகதாஸ், கனகதாஸ், சிவலிங்கம், மயில்வாகனம், விஜயா ஆகியோரின் மைத்துனரும் பிறேம் ஜெயந்த் (ஜேர்மனி), நீர்மலா (கனடா), பிறேமலா (கனடா), நிமலன் (யாழ்.சுகதார வைத்தியஅதிகாரி பணிமனை, யா.மா.ச),பிறேமானந்தன் (ஜேர்மனி), முரளிதரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் மகாலட்சுமி, செல்வரட்ணம், குணரட்ணம், செல்வமதி, கீதா, சிவகீதா, ஆகியோரின் மாமனாரும் பிரதீபன், பிரவீனா, மதுஷா, அரவிந், அபிரா, அனா, லக்ஷி, லாரிஷா, தேனுகா - நிஷாந்தன், துவாரகா, சுபப்பிரியன், ரேனுப்பிரியா, அனுஷா, மானுஷா, நிஷா, மாதங்கி, தேஜஸ்வினி, ஆகியோரின் அன்புப்பேரனும் நயோமிகனின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2019) ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல 12, 4 ஆம் ஒழுங்கை,**
**அரசடி வீதி, கந்தர்மடம்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 724 5021**

(C 10840/15/19)

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் சுகந்தி



நல்லூர்வடக்கைப்பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சுகந்தி கடந்த (29.07.2019) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கந்தையா சதாசிவத்தின் (உரிமையாளர் - துளசிகா தொழிலகம்) அருமைத்துணைவியும் கார்த்திகேசு - மனோன்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் சத்தியா (ஜேர்மனி), காலஞ்சென்ற கோபிகா (கிளி/நாச்சிக்குடா அ.மு.க பாடசாலை) மற்றும் துளசிகா, நிவேதா (கனடா), சிவப்பிரியா (உயர்தரம் - யாழ். இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத்தாயாரும் சுவாமிநாதன் செல்வரஞ்சன் (ஜேர்மனி), அஜந்தன் (விற்பனைப் பிரதிநிதி, வனிக்கா மெடிக்கல்ஸ்), செல்வராசா வசந்தகுமாரன் (கமநலசேவைகள் நிலையம் சண்டிலிப்பாய்), ஜெகசோதி சித்தாபன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற சிமிநாத் மற்றும் கபிர்நாத் அக்ஷயா, வைஷாலி, அகரன், அதிசயா, ஆரவ் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும்சண்முகதாஸன்(செயலாளர்-கரைச்சிபிரதேசசபை),குமாரதாஸன் (முன்னாள் செய்தி ஆசிரியர் "உதயன்" - பிரான்ஸ்), சுமதி (டென்மார்க்), சுபாகினி (டென்மார்க்) ஆகியோரின் அருமைச்சகோதரியும் சின்னத்துரை தபீந்திரலிங்கம் (டென்மார்க்), முத்துவேலு ஜெயச்சந்திரன் (டென்மார்க்), கிரிஷாந்தினி, வாசுகி ஆகியோரின் மைத்துனியும் சாயிப்பிரியா, சாம்பவி, ஆதித்தன், ஆதர்ஷா ஆகியோரின் அத்தையும் பிரவீன், பிரவீனா, ஆதித்யா ஸ்ரீராம் ஆகியோரின் அருமை பெரியம்மாவும் ஆவார்.

### அஜந்தன் கோபிகா

(ஆசிரியை -கிளி/நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ்க்கலவன் பாடசாலை)



நல்லூர் வடக்கைப் பிறப்பிட மாகவும் திருநெல்வேலி கிழக்கு புதிய செங்குந்தா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அஜந்தன் கோபிகா கடந்த (29.07.2019) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னர் சதாசிவம் - காலஞ்சென்ற சுகந்தி தம்பதிகளின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற தனபால சிங்கம் மற்றும் சிவசோதி தம்பதிகளின் அன்பு மருமகளும் தனபாலசிங்கம் அஜந்தன் (விற்பனைப் பிரதிநிதி வனிக்கா மெடிக்கல்ஸ்) ஆருயிர்த்துணைவியும் அக்ஷயா (Smart Kids முன்பள்ளி திரு நெல்வேலி) வைஷாலி ஆகியோரின் அருமைத்தாயாரும் சத்யா (ஜேர்மனி),துளசிகா, நிவேதா (கனடா), சிவப்பிரியா, (உயர்தர மாணவி, யாழ். இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைச்சகோதரியும் காலஞ்சென்ற சிமிநாத் மற்றும் கபிர்நாத் ஆகியோரின் சித்தியும், அகரன், அதிசயா, ஆரவ் ஆகியோரின் அன்புப் பெரிம்மாவும் சுவேதன் (ஆஸ்திரேலியா), சிந்துஜா ஆகியோரின் மைத்துனியும், வைஷ்ணவி, சுதர்ஷன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் குருஷான், யக்ஷனா, ஆகியோரின் சித்தியும் டர்வீனின் அன்பு மாமியாரும் செல்வரஞ்சன் (ஜேர்மனி), வசந்தகுமாரன் (கமநலசேவைகள் நிலையம் சண்டிலிப்பாய்), சித்தாபன் (கனடா), ஆகியோரின் மைத்துனியும் சண்முகதாஸன் - கிரிஷாந்தி, குமாரதாஸன் - வாசுகி ஆகியோரின் மருமகளும் தபீந்திரசிங்கம் - சுமதி, ஜெயச்சந்திரன் - சுபாகினி ஆகியோரின் பெறாமகளும் பிரவீன், பிரவீனா ஆதித்தியா - ஸ்ரீராம் ஆகியேரின் உடன்பிறவாச்சகேதாரியும் சாயிப்பிரியா, சாம்பவி, ஆதித்தன், ஆதர்ஷா ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நல்லூர் வடக்கு விநாயகர் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று புதவுடல்கள் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**கந்தையா சதாசிவம்** 076 083 2753

**தகவல் :**
**தனபாலசிங்கம் அஜந்தன்** 077 341 5677

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் சுகாதார கல்வி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு.செ.இ. ஈஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தையாரான

**செல்லையா இராமலிங்கம்**

காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றாம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

CS27108 (16/17)

## மாபெரும் மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து இறக்குமதியான லட்சுமி சுதா, சாண்டில்யன், சிவபாரதி, ஓஷோ, இந்திராசௌந்தர்ராஜன், கண்ணதாசன், கல்கி, ரமணிச்சந்திரன் , சுஜாதா, ராஜேஸ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், அமுதவல்லி கல்யாணசுந்தரம், காஞ்சனா ஜெயதிலகர், ஜெய்சக்தி, ஆர்.சுமதி ஆகியோரின் இனிமையான கதைகள் நிறைந்த புத்தகங்கள் இந்தியன் விலைப்படி 3.50 ஆல் பெருக்கப்பட்டு 10% தொடக்கம் 50% வரையான விசேட விலைக்கழிவுடன் வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**இல.212, 214, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## விடுகதை

1. அவனுக்கு நான்கு கால். ஆனாலும் அவனால் நடக்க முடியாது. அவன் யார்?
2. என்னை உடைத்தால் மட்டுமே உபயோகிக்க முடியும். நான் யார்?
3. வெளிச்சத்துடன் வருவான். இருட்டில் வர மாட்டான். அவன் யார்?
4. சுற்றுவது தெரியாது; ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான். அவன் யார்?
5. எனக்கு கால்கள் இல்லை. ஆனாலும் ஓடுவேன். நான் யார்?
6. நீண்ட வால் குதிரை. தாவத் தாவக் குறையுது அதன் வாலின் நீளம் அது என்ன?
7. ஒரு வார்த்தை. அதை நீங்கள் சரியாகப் படித்தால் தவறாகிவிடும். அதென்ன?
8. சிறகில்லை, ஆனாலும் வானில் பறப்பேன். கண்ணில்லை ஆனாலும் அழுவேன். நான் அழுதால் பிறர் சிரிப்பர். நான் யார்?
9. என்னைச் சாப்பிடவே மக்கள் வாங்குவர். ஆனால் ஒரு போதும் என்னை உண்பதில்லை. நான் யார்?
10. வானிலிருந்து மண்ணுக்கு மழை இறங்குகையில், நான் சிறகு விரித்து மேலே ஏறுவேன். நான் யார்?

## விடைகள்

1.நாற்காலி
2.முட்டை
3.நிழல்
4.பூமி
5.நதி, கடிகாரம்
6.ஊசியும் நூலும்
7.தவறு
8.மேகம்
9.சாப்பாட்டு தட்டு
10.குடை



## செவிப்புலனுக்கான முழுமையான தீர்வுகள்

" இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்க வைக்கும் கருவிகளைப் பொருத்திப் பரீட்சித்தல் "



நல்லூர் உற்சவ தினத்தை முன்னிட்டு....
இலவச
கண் பரிசோதனை மற்றும் தெரிவு செய்யப்பட்ட மூக்குக்கண்ணாடிகளுக்கு 50% தொடக்கம் 75% வரை விலைக்கழிவும் காது கேள் கருவிகளுக்கு விசேட விலைக்கழிவுகளும் வழங்கப்படும்.




நவீன தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட கேட்க வைக்கும் கருவிகள்.

**J.M.விக்கிரமராச்சி அன் கம்பனி**
No.178, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
**021 221 9288 / 021 222 8109**

## தொழில் முனைவாளர் ஆக அரிய வாய்ப்பு

கனேடிய தன்னார்வ நிறுவனத்தினால் (IENESL) வடக்கில் தொழில் முனைவாளர்களை ஊக்குவிக்கும் முகமாக (Social Enterprise Lanka) உடன் இணைந்து 10 வாரங்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. திறமை மிக்கவர்கள் 40 இலட்சம் வரை முதலீட்டினை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் உள்ளது.

இடம் : **NCIT Business Incubation Center, 121/1 Power house Road, Jaffna.**

காலம் : 17.08.2019

நேரம் : சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

**தொடர்புகளுக்கு :**
**துவாரகா கிருஷ்ணமூர்த்தி**
**ienesl.incubationprogram@gmail.com**
**+ 94 774 083570**

(CS 27099) (14)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 . 06 . 1944



இறப்பு 21 . 07 . 2012

**அமரர் நாகலிங்கம் தியாகராசா**

திதி:- திருதியை (03.08.2019)

உயிருக்கு உயிராக இருந்து எமைக்காத்த எமது அப்பாவே!
ஏழு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா...
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்,
தி.வைகுந்தவாசன்

சைவப்பாடசாலை லேன்,
கோண்டாவில் மேற்கு.

(CS/27092)(11)

## மரண அறிவித்தல்

மலர்வு 27 . 05 . 1951



உதிர்வு 31 . 07 . 2019

**சிவத்திரு நடராஜா தனபாலசிங்கம்**

**(பிரபல வர்த்தகரும் , முன்னாள் வவுனியா நகரசபை உறுப்பினரும், வவுனியா கோவில் குளம் சிவ ஆலய அன்னதானசபை தலைவரும், பரிபாலன சபை நிர்வாக உறுப்பினரும்)**

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் இல 2 வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவத்தொண்டர் நடராஜா தனபாலசிங்கம் கடந்த (31.07.2019) புதன்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இரத்தினாவதியின் பாசமிகு கணவரும் கிரிஜா, அருணன், கேசாந்தினி, கேதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரலிங்கம் காலஞ்சென்றவர்களான சந்திரபாலன், சாந்தலிங்கம் யோகம்மா, செல்வரத்தினம், நாகேஸ்வரி, இரவிச்சந்திரன், சந்திரவதனி ஆகியோரின் அருமைச்சகோதரனும் பாலச்சந்திரன், ரூபி, சிவகரன், சுதர்சினி, ஆகியோரின் அன்பு மாம்னாரும் பாமிஷா, ஹரிணி, சங்கவி, பாவனா, யாதவி, கயல் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் காலஞ்சென்றவர்களானசொக்கலிங்கம், பத்மநாதன், மகாலிங்கம், தம்பிராஜா, பற்குணன் மற்றும் இலட்சுமணன், சிவலிங்கம், ஜெயலட்சுமி, சுந்தரகாந்தி, சக்திவேல், திருவருட்செல்வி, ஜெயரூபசிங்கம், சிவநிதி, நகுலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 04.08.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டு இறம்பைக்குளம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**மகன் த. அருணன் 077 856 4831**

CS 27110/15

## மரண அறிவித்தல்

**திருமதி யோகேஸ்வரி சண்முகநாதன்**



புத்தூர்வீதி, மீசாலைவடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சண்முகநாதன் நேற்று (02.08.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்ரா் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர்) பதஞ்சலி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் (இளைப்பாறிய உள்ளகக்கணக்காய்வாளர்) அன்பு மனைவியும் கலைமகள் (ஆசிரியர், இயக்கச்சி அ.த.க பாடசாலை), தர்மாவரதன் (உரிமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம் மருதனார் மடம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியர்), சண்முகலிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), இராஜேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியர்), இராமலிங்கம், குமாரலிங்கம் (இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், கண்ணதாஸ் (இ.போ.ச.யாழ் சாலை), சுஜாதா ஆகியோரின் அன்பு மாமியாரும், கனிகா, கஜாத்மிகா, சசிகேஷ், ரிஷீபன், யஸ்விகா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.08.2019) வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

CS 27110/15

## ஆலமரம்

ஆல மரமாம் ஆலமரம்
அருமையான ஆலமரம்
காலம் காலமாய் நிழல்தந்து
காத்து வந்திடும் ஆலமரம்!

கூடு கட்ட பறவைகள்
கூடி அங்கே சென்றிடுமாம்
நாடி நாமும் செல்லலாம்
நல்ல காற்று பெற்றிடலாம்!

சிறிய விதையிலிருந்து
சிறப்பாய் பெரிதாய் வளர்ந்துமே
பெரிய படையும் தங்கிட
படர்ந்த நிழலைத் தந்திடுமே!

தளர்ச்சி மரத்தில் தோன்றினால்
தாமாய் விழுதுகள் இறங்கியே
வளர்ச்சி காக்கும் ஆலமரம்
வீழ்ச்சி காணா ஆலமரம்!

ஆல விழுதைப் போலவே
அன்னை தந்தை தளர்ச்சி கண்டு
நாளும் நாமும் காத்திடுவோம்
நல்ல பாடம் கற்றிடுவோம்!

## கார் விற்பனைக்கு

Maruti Suzuki 800A/C, Dark Blue.NP KI xxxx
தொடரிலக்கம். 2010உற்பத்தி இரண்டாவது உரிமையாளர். சிறந்த நிலையில்
தொடர்பு:- 077 424 2327, 077 046 6755

## வாடகைக்கு

சுப்பர் ஏசி. சேல்ஸ் வாகனம் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 077 921 3835

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். கந்தர்மடம் பலாலி வீதியில் மேல் வீட்டின் கீழ்ப்பகுதி வாடகைக்கு உண்டு. குடும்பம்/ அலுவலகம் விரும்பத்தக்கது.
077 253 0865

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை துரையப்பா வீதியில் யூனியன் கல்லூரிக்கு மிக அண்மையில் காணி உடனடி விற்பனைக்கு உண்டு.
சனி, ஞாயிறு காலை 10.00 மணியிலிருந்து 4.00 மணிவரை பார்வையிடலாம்.
விலை பேசித்தீர்மானிக்கலாம்.
C12866 (16/17)
தொடர்பு:- 076 903 2933

# Walk in Interview for Accounts Assistant

**We are an Industrial Chamber and we are seeking for a dynamic, enthusiastic and dedicated *female/male* individual to strengthen our team as an Accounts Assistant (immediate vacancy).**

**The ideal candidate should fulfil following prerequisites**

- Have completed accounts in Advanced Level or diploma or degree.
- Minimum two years of working experience in similar category.
- Should be able to work with minimum supervision.
- Having computer literacy.
- Individuals reside close to Jaffna are preferred.
- Communication skill with English knowledge is preferred.
- Keeping records and prepare relevant reports in English are essential.

The selected candidate will be offered an attractive remuneration package based on experience and qualifications.

If you feel you are the right candidate, please forward your resume mentioning the post applied for in the subject line **on or before 5th of August 2019** to **jaffnacciy@gmail.com** or you can directly attend the **interview on 6th of August 2019 from 11:00am to 1:00pm and 2:30pm to 5:00pm**

(C/10836)(11)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். கடைகள் வாடகைக்கு வழங்குதல் - 2019

மானிப்பாய் புதிய சந்தை கடைத் தொகுதியில் சபையால் அமைக்கப்பட்டுள்ள கடைகள் கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 2019.08.05 முதல் 2019.08.26 பிற்பகல் 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி- 2019.08.27 பிற்பகல் 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி - 2019.08.27 பிற்பகல் 2.30 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் - வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்க கூடியது) | கேள்வி படிவ கட்டணம் |
|---|---|---|---|
| 01G | 750,000.00 | 7,500.00 | 1,000.00 |
| 02G | 750,000.00 | 7,500.00 | 1,000.00 |
| 03G | 750,000.00 | 7,500.00 | 1,000.00 |

**நிபந்தனைகள் :**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி, கடித உறையில் இட்டு "தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக்குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.
04. மாதாந்த கடை வாடகையாக பிரதேசசபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும் என்பதுடன் குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் 10% தண்டப்பணமும் மேலதிகமாக அறவிடப்படும்.
05. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையை பிரதேச சபையால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டு பிரதேசசபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
06. சித்திகர குத்தகைகாரர் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
08. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
09. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.தொடர்புகளுக்கு 0212255381 / 0212256646

**திரு அ. ஜெபநேசன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய்.**

(IN 10822) (14)

## வேலையாள்கள் தேவை

**கட்டட வேலைக்கான உப ஒப்பந்தகாரர்கள் (சப் கொன்றாக்ரேஸ்) தேவை.**

**மேசன் - (சம்பளம் ரூபா 1500.00)**
**லேபர் - (சம்பளம் ரூபா 1200.00)**
**வெல்டர் - (சம்பளம் ரூபா 1500.00)**

தொடர்புக்கு :- 076 310 1597
(திங்கள் முதல் சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)

## நல்லை குமரன் தையல் பயிலும் இடம்

- திறமை வாய்ந்த ஆசிரியர் மூலம் கற்பிக்கப்படுகிறது.
- வகுப்பு நடைபெறும் நாள் சனி, ஞாயிறு
- உங்களுக்கு விரும்பி பகுதிகள் பயிலமுடியும்

(எங்களிடம் தையல் இயந்திரங்களும் விற்பனைக்குண்டு)

14A, அம்மன் வீதி (தம்ரேக்கு அருகாமையில்)

தொடர்புகளுக்கு:- 077 398 2264

CS 27106 (16/17)



பொன்னாலை

## ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் ஆவணி மகோற்சவம் - 2019

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - | 08.08.2019 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி |
| வரலட்சுமி விரதம் | - | 09.08.2019 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் வரலட்சுமி பூசையும், நூல் வழங்கலும் |
| தேர் உற்சவம் | - | 24.08.2019 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை |
| தீர்த்த உற்சவம் | - | 25.08.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு திருவடி நிலை புறப்படுதல் |


குறிப்பு :

- வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் பக்தர்களுக்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மகோற்சவ கடைகளுக்கான பதிவுகளை 08.08.2019 இல் இருந்து பரிபாலன சபை விசேட காரியாலயத்தில் மேற்கொள்ளலாம்.

**- தேவஸ்தான பரிபாலனசபை -**

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 10 . 1961



இறப்பு 30 . 07 . 2019

## கந்தசாமி சந்திரகுமார்

யாழ் கச்சேரியடியினை பிறப்பிடமாகவும் கைதடியை தற்காலிக வதிவிடமாகவும் ஜேர்மனியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி சந்திரகுமார் 30.07.2019 செவ்வாய்க் கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் வளர்ப்பு மகனும் காலஞ்சென்றவர்களான மரியநாயகம் - சந்தானம் தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தியின் பாசமிகு கணவரும் அனுசா, மயூரன், தினேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் இளந்திரையனின் (ராஜன்) அன்பு மாமனாரும் சங்கீதன், சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 - பி.ப 6.00 வரை St.Remigius Kiriche, Krichstra Be 45, 50126 Bergheium, Germany என்ற முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 27101)(14.17)

**தகவல் : குடும்பத்தினர்.**

**தீபன் (கைதடி) - 077 361 5560**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கமலர் இராஜகஸ்தூரி



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியை வதிவிடமாகவும், லண்டனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமலர் இராஜகஸ்தூரி கடந்த 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சோமசுந்தரம்தம்பதிகளின் அன்புமகளும், திரு.திருமதி சுப்பையா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராஜகஸ்தூரியின் அன்பு மனைவியும், சின்னத்துரை குகேந்திரன் அவர்களின் பிரியமுள்ள மாமியாரும், சித்திரா, சுபத்திரா, சுசித்திரா, யசோதரா, சிவபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கரத்தினம், தனலட்சுமி, சுந்தரலிங்கம், யோகாம்பிகை, காலஞ்சென்ற சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரகுமார், தனபாலசிங்கம், சுதர்சன், குமரன், நிர்மலா, உதயா ஆகியோரின் அருமை மாமியாரும், சிவசண்முகி, சுவாதிகா, கோபிசங்கர், திவாணி, சுபாங்கி, துளசிகா, சங்கவி, சாம்பவி, சயந்தவி, அபிஷயன், அக்ஷயன், அஸ்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2019) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/27082)(11)

**தகவல்: குடும்பத்தினர்.**

**சிவா (மகன்) +4478 288 20591**

## செல்லையா இராமலிங்கம்



பிறப்பு 04.03.1943 இறப்பு 02.08.2019

மணல் வீதி, புலோலி மேற்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராமலிங்கம் நேற்று (02.08.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் சறோஜினி, ஈஸ்வரன் (சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.), அச்சுதன் (போமன், இலங்கை போக்குவரத்துச்சபை.பருத்தித்துறை), கிரிகரன் (கணக்காய்வு பரீட்சகர் -தேசிய கணக்காய்வு உபஅலுவலகம், முல்லைத்தீவு), ரவிதரன் (பொறியியலாளர்- சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரங்கநாதன் (மகாமாரி ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை), மதிவதனி (முகாமைத்துவ உதவியாளர்- மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை), குமுதா, தர்சினி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், பொன்னம்பலம், அருளம்பலம் மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, தர்மேஸ்வரி, ராஜேஸ்வரி காலஞ்சென்ற பரமானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனோஜினி, அக் ஷயன்,நிதுஷன், தனுஷாந், கரிஸ், தகிஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



## திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை

சரசாலை தெற்கு சாவகச்சேரி மெய்கண்டான் வீதியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை கடந்த (31.07.2019)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செவ்வந்திராசா, இன்பமலர் மற்றும் செவ்வந்திமலர், சுகுமார், பானுமதி ஆகியோரின் தாயாரும் இந்திராதேவி, இரவீந்திரா, கமலராணி, அன்ரனி தேவராஜ் ஆகியோரின் மாமியாரும் சுஜித்தா, சிவோதயன், மகிழன், குணாளன், வைஸ்ணவி, யாழினி, அனோஜன், அனுசிகா, அங்கஜன், திர்ஷா ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2019) ஞாயிற்றுக் கிழமை மு.ப.09மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.11 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு 077 715 9514**

CS 27105/16

**தகவல்: குடும்பத்தினர்**

## சோதனைச்...

துவதற்காக, யாழ்ப்பாண மாநகர சபையால் பொலிஸ் சோதனைச் சாவடிகள் 3 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. அவை ஆலயத்துக்கு நுழையும் அனைத்துப் பாதைகளிலும் தலா இரண்டு வீதம் வைக்கப்படவுள்ளன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து ஆலயங்களுக்கான பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. நல்லூர் திருவிழாக் காலத்தில் தினந்தோறும் 250 பொலிஸார் கடந்த காலங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த ஆண்டு அது 650 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஆலயத்துக்கு வரும் பக்தர்களை சோதனையின் பின்னரே அனுமதிக்க முடியும் என்று பொலிஸார் வலியுறுத்தியிருந்தனர். இதனால் பக்தர்களுக்கு நெருக்கடி ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும், பொலிஸார் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. இதனையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபை 3 லட்சம் ரூபா செலவில், சோதனைச் சாவடிகளை அமைத்து வழங்கியுள்ளது. இவற்றை யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர், ஆணையாளர் ஆகியோர் நேற்றுப் பார்வையிட்டனர். (ஓ.5,105)

## கருங்குளவிகளின்...

றுக்கு மேற்பட்டோர் மருத்துவமனைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் வேவில் பகுதியில் தாயும் மகளும் நேற்றைய தினம் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இரவுக் கடமையை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய 39 வயது தாய் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த போது அவரது 7 வயதுப் பெண் பிள்ளையும் குளிக்கச் சென்றுள்ளார். அவ்வேளையில் பெரும் இரைச்சலுடன் பறந்து வந்த கருங்குளவிகள் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த தாயையும் மகளையும் மொய்த்துத் தாக்கியுள்ளன.

கூக்குரல் கேட்டு ஓடிவந்த அயலவர்கள் இருவரையும் கருங்குளவிகளிடமிருந்து காப்பாற்றி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் இருவரையும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இராசேந்திரன் தர்சினி, அவரது மகளான இராசேந்திரன் நிறோஜிகா இருவருமே கருங்குளவி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

**மக்கள் அச்சம்**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு சொந்தமான நாகலிங்கப் பூ மரம் டச்சு சாலையுடன் இணைந்த நிலையில் காணப்படுகிறது. வர்த்தக நிலையங்கள் மற்றும் திருமண மண்டபம் ஆகியவை உள்ளிட்ட பகுதியில் உள்ள மரத்தில் குளவிக்கூடு காணப்படுகின்றது. இதன் காரணமாக நகரப் பகுதிக்குள் பிரவேசிப்பவர்கள் அச்சத்துடன் நுழைய வேண்டியுள்ளது.

இந்தக் குளவிகளை தீயிட்டு எரிக்க அந்தப் பகுதியில் செல்லும் மின்வயர்களும் தொலைத் தொடர்பு வயர்களும் இடையூறாகக் காணப்படுகின்றன. (ஓ.5,9)

**கலைப்பீடம்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**முதலாம் வருட மாணவர்களுக்கான அறிவித்தல்**

2017/18 கல்வியாண்டுக்குரிய முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 05.08.2019 அன்று ஆரம்பமாகும். முதலாம் வருட மாணவர்கள் அனைவரும் கைலாசபதி கலையரங்கில் காலை 8.30 மணிக்கு ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (in 10837) (13)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.08.2019 | வெற்றி வாரம் 2574 | வர்ணம் கருநீலம்
தனுசு
வெற்றி இலக்கங்கள் 02 08 38 43
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3.464.276/=
ரூ.500 பரிசுக்காக 1298
ரூ.100 பரிசுக்காக 293
டபள் சான்ஸ் விசேட இல.
03.08.2019 ம் திகதி சனிக் கிழமை இளநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1015
சீட்டிழுப்பு திகதி 2019.08.01 வியாழக்கிழமை
Y 16 34 53 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,742,084/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 688
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.08.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 75,884,140/-
வெற்றி இலக்கங்கள் 12 16 36 65 X
விசேட வெற்றி இல. 3448
அபிவிருத்தி லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 267
சீட்டிழுப்பு திகதி 02.08.2019 சிகப்பு
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கங்கள் 24 26 70 | விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 41,927, 664/=
07.08.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## சேது கைது

யாழ்ப்பாணம், ஓக. 3

நோர்வேயிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த, சேது கைது செய்யப்பட்டுள்ளார். நெல்லியடியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவருக்கு நெருக்கமாக இவர் செயற்பட்டு வருகின்றார். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் குறித்த பிரமுகருக்காக தேர்தல் பரப்புரைப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். கிளிநொச்சி நீதிமன்றத்தில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட வழக்கிலேயே, சேது கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சேதுவை விடுவிப்பதற்கு, மேற்படி பிரமுகர் பல தரப்புக்கள் ஊடாகவும் நேற்றிரவு முயற்சித்ததாகத் தெரியவருகின்றது. அவரது நெருங்கிய உறவினரின் நிகழ்வு ஒன்றுக்காகவே அவர் யாழ்ப்பாணம் வந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5,26)

## உவமைத் தொடர்களும் அதன் பொருளும்

1. உயிரும் உடலும் போல - *பிரியாநட்பு*
2. ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்போல - *ஒற்றுமை*
3. கீரியும் பாம்பும் போல - *தீராப்பகை*
4. சிலையில் எழுத்துப் போல - *அழியாமை*
5. செவிடன் காதில் ஊதிய சங்கு போல - *பயனின்மை*
6. கிணறு வெட்டப் பூதம் வந்தது போல - *ஏமாற்றம்*
7. சுழற் காற்றில் அகப்பட்ட கரும்பு போல - *துன்பம் போராட்டம்*
8. தாரகை நடுவே தண்மதி போல - *தலைமைச் சிறப்பு*
9. ஓருயிரும் ஈருடலும் போல - *இருவரின் ஒருமைத் தன்மை*
10. உள்ளங்கை நெல்லிக்கனி போல - *தெளிவாக விளங்குதல்*

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஏலி ஏலி லாமா செபக்தானி...?

'ஏலி ஏலி லாமா செபக்தானி?' என்ற இயேசுக் கிறிஸ்துவின்வார்த்தையைத்தான்ஈழத்தமிழர்கள் பரிசுத்த உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை நோக்கி உதிர்க்க வேண்டியவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும்அரசதலைவர்தேர்தலுக்கு முன்னர்பலதரப்புக்களையும் உள்ளடக்கிய முழுமையான அதிகாரங்களைக் கொண்ட ஆணைக்குழு உருவாக்கப்பட்டு, உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதல்கள் தொடர்பானவிசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தேர்தலுக்கு முன்னர்உண்மைகள்கண்டறியப்படாவிட்டால்தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளரையும் சந்திக்க மாட்டேன் இவ்வாறு தெரிவித்துள்ளார் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. பொரளையில் உள்ள பேராயர் இல்லத்தில்புதனன்று இடம்பெற்ற செய்தியாளர்சந்திப்பிலேயே அழுத்தம்திருத்தமாக இவ்வாறுதனதுநிலைப்பாட்டை எடுத்தியம்பியுள்ளார் அவர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் உண்மைகள் அறியப்பட வேண்டும் என்கின்ற கர்தினாலின் நிலைப்பாடுபாராட்டப்பட வேண்டியதொன்று. அதில்மாற்றுக் கருத்துகளுக்கோ இரண்டாம் தெரிவுக்கோ இடமேயில்லை. இலங்கைத் திருச்சபையின் தலைவர் என்ற ரீதியில்தன்னால்இயன்றஅழுத்தத்தைகர்தினால்கடந்த மூன்றுமாதங்களாகமுழுமையாகவழங்கிவருகின்றார். இலங்கையில்மட்டுமல்லாதுவெளிநாடுகளிலும்செய்தியாளர் சந்திப்புக்களை நடத்தி உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களுக்கு நியாயம் கேட்கின்றார் அவர். அந்த வகையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் பாராட்டப்பட வேண்டியவர். ஆனால் அவர் 'சிங்களவர்கள்' என்ற போர்வைக்குள்நின்றுதான்இவை அனைத்தையும்செய்கின்றாரோஎன்றஎண்ணவோட்டமும்மனதில்எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

2009ஆம் ஆண்டு ராஜபக்ச அரசு வன்னிப் பெருநிலப் பரப்பில்மிகப்பெரும் மனிதப் படுகொலையை நிகழ்த்தியது. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் அதில் உயிரிழந்தனர். அவர்களில் கத்தோலிக்கர்களும் பலர். இதே கர்தினால் அன்று மக்கள் தலைவராகவும் மௌனித்தே இருந்தார். மதத்தலைவராகவும்மௌனித்தேஇருந்தார். ராஜபக்ச அரசைக் கண்டித்து எந்த அறிக்கையும் அவர் வெளியிடவில்லை. ஆகமொத்தத்தில்உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்த சுமார் 250 பேர் விடயத்தில்காட்டும்எந்தநகர்வையும்அவர்பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட இறுதிப்போரின்போதோ இனப்படுகொலையின் போதோ வெளிப்படுத்தவில்லை. இறுதிப்போரில் இடம்பெற்றபோர்க்குற்றங்கள்தொடர்பில்பொறுப்புக் கூறுமாறு இலங்கை அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபை இன்று வரையில் அழுத்தம் கொடுத்தும் அவகாசம் வழங்கியும்வருகின்றநிலையில்இதுகாலும்கர்தினால் வாய்திறவாதிருப்பது ஒன்றும் இரகசியம் இல்லை.

கர்தினாலின் இந்த நகர்வு இரண்டு சந்தேகங்களை மனதில் பலமாக எழுப்புகின்றது. ஒன்று, அவர் ராஜபக்ச அரசின் கைக்கூலியாக இருக்கின்றாரோ என்பது. மற்றொன்று, ஒரு கத்தோலிக்கத் தலைவர் என்பதைவிட மக்கள்தலைவர்என்பதைவிட ஓர்சிங்களவர்என்கின்ற இனவாதப்போக்குகர்தினாலிடத்தில் இருக்கலாம்என்பது.

'ஏலி ஏலி லாமா செபக்தானி?' இதற்கு 'என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று அர்த்தமாம்... இயேசுக் கிறிஸ்து உயிர்துறக்கும்போது தனது தந்தையை நோக்கிக்கேட்ட இதே கேள்வியைத்தான் தற்போது ஈழத்தமிழர்கள்கர்தினாலை நோக்கிக்கேட்க வேண்டியிருக்கிறது.

# பதவிகளைப் பெறுவதற்காக மாற்று அணியின் உதயம்

இந்துமதி

கூட்டமைப்புக்கு மாற்றீடான மாற்று அணியொன்றை உருவாக்குவதன் அவசியம் தொடர்பாக சி.வி.விக்னேஸ்வரன் பிரஸ்தாபித்துள்ளார்.

சமீப காலமாக கூட்டமைப்பை மிகக் கடுமையாகவும் தரக் குறைவாகவும் விமர்சிப்பதை அவர் தீவிரப்படுத்தியுள்ளார். முன்னர் கூட்டமைப்பினர் அரசுக்கு மாமா வேலை பார்ப்பதாகக் கூறிய அவர் தற்போது அரச ஒத்தோடிகளாகக் கூட்டமைப்பு மாறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டுகின்றார். இந்த நிலையில்தான் மாற்று அணி தொடர்பான அவரது ஆலோசனை வெளியாகியுள்ளது.

விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்கு எதிராகப் புதிய கட்சியொன்றை அமைத்து, மாதங்கள் சில கடந்துவிட்டன. கூட்டமைப்பிலிருந்து விலகிய சிலர் அந்தக் கட்சியின் முக்கிய பொறுப்புக்களில் அமர்ந்துள்ளனர். ஆனால் அந்தக் கட்சியின் செயற்பாடுகள் நத்தை வேகத்திலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றன. விக்னேஸ்வரனே அதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அரசியலுக்குப் புதியவரான அவர் இப்போதாவது ஒரு கட்சியை ஆரம்பித்து, அதை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதில் உள்ள சிரமங்களைப் புரிந்துகொண்டிருப்பார்.

### விக்கி மகிழ்ச்சி

தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் விடிவுக்காகப் பணியாற்றக்கூடிய ஒரு அமைப்பாகவே உருவாக்கப்பட்டதாகவும், அரசியல் கலப்பு அதில் இருக்காதெனவும் ஆரம்பத்தில் கூறப்பட்டது. இதற்கு ஏற்றாற்போன்று பல்துறைசார் பிரமுகர்கள் இதில் அங்கம் வகித்தனர். விக்னேஸ்வரன் பேரவையின் இணைத்தலைவர் பொறுப்பிலும் அமர்ந்து கொண்டார். அப்போது கூட்டமைப்பில் அங்கம் வகித்த சில கட்சிகளும் பேரவையில் அங்கம் வகித்தன. ஆனால் இலங்கைத் தமிழரசுக்கட்சி அதில் இணைந்துகொள்ளவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றபோது பேரவையின் உண்மையான நோக்கம் வெளியானது. கூட்டமைப்புக்கு எதிரான செயற்பாடுகளை அங்கு காண முடிந்தது. விக்னேஸ்வரனும் முன்னணியுடன் கள்ளத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். தேர்தல் முடிவுகள் வெளியானபோது கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது. இதனால் அதிக மகிழ்ச்சி அடைந்தவரும் விக்னேஸ்வரன்தான். அதை வெளிப்படையாகவே அவர் காட்டிக்கொண்டார்.

### மாற்று அணி முயற்சி

தமிழ் மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெறுவதையும், மக்களின் ஆதரவு அதற்குப்போதியளவு கிடைக்காததையும் அவதானித்த விக்னேஸ்வரனின் மனதில் புதியதொரு சிந்தனை உருவானது. இதன் விளைவாகத் தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிப்பவர்களைத் தமது கட்சியில் உறுப்பினர்களாக இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். பேரவை ஒரு அரசியல் கலப்பில்லாத அமைப்பு எனக் கூறப்பட்ட நிலையில் அதன் இணைத்தலைவரே அதை மீறிச் செயற்பட்டமை நகைப்புக்குரியது. இன்றும் பேரவையின் பின்னால் ஒளிந்து நின்றுகொண்டு அவர் அரசியல் செய்வதை அவதானிக்க முடிகின்றது. அவர் ஒரு நேர்மையான அரசியல்வாதியாக இருந்தால் தனது கட்சியின் சார்பில் அனைத்து அரசியல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்க வேண்டும். அதன் சார்பிலேயே மாற்று அணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்க வேண்டும்.

### பதவிக்கு ஆசை

வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் விக்னேஸ்வரனின் இரட்டை வேடத்தை நன்கு அறிவார்கள். தாம் போர் அவலங்களை எதிர்கொண்டபோது அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும்.

தமது பதவி ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்காக விக்னேஸ்வரன் வேடங்களை புனைவதும் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே அவர்களை ஏமாற்றுவதற்கு இவரால் ஒருபோதுமே முடியாது.

மேலும் கஜேந்திரகுமாருடன் இணைந்து செயற்பட முடியாமல் தவித்துவரும் விக்னேஸ்வரன் யாரை அரவணைத்துக்கொண்டு மாற்று அணியை உருவாக்கப்போகிறார்? ஒதுங்குவதற்கு இடமில்லாமல் தவிர்ப்பவர்கள் இவருடன் இணைவர்களேயொழிய பலமான நிலையில் உள்ளவர்கள் இவர் பக்கம் திரும்பிக் கூடப்பார்க்க மாட்டார்கள்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காமல் அவல வாழ்வு வாழ்கின்றனர். தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அவர்களின் அவல நிலை தொடர்பாகச் சிறிதும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.



**விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறைகொண்டவராக இருந்தால், எதிர்காலத்தில் பதவி எதையும் ஏற்காமல் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கு முன்வர வேண்டும்.**

### போரின் பின்னரான நிலமை

புலிகளை ஒழித்ததன் பின்னர், தமிழ் மக்கள் இழிவாக நோக்குகின்றதொரு எண்ணப்பாடும் தென்னிலங்கையில் உருவாகிவிட்டது. இன்னுமொரு ஆயுதப்போரை நடத்தித் தமது உரிமைகளைத் தட்டிக்கேட்கின்ற நிலையில் தமிழர்களும் இல்லை. தமிழர் பக்கம் மிகவும் பலவீனமாக உள்ளதை நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் பெரும் அச்சுறுத்தலாகவேகாணப்படுகின்றது. இந்தச்சட்டத்தின் கீழ் எவரையும் கைதுசெய்து உள்ளே வைக்க முடியும். ஆகவே தேவையற்ற விடயங்களில் இறங்கி தமிழர்களைப் பிரச்சினைக்குள் மாட்டிவிடுவதற்கு நினைப்பது நல்லதல்ல.

கூட்டமைப்பு தன்னால் இயன்றளவு மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே செய்தது. ஆனால் தென்னிலங்கையின் அரசியல் சூழ்நிலை காரணமாக எதையுமே முழுமையாகச் சாதிக்க முடியவில்லை.

விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறைகொண்டவராக இருந்தால், எதிர்காலத்தில் பதவி எதையும் ஏற்காமல் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கு முன்வர வேண்டும். இதைவிடுத்து உள் மனதில் பதவிச் சுகத்தை வைத்துக்கொண்டு மக்களுக்காகப் போராடுவதாகக் கூறுவதுவெறும் ஏமாற்று வித்தையே தவிர வேறொன்றுமல்ல.

பதவியை மனதில் வைத்துக்கொண்டு பேரணி நடத்துவதும் ஆக்ரோசமாகப் பேசுவதும் மாற்று அணி தொடர்பாகக் கருத்து வெளியிடுவதும் வெறும்ஏமாற்று வேலைகள் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

முல்லைத்தீவில் 3 இடங்களில் விபத்துக்கள்

## 3 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்ப்பு

முல்லைத்தீவு, ஓக. 3

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, முள்ளியவளை பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்த 4பேரில், 3பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முள்ளியவளை பூதன்வயல் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 7 வயதுச் சிறுமி படுகாயமடைந்துள்ளார். வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி மீது உந்துருளி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரால் விரட்டப்பட்டு வந்த நபர் ஒருவரே, சிறுமி மீது மோதியதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். உந்துருளியில் பயணித்தவர் சிறுமியை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளார். அவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். காயமடைந்த பிரதீபன் திசாயினி, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு, உந்துருளியும் சிறிய ரக கன்டர் வாகனமும் மோதிக்கொண்டதில் உந்துருளியில் பயணித்த இரண்டு இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர். தேவிபுரம் ஆ பகுதியைச் சேர்ந்த புஸ்பராசா கவியரசன் (வயது-19) ஆபத்தான நிலமையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இரணைப்பாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு உந்துருளிகள் மோதிக் கொண்டதில், வயோதிபர் ஒருவர் காயமடைந்தார். முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். (ஓ.5,ரி3)

## பூஜித், ஹேமசிறிக்கு எதிரான மீளாய்வு மனு நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 3

கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. இருவரையும் பிணையில் விடுவித்தமைக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான தகவல்கள் முன்னதாக கிடைத்தும் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டமையை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று சட்டமா அதிபரால் இந்த மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

# கோத்தாவுக்கு புதிய கடவுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது

**கொழும்பு, ஓக. 3**


**முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு மே 7 ஆம் திகதி புதிய கடவுச்சீட்டு வழங்கப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ரத்நாயக்க தெரிவித்தார்.**

எனினும், கடவுச்சீட்டு வழங்குவது என்பது, ஒருவர் தனது இரட்டைக் குடியுரிமையை கைவிட்டுள்ளார் அல்லது கைவிடவில்லை என்று அர்த்தமல்ல என்றும் அவர் கூறினார்.

**ஆவணம்**

கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்கக் குடியுரிமை இல்லாமல் செய்யப்பட்டது தொடர்பான சான்றிதழ் என்று மற்றொரு ஆவணம் ஊடகங்களில் கசிய விடப்பட்டுள்ளது. கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்கக் குடியுரிமை இல்லாமற் செய்யப்பட்டு அளிக்கப்பட்ட சான்றிதழ் என்று ஒரு ஆவணத்தை மௌபிம சிங்கள இதழ், வெளியிட்டுள்ளது.

முன்னதாக, கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்கக் குடியுரிமை இல்லாமற் செய்யப்பட்ட சான்றிதழ் என்று மோசடி ஆவணம் ஒன்று உலாவ விடப்பட்டது. அது போலியானது எனக் கூறியிருந்த கோத்தபாய ராஜபக்ச, தன்னிடம் உண்மையான ஆவணம் இருப்பதாகவும் அதனைப் பகிரங்கமாக ஊடகங்களுக்கு வெளியிடப் போவதில்லை என்றும் கூறியிருந்தார். தேர்தல் ஆணையம் கேட்டால் மாத்திரமே அந்த ஆவணத்தை சமர்ப்பிப்பேன் என்று அவர் கூறியிருந்த நிலையில், அவரது உண்மையான அமெரிக்க குடியுரிமை நீக்க ஆவணம் என்று மற்றொரு ஆவணம் உலாவ விடப்பட்டுள்ளது. எனினும், இது உண்மையான ஆவணமா என்பதை கோத்தபாய ராஜபக்ச இன்னமும் உறுதி செய்யவில்லை. (ஓ.5)



U.S. Department of State

BUREAU OF CONSULAR AFFAIRS

CERTIFICATE OF LOSS OF NATIONALITY OF THE UNITED STATES

This form is prescribed by the Secretary of State pursuant to Section 501 of the Act of October 14, 1940 (54 Stat. 1171) and Section 358 of the Act of June 27, 1952 (66 Stat. 272).

DEPARTMENT USE ONLY
CERTIFICATE OF LOSS OF NATIONALITY
APPROVED 03rd May 2019 (Date)
Overseas Citizens Services
DEPARTMENT OF STATE
By CA/OCS/ACS/NESCA

1. Embassy/Consulate Embassy of the United States of America
2. at Colombo, Sri Lanka ss:
3. I, Phillip J VanHorn (Name)
hereby certify that, to the best of my knowledge and belief,
4. Nandasena Gotabaya Rajapaksa (Name)
5. was born at Matara (Town or City) Southern Province (Province or County)
6. Sri Lanka (State or Country), on 06-20-1949 (Date (mm-dd-yyyy))
7. That he/she resided/never resided* in the United States (Dates) 2003-2019;
8. That he/she resides at 1341, Wickham CT, San Dimas, CA,91773;
9. That he/she acquired the nationality of the United States by virtue of Naturalization 01-31-2003;
10. That he/she acquired the nationality of Sri Lanka by virtue of
11. Birth
12. That he/she (The action causing expatriation should be set forth succinctly.) Voluntarily renounced nationality of United States
13. That said expatriating act was performed voluntarily with the intent to relinquish United States citizenship;
14. That he/she thereby expatriated his self on (Date) 04-17-2019 (mm-dd-yyyy) under the provisions of
15. Section 349(a)(5) of The Nationality Act of 1940; The Immigration and Nationality Act of 1952, as amended.*
16. That the evidence of such action consists of the following: see below
17. That attached to and made a part of this certificate are the following documents or copies thereof: DS-4081 Statement of Understanding ; DS-4080 Oath of Renunciation; Certification of Naturalization
18. In testimony whereof, I have hereunto subscribed by name and affixed my office seal this 17th day of April (Month) 2019 (Year)

[SEAL]

Signature

Chief of the Consular Section (Title)

* Strikeout inapplicable iter

DS-4083 (Formerly FS-348)
05-2016

Page 1 of 2

## ஸஹ்ரானுடன் பயிற்சி சந்தேகத்தில் இருவர் கைது

கொழும்பு, ஓக. 3

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று பொலிஸாரால் கூறப்படும் ஸஹ்ரானுடன் பயிற்சி பெற்றவர்கள் என்ற சந்தேகத்தில் நேற்றைய தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பிபிலை பொலிஸாரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸஹ்ரானுடன் சந்தேகநபர்கள் இருவரும் அம்பாந்தோட்டையில் பயிற்சிகளைப் பெற்றுள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகள் ஊடாகத் தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ஓ.5)

# இந்தியாவில் உள்ள ஏதிலிகளை அழைப்பதற்கு மேலதிக ஏற்பாடு

*புலம்பெயர் அமைப்பின் தலைவருடனான சந்திப்பில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 3

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் வாழும் இலங்கை ஏதிலிகளை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.



பன்னாட்டு புலம்பெயர்ந்தோர் அமைப்பின், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தலைவர் சரத் டாஷ் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் வாழும் இலங்கை ஏதிலிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. இவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியாவில் அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்காக 6.5 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்கள் தமது அமைப்பிடம் உள்ளது என்றும் இதனை முன்னெடுக்கும்போது எதிர்பாராத தாமதங்கள் ஏற்படுவதால் அகதிகளை அழைத்து வருவதில் தாமதங்கள் தொடர்ந்தும் நிலவுவதாகவும் தெரிவித்த சரத் டோஷ், இதற்கு உதவுமாறு ஆளுநரைக் கேட்டுக்கொண்டார். இதுதொடர்பில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுடனும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவிபுரிவதாகவும் ஆளுநர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஏதிலிகளாக இந்தியாவில் இருக்கும் இலங்கை ஏதிலிகள் மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்புவதற்கு உரிமையைக் கொண்டுள்ளனர். அவர்கள் மீண்டும் இலங்கை திரும்பும்போது அவர்களுக்குத் தேவையான வசதிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படும் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்த ஆளுநர், அவர்கள் இலங்கையில் மீண்டும் ஏதிலிகளாக வாழ ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் தெரிவித்தார். இந்தியாவிலுள்ள ஈழ ஏதிலிகளை இலங்கை அரசு கட்டம் கட்டமாகவே அழைத்துவருகின்றது. (த-7)

## உந்துருளி – ஈருருளி விபத்து: இருவர் காயம்

வவுனியா, ஓக. 3

வவுனியா, ஓமந்தை ஏ-9 வீதியில் நேற்று மாலை உந்துருளி மற்றும் ஈருருளி என்பன மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த உந்துருளி ஓமந்தை, கள்ளிக்குளம் சந்திக்கு அண்மையில் வீதியைக் கடக்க முற்பட்ட ஈருருளியுடன் மோதி விபத்துக்குள்ளானது. ஈருருளியில் பயணித்த நொச்சிமோட்டையைச் சேர்ந்த உருத்திரகுமார் திவாகர் (வயது-14) என்ற இளைஞனும், உந்துருளியைச் செலுத்திய சுப்பிரமணியம் வெங்கடசரணியன் (வயது -35) இருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ.5,ரி4)

## வெடுக்குநாரி மலையில்
# படிக்கட்டுக்களைப் பொருத்த ஒருங்கிணைப்புக் குழு அனுமதி

வவுனியா, ஓக.3

வவுனியா வடக்கு வெடுக்குநாரி மலையிலுள்ள சிவனை வணங்கச் செல்வதற்குப் பக்தர்கள் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். பக்தர்களின் நலன்கருதி ஏற்கனவே இரும்பினால் செய்யப்பட்டுப் பொருத்தப் படாதுள்ள படிக்கட்டை அந்த மலையில் பொருத்துவது என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று முடிவெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. அதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இரும்பினாலான படிக்கட்டுக்களை மலையில் பொருத்துவதற்கு தடைவிதிக்கப்படுகின்றது என்பதை வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் குழுக் கூட்டத்தில் பேசு பொருளாக எடுத்திருந்தார்.

வனவளத்திணைக்களத்தினர் மற்றும் தொல்லியல் திணைக்களத்தினர் குறித்த படிக்கட்டுகளை அமைப்பதற்கு பொலிஸார் மூலமாக தொடர்ந்தும் தடைவிதித்து வருகின்றனர். தற்போது கயிற்றின் உதவியுடனேயே மலை உச்சிக்குச் சென்று வழிபட வேண்டியுள்ளது என்று தெரிவித்தார்.

ஏனைய பகுதிகளில் மலையில் அமர்ந்திருக்கும்புத்தரை தரிசிப்பதுபோலவே இதுவும் உள்ளது. எனவே இதற்கு ஏன் அனுமதி மறுக்கப்படுகின்றது? என்று சிவசக்தி ஆனந்தன் கேள்வியெழுப்பி விசனம் தெரிவித்தார்.

குறித்த படிகள் அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீடு செய்து, இரும்பினால் படிக்கட்டுச் செய்யப்பட்டுள்ளது.

அதனை மலையில் பொருத்துவதற்கு அனுமதிக்கவேண்டும் என்று வவுனியா வடக்கு பிரதேச செயலர் கோரினார்.

இதனையடுத்து குறித்த பகுதியில் படிக்கட்டை அமைப்பதற்கு இந்த ஒருங்கிணைப்புக் குழு தீர்மானிக்கிறது. மாவட்டச் செயலர் இந்த முடிவை உடனடியாக கலாசார அமைச்சருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இது பற்றி கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாசாவைச் சந்தித்துக் கலந்துரையாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், புதிய அரசமைப்புப்போல் இதற்கும் காலம் கடத்தாமல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்தார். (த-110)

## மன்னார் மாவட்டத்தில்
# மணல் விற்பனை இனிமேல் சமாசங்களுக்கே வழங்கப்படும்
### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், ஓக. 3

மணல் விற்பனை அனுமதி இனிமேல் தனி நபர்களுக்கு வழங்கப்படாது. சமாசங்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் என்று மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் இந்த வருடத்துக்குரிய முதலாவது மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இணைத்தலைவர்களான அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் தலைமையிலும் நடைபெற்றது.

மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கும் நோக்கில் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட அருவியாறு, மாந்தைப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாலியாறு பறங்கியாற்றுப் பகுதியில் மணல் அகழ்வுக்கு தனி நபர்களுக்கு வழங்குவதை நிறுத்தி, பொது அமைப்புகளாக உள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் அல்லது சமாசங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தோட்டவெளிப்பகுதியில் மீன் பண்ணை அமைப்பதாகக் கூறி மணல் அகழ்வு செய்து வெளியிடங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். உடனடியாக கனிம வளத் திணைக்களத்தினருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீன் பண்ணை அமைப்பதாகக் கூறி எடுக்கப்படும் மணலைக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குவதை கனிம வளத் திணைக்களம் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். முறையான அனுமதியின்றி வெளியிடங்களுக்கு மணல் கொண்டு செல்பவர்களுக்கு உதவி செய்யாமல் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்துத் தெரிவிக்கையில், ஒரு மாவட்டத்தின் வளங்களை அந்தந்த மாவட்ட மக்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். தேவைக்கு மிஞ்சியவற்றை வெளிமாவட்டங்களுக்கு வழங்கலாம். தனி நபர்கள் இலாபம் பெறுவதை ஏற்க முடியாது என்று தெரிவித்தார்.

மன்னாரில் ஐந்து பேர் தனித்தனி மணல் மாபியாக்களாக உள்ளார்கள். மணல் ஏற்றுவதற்கு எந்தவொரு வாகனமும் இல்லாதவரிடம் அனுமதிப்பத்திரம் உள்ளது. இந்த அனுமதிப்பத்திரத்தில் ஒரு டிப்பர் மணலுக்கு 15 ஆயிரம் வரை பெறுகிறார். எல்லோராலும் மணல் அனுமதி பெற முடிவதில்லை. இப்படிப்பட்ட சிலர் மூலம் மன்னாரில் மணல் மாபியாக் கும்பல் செயற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இவை பற்றிய கருத்து முன்வைப்புக்களுக்குப் பின்னர் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து டிப்பர்களினதும் உரிமையாளர்களை உள்ளடக்கிய சங்கம் ஒன்றை உருவாக்கி ஐந்து பிரதேச செயலர்கள், நான்கு பிரதேச சபைத் தவிசாளர்கள், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர், கனிமவளத் திணைக்களச் செயலர் அனைவரையும் உள்ளடக்கி கலந்துரையாடல் நடத்தவேண்டும்.

இயற்கை வளங்கள் பாதிக்கப்படாமலும், அதிக விலை இல்லாமலும் மணல் முகாமைத்துவம் செய்யும் பணி மன்னார் மாவட்ட மேலதிகசெயலர் சி.குணபாலனிடம் வழங்கப்பட்டுள்ளது. அதிக நாள்கள் எடுக்காமல் இவை செயற்பாட்டுக்கு வர வேண் டும் என்றும் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (த-213)

## மாணவர்களுக்கு சத்துணவு வழங்க நிதி அன்பளிப்பு

கொடிகாமம்,ஓக. 3

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்கு நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு கல்லூரியின் பொன்சபாபதி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் அதிபர் கி.விக்கினராஜா தலைமையில் நடைபெற்றது.

சத்துணவு வழங்குவதற்கான நிதியை சிவன் அறக்கட்டளையினர் வழங்கினர்.

நிகழ்வில் சிவன் அறக்கட்டளை நிறுவுநர் வே. கணேஸ்வரன், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது இரண்டாம் தவணைப் பரீட்சைக்கான தேர்ச்சி அறிக்கைகளும் வழங்கப்பட்டன. (ஐ-159)





# புதிதாக அமைக்கப்பட்ட நடைபாதை கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நடைபாதை மாணவர்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாநகர 24 ஆம் வட்டார உறுப்பினர் க.நித்தியானந்தனின் வட்டார நிதி 3 மில்லியன் ஒதுக்கீட்டில் இந்த நடைபாதை அமைக்கப்பட்டது. குறித்த நடைபாதை மாணவர்களின் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார்.

மேலும் நிதி ஒதுக்கீட்டைச் செய்த மாநகர சபை உறுப்பினர் க.நித்தியானந்தன், மாநகரசபை உறுப்பினர் கிறேசியன் டேமியன் மதத்தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## வவுனியாவில் காணியற்றுள்ள
# 4ஆயிரத்து 900 பேருக்கு காணிகளை வழங்கவும்
### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உத்தரவு

வவுனியா, ஓக. 3

வவுனியா மாவட்டத்தில் காணி இல்லாத 4ஆயிரத்து 900 பேருக்கு விரைவாகக் காணிகளை வழங்குமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானித்துப் பரிந்துரைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது:

இதன்போது மாவட்டத்தில் காணி இல்லாதவர்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 4 ஆயிரம் பேருக்குக் காணி இல்லை எனவும், செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் 900 பேருக்கு காணி இல்லை எனவும் பிரதேச செயலர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துரைத்தனர்.

வனவளத் திணைக்களத்தின் கீழே உள்ள காணிகளை விடுவித்து காணிக் கச்சேரி மூலமாகக் காணியற்ற இவர்களுக்கு வழங்குமாறும் குறித்த செயற்பாட்டை விரைவாகச் செய்யுமாறும் இணைத்தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாட் பதியூதின் பிரதேச செயலர்களுக்கும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்களுக்கும் உத்தரவிட்டார். (த-110)



# இலங்கை வங்கியின் 80 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம்,ஓக.3

இலங்கை வங்கியின் 80 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது.

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக் கிளையில் கிளையின் முகாமையாளர் பிரேமராஜன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

மதத் தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமான ஆண்டு நிகழ்வு கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் என். வேதநாயகன், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் வடக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் திருமதி பிரபாகரன்ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்து வெளியிட்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலர்;

"இலங்கை வங்கியானது மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றது. போர்க்காலத்தில் இந்த வங்கிகளின் சேவைகள் மகத்தானது. அத்தகைய சேவைகளைப் பாராட்ட வேண்டிய அதேவேளை தொடர்ந்தும் சிறந்த வேவைகளை வழங்க வேண்டும்" எனத் தெரி வித்தார். (ஐ-ரி1)

# 13 கிராமஅலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி ஓமந்தையில் தனியான பிரதேச செயலகம்

## *ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்*

வவுனியா, ஓக. 3

ஓமந்தையில் 11 கிராம அலுவலர் பிரிவுகளுடன் இந்தப் பகுதியை அண்மித்த நொச்சிமோட்டை, கள்ளிக்குளம் பிரிவுகளை உள்ளடக்கி மொத்தமாக 13 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தனிப் பிரதேச செயலகத்தை அமைப்பதற்கு பரிந்துரை செய்வதென்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்குத் தெரியப்படுத்துவதாகவும் தீர்மானிக்கபட்டது.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் 15 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியவகையில் ஓமந்தையில் தனிப் பிரதேச செயலகம் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

வவுனியாவின் ஏனைய பிரதேசசெயலகப்பிரிவுகளில் 20 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வவுனியா பிரதேச செயலர் பிரிவு மாத்திரம் 42 கிராமஅலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. எனவே அதனைப் பிரித்து ஓமந்தையில் தனிப் பிரதேச செயலகத்தை அமைப்பது தொடர்பாகக் கரிசனை கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்திருந்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வவுனியா பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 11 கிராமஅலுவலர் பிரிவுகளையும், வவுனியா வடக்கிலிருந்து 4 கிராம அலுவலர் பிரிவுகளையும் பிரித்து ஓமந்தையில் தனிப் பிரதேச செயலகம் அமைக்கப் படவுள்ளதாக அறியமுடிகிறது. குறித்த 4 கிராம அலுவலர்பிரிவுகளும்ஏற்கனவே முரண்பாட்டுக்குரியவை. எனவே அவற்றை இதற்குள் உள்ளடக்கக்கூடாது என்று கோரிக்கை முன்வைத்தார்.

அதற்குப் பதிலாக கல்மடு, ஈச்சங்குளம், புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், நொச்சிமோட்டை, கள்ளிக்குளம் கிராம அலுவலர் பிரிவுகளை ஓமந்தையுடன் இணைக்கமுடியுமா என ஆராயுமாறும் அவர் தெரிவித்தார். சாஸ்திரிகூழாங்குளம், புதுக்குளம் பகுதிகளில் வசிப்பவர்கள் நகருக்கு வருகை தந்த பின்னரே ஓமந்தை செல்லவேண்டி வரும், அதனை அந்தப் பகுதி மக்கள் விரும்ப மாட்டார்கள் என்று வவுனியா பிரதேச செயலர் உதயராசா தெரிவித்தார். அந்தப் பகுதி மக்களின் கருத்துக்களையும் அறிந்து தீர்மானிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுகளை ஓமந்தையுடன் இணைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் எதிர்ப்புத் தெரிவித்தார்.

அதிகபட்சமாக 42 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய வவுனியா பிரதேச செயலகப் பிரிவிலிருந்து அரைவாசியைப் பிரித்து ஓமந்தையில் தனிப் பிரதேசசெயலகம் உருவாக்குவதே சரியானதாக இருக்கும் என்று அனைவரும் தெரிவித்தனர்.

எனவே ஏற்கனவே தீர்மானிக்கபட்டதன்படி வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவினுடைய 4 கிராம அலுவலர் பிரிவுகளையும் இணைக்காமல் அதற்குப் பதிலாக ஓமந்தைப் பகுதியை அண்மித்த 11 கிராம அலுவலர் பிரிவுகளுடன் நொச்சிமோட்டை, கள்ளிக்குளம் பிரிவுகளை உள்ளடக்கி மொத்தமாக 13 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தனிப் பிரதேச செயலகத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு பரிந்துரை செய்வதென்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்குத்தெரியபடுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. (த-110)

# மொரக்காகந்த மகாவலி திட்டம் தொடர்பில் தர்க்கம்

யாழ்ப்பாணம், ஓக. 3

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மொரக்காகந்த மகாவலித் திட்டம் தொடர்பில் திட்ட விளக்கத்தை சமர்ப்பிக்க முனைந்த அதிகாரிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவுக்குமிடையில் தர்க்கம் இடம்பெற்றது.

இணைத் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ரிசாட் பதியுதீன் தலைமையில் நேற்று முன்தினம் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது தர்க்கம் இடம்பெற்றது.

மகாவலி அதிகார சபை அநுராதபுரம் பகுதியில் பெரும் நீர்த்தேக்கம் அமைத்து வவுனியா செட்டிகுளம் ஊடாக மன்னார் வரையில் தண்ணீர் கொண்டு செல்வதற்கான பெருந் திட்டத்தை முன்மொழிந்தது. அது பற்றிய விளக்கத்தை அதிகாரிகள் ஒளி, ஒலி வடிவில் காண்பிக்க முற்பட்டனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்க முற்பட்ட சமயமே கடும் தர்க்கம் ஏற்பட்டது.

இந்தத் திட்டத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. இதனுடன் தொடர்புடைய அனைவரும் கருத்துத் தெரிவிப்பதோடு, இந்தப் பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராய வேண்டும். இதனை ஒருங்கிணைப்புக் குழுவில் சமர்ப்பிக்காது தனியாக கூட்டத்தைக் கூட்டுமாறு கோரினார். இறுதியில் நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேபோன்று வவுனியா செட்டிகுளம் பிரதேச சபை மைதானத்திலுள்ள கைவிடப்பட்ட கட்டடங்களை அகற்ற அனுமதிக்கப்பட்ட போதிலும் சபை இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாடாறுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா கோரினார். (த-105)



# துப்பாக்கியை தருமாறு கேட்டார் செல்வம் பழைய ஞாபகமோ எனச்சிரித்தார் ரிசாத்

## *ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இது நடந்தது*

வவுனியா, ஓக. 3

துப்பாக்கி இருந்தால் (சொட்கன்) எமக்கும் தாருங்கள் என்று வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேட்டார்.

அதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ரிசாத் பதியுதீன் பழைய ஞாபகங்கள் வந்து விட்டனவா என்று சிரித்தபடியே கேட்டார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அண்மைக்காலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சொட்கன் (துப்பாக்கி) மீள் எடுக்கப்பட்டமையால் தற்போது விவசாயிகள் வன விலங்குகளால் பெரும் துன்பங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். விவசாயி களுக்கு வனவிலங்குகளின் தாக்கம் அதிகரித்து வருவதனால் அவர்களது பொருளாதாரமும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எனவே அவர்களுக்கு மீண்டும் சொட்கன் (துப்பாக்கிகள்) வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரினார்.

இதன்போது எவ்வாறு துப்பாக்கியை வழங்கலாம் என்று ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரான ரிசாட் பதியுதீன் பொலிஸ் அதிகாரியிடம் கேட்டார். பாதுகாப்பு அமைச்சில் அனுமதி பெற வேண்டும் என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் இராணுவ அதிகாரியும், குறித்த அனுமதியை இராணுவத்தினர் வழங்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இது பற்றிய விண்ணப்பங்களை மாவட்டச் செயலகத்தில் பெறவேண்டும்எனவும். அவற்றை உரிய பொறிமுறைகளின் பிரகாரம் மாவட்டச்செயலகம்பெற்று, அதனை வழங்க நடவடிக்கை எடுக்கலாம் என்றும் மாவட்டச் செயலர் கனிபா தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சில்கதைத்து. உரிய அனுமதி பெறுமாறு கூட்டத்தில் மாவட்டச் செயலருக்குப் பணிக்கப்பட்டது.

இதன்போதே குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், "தமக்கும் ஒரு துப்பாக்கியை தந்தால் நல்லம்" என்று நகைச்சுவையாகத் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் ரிசாட் பதியுதீன் "பழைய ஞாபகங்கள் வந்துள்ளன போல் உள்ளது" என்று செல்வம் அடைக்கலநாதனைப் பார்த்துத் தெரிவிததார். (த-110, ரி4)



# மீனவருக்கு விளக்கமறியல்

தடைசெய்யப்பட்ட வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்படும் மீனவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலையை பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டார் என்று புல்மோட்டை கடற்றொழிலாளர் ஒருவரை கடற்படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்தனர்.

கைது செய்த சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது சந்தேகநபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ஜ-ரி3)

## வடக்கில் கொழும்பு அரசின் நெறிப்படுத்தலிலுள்ள

# திணைக்களங்களால் வரும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கொழும்பில் உயர்மட்டக் கூட்டம்

## *ஏற்பாடு செய்கின்றேன் என்று அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு*

மன்னார், ஓக. 3

மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாகத்தீர்க்கப்படாதிருக்கும் காணிப்பிரச்சினைக்கும், வன பரிபாலனத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் நடவடிக்கையால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களுக்குத் தீர்வு காணும் வகையில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் கொழும்பில் உயர் மட்டக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்கிறேன் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஜோன் அமரதுங்க மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொள்ள வகை செய்வதாகவும் உறுதியளித்தார்.



மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

குள நீர்ப்பாசனத்தின் கீழான காணிகளின் அத்து மீறல்கள் குறித்தும் விவசாயிகளின் முறைப்பாடுகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சால்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டினார். அதைக் கவனத்தில் எடுத்த அமைச்சர் ரிசாத், மேலதிக மாவட்டச் செயலர் தலைமையில் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் திணைக்கள அலுவலர்கள் கொண்ட குழு ஒன்று அமைப்பது பற்றிய ஆலோசனையை வழங்கினார். அதனை ஒருங்கிணைப்புக் குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இது தொடர்பான முறைப்பாட்டாளர்கள் இந்த குழுவுக்கு இரண்டு வார காலத்துக்குள் தமது பிரச்சினைகளை எழுத்து மூலம் வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகளின் மேம்பாடு தொடர்பாகக், குறிப்பிட்ட அமைச்சர், மாவட்டத்தின் சமுர்த்தி அதிகாரிகள் இந்த மக்களைத் தொடர்ந்தும் கையேந்துபவர்களாக வைத்திருக்காமல் நிலையான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பயனாளிகள் பயன் அடைவர் என்றார். சமுர்த்தி அதிகாரிகள், பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோர் உள்ளடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட காலத்துக்குள் பயனாளிகளுக்கு நிலையான வருவாயை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றைக் கையளிக்குமாறும் அதிகாரிகளைப் பணித்தார். (த-56)



## பூங்காவுக்கான ஆரம்பப் பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.3
நல்லூர் தெற்கு சிறி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கானவேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமாகிய மாவை சோ சேனாதிராசா,மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
மேலும் விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகரசபையின் பிரதி முதல்வர் து.ஈசன், அப்பகுதி கிராம அலுவலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.
சிறுவர் பூங்கா அமைப்பதற்கு நாடாளுமன்றஉறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா யாழ்ப்பாணம் தொகுதிக்கான துரித 'ஊரெழுச்சி' அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். (ஐ-105)

## காரைநகர் இணக்க சபை அமர்வுகள் இடமாற்றம்

காரைநகர்,ஓக.3
யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச இணக்க சபை அமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இம் மாத இறுதி வாரம் வரை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெறும் என்று தவிசாளர் ந.பாரதி அறிவித்தார்.
இதுவரை இணக்க சபை அமர்வுகள் யாழ்ப்பாணம் காரைநகர் இந்துக் கல்லூரியில் இடம்பெற்று வந்தது.
குறித்த பாடசாலையில் உயர்தரப் பரீட்சை இடம்பெறுவதால் மேற்படி சபையின் அமர்வுகள் பரீட்சை நிறைவு பெறும் வரை சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெறும்.
அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் காரைநகர் இந்துக்கல்லூரியில் வழமை போன்று இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-250)

# மன்னார் நகரசபை ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

*மன்னார்,ஓக.3*
*மன்னார் நகரசபை ஊழியர்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அடையாள கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் காலை முன்னெடுத்தனர்.*





மன்னார் எழுத்தூர் ஜீவபுரம் பகுதிகளை சார்ந்த மன்னார் நகர சபையில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டு வரும் தங்களுக்கு 2003ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணிகளுக்கு இன்னும் உறுதிப்பத்திரமோ,வீட்டுத்திட்டமோ அடிபடைவசதிகலோ இதுவரை செய்யப்படவில்லை .
இந்த நிலையில் அரச ஊழியர்கள் சிலர் பலவந்தமாக தமது காணிகளை பிடிப்பதற்கு முயற்சிக்கின்றனர். அதற்கான எந்தவிதமான மாற்று நடவடிக்கைகளையும் மன்னார் பிரதேச செயலர் எடுக்கவில்லை என்றும் தாம் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுவதாகவும் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடம் கோரிக்கை அடங்கிய மனு கையளிக்கப்பட்டது.
அதில் -'2003 ஆம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்ட 44 பேருக்கும் காணி உறுதி பத்திரங்களை உடன்வழங்க வேண்டும்.
அளவீடு செய்து ஒதுக்கப்பட்ட காணிகளை பிறருக்கு வழங்குவது உடன் நிறுத்தப்படல் வேண்டும்.
காணிக்கு புதிதாக விண்ணப்பித்துள்ள 15 சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கும் காணிகள் உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காணி வழங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வீட்டுத்திட்டம் மலசலகூடம், மின்சாரம் மற்றும் குடி தண்ணீர் கிடைக்க உரிய நடவடிகை எடுக்க வேண்டும்' போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.
மனுவைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ், காணிகள் இல்லாத நகரசபை பணியாளர்களுக்கு காணிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் ஏற்கனவே காணிகள் இருப்பவர்களுக்கு அவ்விடத்தில் காணிகள் வழங்கப்படமாட்டாது - என்றும் தெரிவித்தார். (ஐ-213)

## கழிவு அகற்றும் இடத்தில் இருந்து குப்பை வெளியேற்றப்படுகிறது

### *சுகாதார சீர்கேடு இடம்பெறுவதாக அந்தப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம்,ஓக 3
வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் திண்மக் கழிவு அகற்றும் இடத்தில் இருந்து குப்பைகள் வெளியே பரவுவதால் சுகாதாரச் சீர்கேடு உட்பட பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பிரதேசங்களில் இருந்து பெறப்படும் திண்மக் கழிவுகள் அராலி கிழக்கில் கொட்டப்படுகிறது.
தினமும் சுமார் 2 லோட் திண்மக் கழிவுகள் கொட்டப்படுகிறது. கொண்டப்படும் திண்மக் கழிவுகளில் பொலித்தீன் போன்ற இலேசான பொருள்கள் வெளியே காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது.
அத்துடன் கால் நடைகளும் குப்பைகளை வெளியே இழுத்துச்சென்று பொது இடங்களில் போடுகிறது.
இதனால் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளுக்கு அப்பகுதி மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.
திண்மக கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் பாதுகாப்பு நெற்வேலிகள் இல்லை. குப்பைகளை கிளறி செப்பு, இரும்பு கம்பிகள் எடுக்கும் நபர்களை கட்டுப்படுத்துவதற்கு காவலாளி இல்லை. இதனால் இந்த திண்மக் கழிவுகள் மக்கள் குடியிருப்புகள் மற்றும் பொது இடங்களில் வீசப்படுகிறது.
எனவே இது தொடர்பில் பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையுடன் தொடர்ப்பு கொண்டு கேட்டபோது-
"காற்றின் வேகத்துக்கு பொலித்தீன்கள் தூக்கி வீசப்படுகின்றன. அதனை இனங்கண்டு அகற்றுவதற்கு வாரம் ஒரு முறை பணியாளர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மக்களும் இயன்ற வரையில் பொலித்தீன் பாவனையை குறைக்க வேண்டும். திண்மக் கழிவு கொட்டப்படும் இடத்துக்கு நெற்வேலி அமைப்பதற்கு நிதி மூலங்கள் பெறும் செயற்பாடு நடைபெற்றுவருகிறது. காவலாளி நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## பல்கலையில் தண்ணீர் வடிகட்டிகள் சுமந்திரன் எம்.பி. நிதி ஒதுக்கினார்

யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தினமும் அருந்தும் தண்ணீரின் தரத்தை உறுதி செய்யும் வகையில் பல்கலைக் கழகம் பெண்கள் மற்றும் ஆண்கள் விடுதி ஆகிய மூன்று இடங்களிலும் ஒவ்வொரு 'ஆரோ பிளாட்' தண்ணீர் வடிகட்டிகள் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
அதற்கான நிதியை வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் நிதி வழங்கவுள்ளார். அவற்றுக்கான செலவு மதிப்பீட்டைத் தருமாறு அவர் பல்கலைக்கழகத்திடம் கோரியுள்ளார்.
அதற்கான நிதி அனுமதியை வழங்குவதற்காக நிதி மதிப்பீட்டுக் கோரிக்கைக் கடிதம் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், மறுவாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்கள் வடிகட்டிய தண்ணீரைப் பருக முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-105)

## ஆடிப்பூர உற்சவம்


வவுனியா,ஓக.3
ஆடிப்பூரத்தை முன்னிட்டு வவுனியா சிறிநகர் சிறிதுர்கை அம்மன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன முற்பகல் 10 மணிக்கு சோமகிரிதர குருக்கள் தலைமையில் சிறப்பு பூசைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.
பூசையில்கலந்துகொண்டு அம்பாளின் அருளை பெற்றுய்யுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-110)

## தங்கூசி வலைகளை அழிக்க உத்தரவு

சாவகச்சேரி,ஓக.3
உரிமை கோரப்படாத நிலையில் கடலேரி கரையோரத்தில் கண்டெடுக்கப்பட்ட பெருமளவு தங்கூசி வலைகள் நீதிமன்றால் அழிக்க உத்தரவிடப்பட்டது.
யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் கடந்த 27 ஆம் திகதி தென்மராட்சி தெற்கு கடலேரிப் பகுதியில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
அவ்வேளையில் கரையோரத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பெருமளவு தங்கூசி வலைகளைக் கைப்பற்றி நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.
வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கைப்பற்றப்பட்ட வலைகளை எரித்து அழிக்குமாறு உத்தரவிடப்பட்டது.
தங்கூசி வலைகள் தொழிலுக்குப் பயன்படுத்துவது கடற்றொழில் அமைச்சால் தடை செய்யப்பட்டது. (ஐ-9)

## தேர்த் திருவிழா

காரைநகர்,ஓக.3
யாழ்ப்பாணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த தேவி பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. காலை 7 மணியளவில் வசந்தமண்டபப் பூசையை அடுத்து அம்பாள் தேரில் ஆரோகணித்துப் பத்தர்களுக்கு அருட்காட்சி வழங்கினார். தொடர்ந்து தீர்த்தத் திருவிழா இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது. (ஐ-250)



# ஊரணிக் குளத்தை ஆக்கிரமிக்கிறது மகாவலி அபிவிருத்தி அதிகார சபை

## தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்

முல்லைத்தீவு, ஓக. 3

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் கமநலசேவைப்பிரிவுக்குட்பட்ட, தமிழ் மக்களின் பூர்வீக குளமான ஊரணிக் குளத்தை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஆக்கிரமித்துள்ளது. குளத்தில் தண்ணீர் இல்லாத நிலையில், குளத்தை ஊடறுத்து மின் கம்பங்கள் நட்டு வீதியும் அமைக்கப்பட்டுவருகின்றது என்று அங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





இந்தச் செயற்பாடு புதிய சிங்களக் குடியேற்றத்திட்டத்துக்கான ஆரம்பமாக இருக்கலாமென்றும் அந்தப் பகுதித் தமிழ்மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குளத்தின் கீழ் சுமார் 100ஏக்கருக்கும் அதிகளவான விவசாய நிலங்கள் காணப்படுகின்றன.

ஊரணிக்குள நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி 1984ஆம் ஆண்டு இடம்பெயர்வதற்கு முன்னர் நெற் செய்கையில் ஈடுபட்டோம் என்று அங்குள்ள தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது அந்தக்குளம் சிதைவடைந்திருப்பதால் தண்ணீர் இல்லை. கட்டாந்தரையாக இருந்து பின்னர் புல், பூண்டு மரங்கள் வளர்ந்துள்ளன. அதனூடாகவே வீதி அமைக்கப்படுகின்றது.

அந்தக் குளத்தின் கீழான விவசாய நிலங்களில் தாம் பெரும்போக மானாவாரிச் செய்கை மேற்கொள்வதாவும் தெரிவிக்கின்றனர்.

ஊரணிக் குளக் கட்டில் வெடிப்பு ஏற்பட்டிருந்தது. அதை 2015ஆம் ஆண்டு விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் தமிழ் மக்கள் சீரமைத்திருந்த னர்.

அந்தச் சீரமைப்பின் மூலம், சுமார் 20ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களுக்குத் தண்ணீரைத் தேக்கிவைத்துப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

தற்போது இந்தக் குளத்துக்கூடாக, மின்சாரவேலி, மின்கம்பங்கள், வீதி என்பன அமைக்கின்றமை தமது குளத்தை இல்லாமற் செய்து புதிய குடியேற்றங்களை அமைக்கும் திட்டம் என்று கூறும் விவசாயிகள் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் தமது வாழ்வாதார நிலங்களும் பறிபோகும் அபாயத்தில் உள்ளன என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த அபகரிப்பு நிலைமைகளை வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் நேற்றுமுன்தினம் பார்வையிட்டார்.

உரிய இடங்களில் இது தொடர்பில் பேசுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதுமட்டுமன்றி, ஊரணிக் குளத்தின் அருகே தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டுக்கு முன்னர் வழிபட்டனர் என்று கூறப்படும் காளி கோவில் ஒன்று சிதைவடைந்துள்ளது. பழைய கிணறும் பாழடைந்து காணப்படுகின்றது என்றுதெரிவிக்கப்படுகின்றது. (த-246)

---

# தமிழரிடம் சின்னக்குளத்தை பறித்து சிங்களவர்களுக்குத் தாரை வார்ப்பு?

## மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினரின் அட்டூழியங்களை தடுக்க முடியாதா என்று விவசாயிகள் விசனம்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் கமநல சேவைநிலையப் பிரிவுக்குட்பட்ட தமிழ் மக்களின் பூர்வீக குளமான, சின்னக்குளத்தை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினர் ஆக்கிரமித்து, அதில் 2017 ஆம் ஆண்டிலிருந்து சிங்கள மக்கள் தோட்டப் பயிர் செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கியுள்ளனர் என்று கவலை தெரிவிக்கும் தமிழ் விவசாயிகள் அந்த நிலங்களை மீட்டுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

தோட்டச் செய்கைக்கென குளத்தினுள் தற்போது கிணறுகளும், குடில்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது அந்தக் குளத்தை ஊடறுத்து மின்சார வேலி, மின் கம்பங்கள், புதிய வீதிகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையானது குளத்தினுள் மேலும் புதிய சிங்களக் குடியேற்றங்களை அமைத்து விரிவாக்க எடுக்கப்படும் நடவடிக்கையாக இருக்கலாமென்று அந்தப் பகுதி தமிழ் மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர்.

சின்னக்குளத்தின் நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்த 1984ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் தாம் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம் என்றும் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சின்னக்குளத்தின் கீழ் சுமாராக 300ஏக்கருக்கும் மேலான வயல் நிலங்கள் காணப்படுகின்றன என்று தமிழ் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

30 ஆண்டுகளுக்கும் மேலான இடப்பெயர்வு காரணமாகசின்னக்குளம் சிதைவடைந்து காணப்படுகின்றது.

தற்போது இந்தக் குளத்தின் கீழ் உள்ள விவசாய நிலங்களில் பெரும்போக மானாவாரிச் செய்கை மாத்திரமே செய்கை பண்ணப்படுகின்றது.

இந்தக் குளத்தைச் சீரமைத்துத் தரும்படி கமநல சேவை நிலையத்திடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் குளத்தின் சீரமைப்புக்கென்று நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை இடையூறு விளைவிப்பதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் குளத்தின் சீரமைப்புத் தொடர்பில், கரைதுறைப்பற்றுப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கடந்த மாதம் 18ஆம் திகதி வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் கேள்வி எழுப்பியிருந்தார். குளத்தின் சீரமைப்புக்காக 13.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டபோதும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தமக்குரிய இடத்துக்குள் குளம் இருப்பதாகத் தெரிவித்துசீரமைப்புக்குத் தடை விதித்துள்ளது.

குறித்த குளத்தின் சீரமைப்புக்கு வந்த நிதி இந்தப் பிரச்சினையால் வேறு குளத்தின் சீரமைப்புக்கு மாற்றப்பட்டுள்ளது என்று கமநல சேவை அபிவிருத்தி அலுவலர் தெரிவித்திருந்தார்.

இந்தச் சிக்கல்களையும் ரவிகரன் நேற்று அவதானித்தார். குளத்தை மீட்டுத் தந்து, தமது வாழ்வாதாரத்தையும் தமது நிலங்களையும் பாதுகாக்க உதவுமாறு அவரிடம் விவசாயிகள் கோரியிருந்தனர். இது பற்றி உரிய இடங்களில் இது பேசுவதாக ரவிகரன் விவசாயிகளிடம் தெரிவித்துள்ளார். (த-246)

---

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஒக.3

நா.யோகேந்திரநாதனின் "மரண மழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு" நூல் அறிமுக நிகழ்வு நாளைஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் நாவலர் மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

அறிமுகவுரையை கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்,மதிப்பீட்டு உரைகளை கந்தையா சிறிகணேசன், கலாநிதி சு.ஜீவசுதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

---

## வி.தர்மலிங்கத்தின் உருவச்சிலை திறப்பு

யாழ்ப்பாணம்.ஒக.3

சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியின் முன்னாள் முகாமையாளரும் மானிப்பாய் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.தர்மலிங்கத்துக்கு கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட திருவுருவச்சிலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

கல்லூரி அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகனால் திரைநீக்கம் செய்யப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, த.சித்தார்த்தன் ,யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆர்னல்ட், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், உள்ளூ ராட்சி சபைகளின் தவிசாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-9)

---

## கலந்துரையாடல்

"முரண்பாடுகளைத் தவிர்ப்பதில் மக்களின் பங்கு" என்னும் தலைப்பில்கலந்துரையாடல்ஒன்று யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை இணைய அலுவலக மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலநதுரையாடலில் நான்கு மதங்கள் சார்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவுள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

---

# வவுனியா பேருந்து நிலைய சோதனைச் சாவடி அகற்றப்படும்

வவுனியா, ஓக. 3

வவுனியா பேருந்து நிலைய வாயிலில் அமைந்துள்ள சோதனைச் சாவடி விரைவில் அகற்றப்படும் என்று பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது, வவுனியா பேருந்து நிலைய வாயிலில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர். தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டுவந்திருந்தார். இது தொடர்பாக மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமைகள் விளக்கம் கோரினர்.

அதன்போதே, குறித்த சோதனைச் சாவடியை விரைவாக அகற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த ஏப்ரலில் நடந்த குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்தே, குறித்த சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது. பேருந்து நிலையத்துக்குள் செல்லும் பொதுமக்களின் பயணப்பொதிகள் பேருந்து நிலைய வாயிலில் சோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றன. குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்து மூன்று மாதங்களாகின்ற நிலையிலும் அது அகற்றப்படாமையால் பயணிகளும் பொதுமக்களும் கடும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றோம் என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-110)

---

## ஆடிப்பூர உற்சவம்

அளவெட்டி,ஒக். 3

ஆடிப்பூரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் காரைநகர் களபூமி பிட்டியெல்லகலயன் கண்டி கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

மாலை 6 மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று. அம்பாள் வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-63)

---

## கிறிஸ்தவ ஆலயங்களின் சீரமைப்புக்கு ரூ.5.5 மில்லியன்

மன்னார், ஓக. 3

மன்னாரிலுள்ள 6 கிறிஸ்தவ ஆலயங்களின் சீரமைப்புக்காக நாடாளுமன்ற உறுப்பினர் தேவ மனோகரன் சுவாமிநாதனின் சுமார் 5.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணம் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோவிடம்நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட அமைப்பாளர் ஜேம்ஸ் பிரிமிலஸ் கொஸ்தா அதைக் கையளித்தார். மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் குருக்க ளின் வேண்டுகோளுக்கு அமைவாக கிராமஎழுச்சித்திட்டத்தின் ஊடாக இந்த நிதி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

---

## முன்பள்ளிகளின் பிரதேச விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம்,ஒக. 3

தென்மராட்சி கொடிகாமம் முன்பள்ளிகளின் பிரதேச மட்ட விளையாட்டு நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மைவிருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட விரிவுரையாளர் திருமதி விகர்ணா ரவீந்திரா, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஓய்வு பெற்ற கணித வள நிலைய முகாமையாளர் சி.பத்மநாதன், மதிப்புறு விருந்தினராக தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக பிராந்திய தலைவர் த.ரவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

## ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியில்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 இடங்களில் இறங்குதுறை

**முல்லைத்தீவு, ஓக. 3**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோர மீனவர்களின் தொழில் தொடர்பான வசதிவாய்ப்புக்களைப் பெருக்கும் நோக்கில் ஆசியஅபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் ஆறு இடங்களில் இறங்கு துறைக்கான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலிஸ்ரன் தெரிவித்துள்ளார்.**

மாத்தளன், கள்ளப்பாடுவடக்கு, கள்ளப்பாடு தெற்கு, தீர்த்தக்கரை, சிலாவத்தை, கொக்குளாய் போன்ற கரையோரப் பகுதிகளில் மீனவர்களுக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்ளல், ஓய்வு மண்டபம், வலை இயந்திரங்கள் திருத்தக் கட்டடம், மலசலகூடம், வாகன தரிப்பிடம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை முழுமை செய்துகொள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. இது தொடர்பிலான கூட்டம் ஒன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (து-ரி3)

## ஆடிப்பூர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி ஆலய,கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு சங்கு பூசை,தீபாராதனையைத் தொடர்ந்து 9.30 மணியளவில் முதன்மைக் கும்பங்கள் வீதியுலா வருதலுடன் சங்காபிஷேகம் நடைபெறும். இரவு 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் உற்சவம் இடம்பெற்று சுவாமி பூந்தண்டிகையில் வீதியுலா வருவார் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(ஐ)

## இளைஞனின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு.ஓக.3

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட ஒதியமலைப்பகுதியில் இளைஞனின் சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த புஸ்பராசா கவியரசன் (வயது-17) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த இளைஞனின் வீட்க்கு காணியில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஒட்டுசுட்டான் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சாவு விசாரண அதிகாரி முன்னிலையில் சடலத்தை மீட்டு, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப் படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார். (ஐ-ரி3)

## மூத்தோர் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.3

மூத்தோர் மதிப்பளிப்பு நிகழ்வு கைதடி நவபுரம் சிறிதுர்க்கை அம்மன் ஆலய முன்றிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தின் கனடாக் கிளையின் அனுசரணையில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

கழகத்தின் தலைவர் க.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக டான் தொலைக்காட்சிக் குழுமத்தின் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன் கலந்து கொள்வார்

சிறப்பு விருந்தினர்களாக கனடாவிலிருந்து வருகை தந்துள்ள சமூக ஆர்வலர்களான பொ.கந்தசாமி, திருமதி ச.கிருஸ்ணன் நாகேஸ்வரி, கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் வை.செல்வம், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் வி.சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தெரிவு செய்யப்பட்ட மூத்தோர்கள் மாலையிட்டுக் மதிப்பளிக்கப்படுவதுடன் பண அன்பளிப்பும் வழங்கப்படவுள்ளது. (ஐ-222)



## பொதுமக்கள் முன்னணியினர் வவுனியாவில் மக்கள் சந்திப்பு

வவுனியா, ஓக. 3

தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் பொதுமக்கள் முன்னணியின் மக்கள் சந்திப்பு வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் தர்மபால செனவிரட்ணவின் கட்சி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

முன்னணியின் கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுரத்த சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, அடுத்து வரும் தேர்தலை வன்னியில் எவ்வாறு எதிர்கொள்வது, புதிய கூட்டுக் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவது மற்றும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதில் பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அதன் கூட்டுக் கட்சிகளில் ஒன்றாகிய ஈரோஸ் கட்சியின் மாவட்ட அமைப்பாளர், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சசிதரன், ஈரோஸ் கட்சி உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமதிபால, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர் வசந்த மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (து-ரி4)

## கவிதைத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.3

அழ. பகீரதனின் 'ஒப்பு வதோ' என்ற நான்காவது கவிதைத் தொகுதி நூல்வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலையடி மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில் வரவேற்புரையை மறுமலர்ச்சி மன்றத்தின் செயலாளரும், காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் ஆசிரியருமான கோ. சுதாகரனும், அறிமுக உரையை ஆய்வாளரும், அச்சுவேலி மத்திய மகாவித்தியாலய ஆசிரியருமான சு. சிவனேசராசனும் வெளியீட்டுரையை கலாபூஷணம் எஸ். சிவானந்தராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

நூல்நயவுரையைபிரபல பேச்சாளர் எஸ். நிகேஸ் 'கருத்துரையை எழுத்தாளரும் சட்டத்தரணியுமான சோ.தேவராஜா, ஏற்புரையை கவிஞர் அழ. பகீரதன், நன்றியுரையை வலி. மேற்கு இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர்ஜெ. சயித்தும் ஆற்றவுள்ளனர். (ஐ)

## புதிய யோகா பயிற்சி நெறிகள் நல்லூர் தேரடி அருகே ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்ப்பாணம் யோகா உலகம் அமைப்பு புதிய யோகா பயிற்சிநெறிகளை நல்லூர்த் தேரடி அருகே 63 நாயன்மார் குருபூசைமண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் இயக்குநர்சி.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி சாவித்திரிரவிச்சந்திரன் சிறப்புக்கருத்துரையை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து யோகா வகுப்புக்கள் திங்கட்கிழமை தொடக்கம் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணி வரை இரு பிரிவுகளாக ஒரு மாதம் தினமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஞானக்குழந்தை இல்ல விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்ப்பாணம் ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலைகளுக்கிடையிலான 53ஆவது ஆண்டு விளையாட்டு நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் லயன் நாகரத்தினம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம்,மதிப்புறு விருந்தினராக யூனியன் வங்கி முகாமையாளர் சா.மு. ஹென்ஸ்மன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)



யாழ்ப்பாணம், வண்ணை சிறிமத் வாலாம்பிகா சமேத வண்ணை வைத்தீஸ்வரர் சுவாமி (சிவன் கோவில்) ஆலய வருடாந்த அம்பாள் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை சிறப்பாக இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப் பெற்றனர். (ஐ-17)

## வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி,அருள்மிகு வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும்,மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தா பொன்னையா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## தூக்குத் தண்டனையை எதிர்ப்போர் நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானோரே

*அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு*



கொழும்பு, ஓக.3

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்குவதற்கு எதிராக வீதியில் இறங்கியிருக்கும் அனைவரும் சிறந்ததோர் நாட்டை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு எதிரானவர்கள்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பண்டாரவளை நகர மண்டப கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற அமரபுர சிறி சத்தம்மவங்ச மகாநிக்காயவின் ஊவா மாகாண தலைமைச் சங்கநாயக்கர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சங்கைக்குரிய கல்கொடகம சோபித்த நாயக்க தேரருக்கு உறுதிப்பத்திரத்தை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொலை, கொள்ளை, வன்புணர்வுக்குற்றங்கள்போன்ற பெரும் குற்றங்களுக்குப் பின்னால் போதைப் பொருளே உள்ளது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்குவதற்கு தீர்மானித்தது. எதிர்காலத் தலைமுறைக்காக சிறந்ததோர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவாகும்.

முன்னேற்றமடைந்த நாடு என்பது பௌதிக வளங்கள் மட்டும் அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக மட்டுமன்றி ஒழுக்கப் பண்பாடுகளைக்கொண்ட சிறந்த மனிதர்கள் வாழும் சிறந்ததோர் நாடாகும்- என்றார்.

சங்கைக்குரிய பல்லேகந்த ரத்தனசார அநுநாயக்கதேரர், சங்கைக்குரிய கஹத்தேவெல சிறி நிவாசாபிதான நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா, ஆளுநர் ரஜித கீர்த்தி தென்னகோன், ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத்த தசநாயக்க உள்ளிட்ட அரசியல் பிரிதிநிதிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

# கடற்றொழில் திணைக்களத்தால் 4,000 கோடி ரூபா நழுவியது

*சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விசனம்*

*தலைமன்னார், ஓக. 3*



மன்னார் மாவட்டத்தில் துறைமுகம் அமைப்பதற்கு உலக வங்கி நிதி ஒதுக்கீடு செய்தபோதும், கடற்றொழில் திணைக்களம் உரியவாறு செயற்படாததால் அதற்கென வந்த 4ஆயிரம் கோடி ரூபா நிதி கைநழுவிச் சென்றுள்ளது என வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கடற்றொழில் சம்பந்தமாக ஆராயப்பட்டபோது பேசாலையில் அமைக்கப்படவிருந்த துறைமுக விடயம் கலந்துரையாடப்பட்டது.

கடற்றொழில் திணைக்கள அதிகாரி பவானி கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் பேசாலையில் உலக வங்கி நிதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவிருந்த துறைமுகம் அந்தப் பகுதி மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் அது கைவிடப்பட்டுள்ளது. துறைமுகம் அமைக்க 2013ஆம் ஆண்டு தொடக்கம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கையாக முதலில் ஆய்வு செய்யப்பட்டு பின் மாவட்ட ரீதியாகச் சங்கங்களுடன் பேசப்பட்டது.

பேசாலைப் பகுதியில் அதிகமான இழுவைப்படகுகள் காணப்படுகின்றன. இந்தத் துறைமுகம் பேசாலையில் அமைவதே உகந்தது என்று அங்கு அமைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

மூன்று வருடங்களாக இதற்கான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்ட பின்னர் அந்தப் பகுதி மக்கள் இங்கு துறைமுகம் தேவையில்லையென்று தெரிவித்ததாலேயே இது கைவிடப்பட்டுள்ளது.

அதாவது 25 மில்லியன் அமெரிக்க டொலர் அதாவது 4ஆயிரம் கோடி ரூபா நிதி உதவியில் இந்தத் துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கையாகவே இருந்தது என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்ததாவது:

இந்தத் திட்டத்தை கடற்றொழில் திணைக்களம் ஒரு கிராமத்து மீனவ சமூகத்துடன் தொடர்பு கொண்டு செயற்பட்டமையாலேயே கைநழுவியுள்ளது. எல்லாம் கைநழுவிச் சென்றபின்னரே மக்கள் பிரதிநிதிகளான எங்களிடம் வந்தீர்கள். இருந்தபோதும் நான் ஆளுநரிடம் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடம் இது விடயமாக பேசியிருந்தேன்.

அந்தத் துறைமுகம் இங்கு அமைவதென்றால் துறைமுகத்தில் தரித்து நிறுத்துவதற்கான படகுகள் எமது மாவட்ட மீனவ சமூகத்திடம் இல்லை. ஆகவே முதலில் எமது மீனவர்களுக்கு அதற்கேற்ற படகுகளை வழங்கிய பின்னர் அதற்கான துறைமுகத்தை அமைப்பது சிறந்தது என்று நான் சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்துள்ளேன். அதற்கு முன்னர் இங்கு துறைமுகம் அமைப்பதானது, எங்கள் வீட்டு முற்றத்திலுள்ள கொடியில் பக்கத்து வீட்டார் துணிவகைகள் உலர விடும் கதையாகத்தான் இருக்கும் -என்றார்.

(து-60)

## சு.கட்சியுடன் கலந்துரையாடாது வேட்பாளரை அறிவிப்பது தவறு

*மகிந்த அமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.3

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கலந்துரையாடாமல் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கட்சி மாநாட்டில் அரச தலைவர் வேட்பாளர் ஒருவர் அறிவிக்கப்பட்டால், சுதந்திரக் கட்சியால் எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி நடத்தும் கட்சி மாநாட்டில் அரச தலைவர் வேட்பாளர் ஒருவரை எமது கட்சி அறிவிக்க வேண்டி வரும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஒரு வேட்பாளரைக் களமிறக்குவதற்கே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

விரைவில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், மகிந்த ராஜபக்சவும் சந்தித்து பொருத்தமான வேட்பாளரைத் தீர்மானிக்க முடியும். நாட்டையும் மக்களையும் நேசிக்கும் நாட்டு மக்கள் விரும்பும் ஒரு தலைவரை அரச தலைவராக்குவதே சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்பார்ப்பு-என்றார். (எ)

## ஐ.தே.க. அரசின் காலத்தில் 15,000 வீடுகள் கையளிப்பு

*அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.3

ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகளில் 15 ஆயிரம் வீடுகள் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த வீடமைப்பு வேலைத் திட்டத்தால் அரசு எந்தவிதத்திலும் கடன் சுமைக்குள் தள்ளப்படவில்லை.

இவ்வாறு பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு கொம்பனித்தெரு பகுதியில் 'மெட்ரோ ஹோம்ஸ்' வீட்டுத்திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இதற்கு முன்னர் இருந்த அரசுகள் இது வரையில் கொழும்புக்கு 9 ஆயிரம் மாடி வீடுகளை வழங்கியிருக்கின்றன. ஆனால், நாம் ஆட்சிக்கு வந்து நான்கு வருடங்களில் 15 ஆயிரம் வீடுகளை வழங்கியிருக்கின்றோம்.

எதிர்வரும் ஓரிரு மாதங்களில் இன்னும் 5 ஆயிரம் வீடுகளை மக்களிடம் கையளிக்கவுள்ளோம். அது மாத்திரமன்றி எதிர்வரும் மாதங்களில் சுமார் 6 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் 2 ஆயிரம் வீடுகள் வழங்கப்படவுள்ளன - என்றார். (எ)

## ஈஸ்ரர் தாக்குதல் விசாரணைகள் நடக்கின்றதா என்பதில் சந்தேகம்

*மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு*



கொழும்பு, ஓக.3

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் முறையாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றனவா என மக்களிடம் சந்தேகம் எழுந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குருநாகலில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், குற்றப்புலனாய்வுப் பிரிவினரை குறைக்கூறுவதில் எந்தவித பயனுமில்லை.

இந்த மாதம் 11 ஆம் திகதி நாம் எமது அரச தலைவர் வேட்பாளரை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று குழப்பமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாக இருக்கிறது. அங்கு தலைவர்கள் பலர் வந்துவிட்டார்கள். இதுதான் பிரச்சினைகளுக்குக் காரணம் என்று தெரிகிறது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு வர, அந்தக் கட்சியிலிருந்து பலரும் தற்போது எம்முடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். வருபவர்களை நாம் ஏற்றுக்கொள்வோம்.

ஆனால் ஒரு கட்சியில் பிரச்சினையொன்றை ஏற்படுத்திதான் எமது தரப்பை பலப்படுத்த வேண்டும் என்ற தேவை எமக்குக் கிடையாது.

அரச தலைவர் தேர்தல் தான் விரைவில் நடைபெறும். மாகாண சபைத் தேர்தல் ஒன்று உடனடியாக நடைபெற வாய்ப்பில்லை என்றே எனது அனுபவத்துக்கு இணங்கத் தெரிகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக இன்னமும் அரசு காத்திரமான நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதே உண்மையாகும். சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்துவிட்டதாகக் கூறியுள்ளார்கள். ஆனால், இன்னமும் சிலர் கைது செய்யப்பட வேண்டியுள்ளார்கள் என்று தற்போது தெரிவித்து வருகிறார்கள்.

இதனால், மக்கள் மத்தியில் இதுதொடர்பாக ஒரு சந்தேகம் எழுந்துள்ளது. எந்தவொரு நடவடிக்கையையும் அரசு முன்னெடுக்காமல், குற்றப்புலனாய்வுப் பிரிவைக் குறைக்கூறி எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை - என்றார். (எ)

# வேட்பாளர் பெயர் வெளியானதும் ஐ.தே.க. பனிப்போர் வெளியாகும்

*ரமேஷ் பத்திரன தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.3

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஒருபோதும் பிறருக்கு விட்டுக் கொடுக்கமாட்டார். அரச தலைவர் வேட்பாளர் அறிவிக்கப்பட்டவுடன் ஐக்கிய தேசிய கட்சிக்குள் இடம்பெறும் பனிபோர் வெளிப்படும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் தற்போது பல விதமான சர்ச்சைகள் அனைத்து அரசியல் கட்சிகளின் மத்தியிலும் காணப்படுகின்றன.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது எதிர்வரும் 11ஆம் திகதி எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச உத்தியோகப்பூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவிப்பார். அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் எதிரணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. என்றார். (எ)

# ஸஹ்ரானை நெருங்கியபோதும் சூட்சுமமாகத் தப்பிக்கொண்டார்

## குற்றப்புலனாய்வுப் பிரிவின் பதில் பணிப்பாளர் சாட்சியம்

கொழும்பு, ஓக.3

ஸஹ்ரானைப் பல இடங்களிலும் தேடி அவரை நெருங்கினோம். ஆனால் அவர் சூட்சுமமாக எம்மிடமிருந்து தப்பித்துக்கொண்டார் .

இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்தும் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பதில் பணிப்பாளர் ஜகத் விசாந்த நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற அமர்விலேயே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளித்தவை வருமாறு:

**கேள்வி:** பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் முஸ்லிம் அடிப்படைவாதம் தொடர்பாக முதலில் எப்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன?

**பதில்** : 2017 ஆம் ஆண்டு. அதில் சிங்கள பௌத்த. முஸ்லிம் மற்றும் விடுதலைப்புலிகள் குறித்து ஆராயப்பட ஆரம்பிக்கப்பட்டது. நாலக சில்வா மூலமாக அதில் பிரிவொன்று உருவாக்கப்பட்டது. பங்களாதேஷ் நாட்டில் விடுதி ஒன்றில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. அதையடுத்து நாமும் கவனம் செலுத்தி இவை குறித்து ஆராய ஆரம்பித்தோம்.

**கே** : நீங்கள் செய்த விசாரணைப்பிரிவு எப்போது உருவாகியது? அதில் என்.டி.ஜே. அமைப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டதா?

**ப** : ஆம், ஐ.எஸ். கொள்கைகள் இலங்கையில் இருந்த கொள்கைகள் என்ன என்பது குறித்தெல்லாம் ஆராய்வோம். பொலிஸ்மா அதிபருக்கு தெரிவிப்போம்.

**கே**: ஏன் இங்கு அவ்வாறான ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என நினைத்தீர்கள் ?

**ப** : பங்களாதேஷ் நகரில் ஒரு குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. அதன் பின்னர் எமக்கும் இவ்வாறான நிலமைகள் உருவாகலாம் என்ற நோக்கத்தில் அவற்றை தடுக்க இவ்வாறு தயாரானோம். பங்களாதேஷ் போன்று இலங்கையில் தாக்குதல் நடத்தினால் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள். தடுக்க என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என ஜப்பான் அதிகாரி ஒருவர் கேட்டார்.

இந்தக் கேள்வியை நான், நாலக சில்வாவிடம் கொண்டு சென்றேன். அது தொடர்பாக ஆராய்ந்தோம். பின்னர் இதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும், உங்களுக்கு என்ன உதவிகள் வேண்டும் என்ற கோரிக்கைகளை கேட்டனர். அதன்போது வாகனங்கள், கமராக்கள், மென் பொருள் உள்ளிட்ட பல விடயங்களை நாம் கூறினோம். அதற்கமையத் தான் கண்காணிப்பு வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டது. ஜப்பான் நாட்டின் வாகனம் அதுவாகும். அது மிகவும் உயரிய தொழில்நுட்ப வசதியைக் கொண்ட கமரா பொருத்தப்பட்டது.

**கே** :ஸஹ்ரானின் அராஜகங்கள் திகன சம்பவத்துடன் அதிகரித்ததா ?

**ப** : ஆம், அதனை வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டனர். ஆதரவும் கூடியது.

**கே** : இவ்வளவு தொழில்நுட்ப வசதிகள் தகவல் இருந்தும் சஹ்ரானை ஏன் கைது செய்யவில்லை ?

**ப** : பல வழிகளில் நடவடிக்கை எடுத்தோம். ஸஹ்ரான் தொடர்பான தகவல்களை பல்வேறு இடங்களில் தேடினோம். முஸ்லிம் அதிகாரிகளை நியமித்தும் தேடினோம்? ஆனால் கிடைக்கவில்லை.

**கே**: என்ன பலவீனமாக இருந்தது? உங்களின் தொழில்நுட்பம் கைகொடுக்கவில்லையா ?

**ப**: அதைப் பயன்படுத்த முடியாது போய்விட்டது

கே : ஏன் ?

**ப** : நாலக சில்வா இடமாற்றம் செய்யப்பட்டார். அவர் இல்லாது சில நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது போனது. சிலவிசாரணைகளில்இருந்த காரணத்தால் எம்மால் வாகனத்தை பயன்படுத்த முடியாது போய்விட்டது

கே : ஏன் வாகனத்தை பயன்படுத்தவில்லை?

**ப** : நாலக சில்வாவுக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதால்.

கே: அதற்கும் வாகனத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது?

ப: விசாரணைக் குழு இந்த வாகனத்தை பயன்படுத்த முடியாது எனக் கூறினார்கள்.

கே : ஏன்?

ப: அதை அவர்களிடம் தான் கேட்க வேண்டும்

கே : யார் அவ்வாறு கூறியது?

**ப** : குற்றப் புலனாய்வு பிரிவு.

**கே** : நீங்கள் ஏன் சாட்சியங்களை ஆராய முயற்சிக்கவில்லை.

**ப** : முயற்சிகள் எடுத்தோம். குறிப்பாக முதல் முறைப்பாடு செய்தவரின் வாக்குமூலம் பெற முயற்சித்தோம்.

**கே** : யார் முதல் முறைப்பாடு செய்தது?

**ப** : காத்தான்குடி மௌலவி ஒருவர்.

கேள்வி : யார் அவர் ?

**ப** : மௌலவி கே.ஆர்.எம்.ஸஹலான்

**கே** : அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தீர்களா?

**ப** : அவர் எழுத்து மூலம் நாலக சில்வாவிடம் கொடுத்தார்

**கே** : அவராகக் கொடுத்தாரா ?

பதில் : ஆம்

**கே** : வாக்குமூலம் பெறவில்லையா?

**ப** : இல்லை, முறைப்பாட்டை எழுத்து மூலம் கொடுத்த காரணத்தால்

**கே** : பின்னர் ஒன்றும் செய்யவில்லையா?

**ப**: சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு 6-7-2017 மற்றும் சிறிது காலம் கடந்தும் இரண்டு கடிதங்கள் அனுப்பினோம்

**கே** : என்ன எதிர்பார்த்தீர்கள் ?

**ப** : தௌஹீத்ஜமாத் அமைப்பை தடுக்கவும் ஸஹ்ரானை கைது செய்யவும் கோரிக்கை விடுத்தோம். இந்தக் காலங்களில்பலவிசாரணைகளைநடத்தினோம். அதில் ஒன்றுதான் ஸஹ்ரான் தொடர்பான விசாரணையாகும்.

**கே** : நீங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிய கோப்பில் குறைபாடுகள் இருப்பது தெரியுமா ?

**ப**: இருந்திருக்கும். ஆனால் எனக்குத் தெரியவில்லை, எமக்கு இருக்கும், கிடைக்கும் தகவல்களைக் கொண்டே அனுப்பினோம்.

**கே** : சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் கூறும்போதும் தகவல்கள் போதாது என்றே கூறினார்களா?

**ப** : எமக்கு கிடைத்த, எம்மிடம் இருந்த தகவல்களைக் கொண்டே நாம் அனுப்பினோம்

**கே** : ஸஹ்ரான் முன்வைத்த கதைகள் குறித்து நீங்கள் பார்த்தீர்கள் தானே ?

**ப**: ஆம்!

கே: அப்போதும் அது தொடர்பான சாட்சியங்களை தேடவில்லையா ?

**ப** : ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இணையத்தில் இருந்த கருத்துக்களை கொண்டே நாம் ஆதாரங்களைத் தேடினோம்.

**கே** : என்.டி .ஜே. அமைப்பை தடுத்திருந்தால் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றிருக்காது என்று தெரியுமா?

**ப** : ஆம்!

கே : அப்படியென்றால் நீங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நெருக்கமான தொடர்பைக் கையாண்டிருக்க வேண்டும்தானே?

**ப**: எமக்கு அவர்கள் கொடுக்கும் ஆலோசனைகளுக்கு அமையவே நாம் அவர்களுடன் நெருங்குவோம். எத்தனையோ கோப்புகள் அனுப்புவோம். பதில் வருவதற்கு நீண்டகாலம் எடுக்கும் .

கே : காரணம் என்ன?

**ப** : வேலைப்பளு அவர்களுக்கும் உள்ளது.

கே: ஆனால், விளைவு மக்களின் உயிரிழப்பு?

**ப**: ஸஹ்ரான் குறித்து நாம் பல காரணிகளைத் தேடி அவரை நெருங்கினோம். ஆனால் எம்மை விட்டு சூட்சுமமாக அவர் தப்பித்துக் கொண்டார். (எ)

# இரண்டு பிடியாணைகள் இருந்தும் ஸஹ்ரானை கைது செய்யாதது ஏன்?

## பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹபீஸ் நஸாட் நவாவி சாட்சியம்

கொழும்பு, ஓக.3

ஸஹ்ரானை கைது செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை வழங்கியிருந்தால் ஸஹ்ரானை பிடித்திருக்கலாம். குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றிருக்காது எனத் தெரிவுக்குழு முன்னிலையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை முற்றாக மறுக்கின்றேன் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹபீஸ் நஸாட் நவாவி நாடாளுமன்ற தெரிவுக்குழு - முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்தார்.

ஒருவர் மீது நியாயமான சந்தேகம் இருந்தால் அதன் அடிப்படையில் பொலிஸாரால் அந்த நபரைக் கைது செய்ய முடியும் என்றும் அவர் சாட்சியமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டபோதே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கோப்பு ஒன்று வருமாயின் எனக்கு அந்தக் கோப்பு வழங்கப்படும். பயங்கரவாதடுப்புப்பிரிவின்பணிப்பாளரின் இறுதி அறிக்கை அடங்கிய கடிதங்கள் சில 2017-06-07 எமக்குக் கிடைத்தன.

2017-06-02ஆம் திகதி எனக்கு அந்த கடிதங்கள் அடங்கிய கோப்பு கிடைத்தது. அதை அப்போது எனது கண்காணிப்பின் கீழ் இருந்த குழுவின் மலீக் அஸீஸிடம் வழங்கினேன். 1998ஆம் ஆண்டிலிருந்து பயங்கரவாத தடுப்புப் பிரிவுடன் இணைந்து பல்வேறு வழக்குகளில் செயற்பட்டுள்ளேன். 2014ஆம்ஆண்டு நெருக்கமாக செயற்பட்டு வருகின்றேன். பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பணிப்பாளருடைய இறுதி அறிக்கையின் அடிப்படையிலேயே அது தொடர்பில் கோப்பொன்றை ஆரம்பித்தோம். அதில் குறிப்பிட்ட நபர் இரண்டு கருத்துக்களைக் கூறியுள்ளார்.

முஸ்லிம்கள் பிறந்தநாளை கொண்டாடுவது தவறானது என்று ஒரு பேச்சிலும், தேசியக் கொடியை ஏற்றுவது இஸ்லாத்துக்கு எதிரானது என மற்றுமொரு பேச்சிலும் கூறியுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு அந்த நபரை கைதுசெய்து விசாரிக்க முடியுமா எனக் கேட்டிருந்தனர். ஏதாவது குற்றம் இழைத்திருப்பதாக ஒருவர் மீது நியாயமான சந்தேகம் இருந்தால் அதன் அடிப்படையில் பொலிஸாருக்கு அந்த நபரைக் கைதுசெய்ய முடியும். ஒருவரை கைதுசெய்ய முடியுமா என சட்டமா அதிபரிடம் கேட்பதாயின், பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒருபடி மேற்சென்றே நடவடிக்கை எடுக்கவேண்டும். வலுவான சாட்சியங்கள் அடங்கிய விசாரணைகள் உள்ளடக்கிய ஒரு பக்கம் கூட இருக்கவில்லை. ஒருவரை கைதுசெய்யுங்கள் என்று சட்டமா அதிபர் பணிப்புரை வழங்குவதாயின் அந்த நபர் தொடர்பில் வலுவான சாட்சி அடிப்படையொன்று இருக்க வேண்டும். விசாரணை அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டே ஆலோசனை வழங்க முடியும்.

**கே** : பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் அனுப்பப்பட்ட கோப்பில் போதிய சாட்சியங்கள் இல்லை. அவர்கள் வழங்கிய காணொலி இணைப்புக்கள் மற்றும் இறுவட்டுகள் போதுமானவை இல்லை எனக் கோரிய கடிதம் இருக்கின்றதா?

**ப** : இல்லை. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு ஒருவரை கைதுசெய்ய வேண்டுமாயின், அல்லது ஒரு இணையத்தளத்தை தடை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியைக் கோரிக்கொண்டிருக்கத் தேவையில்லை. நாம் வழக்குக் கோப்புக்களின் பின்னால் துரத்திக் கொண்டிருப்பதில்லை.

**கே** : சட்டமா அதிபர் திணைக்களத்தில் எந்தவொரு குறைபாடும்இல்லையென்று கூற முடியுமா?

**ப** : இதற்கு ஆம்! இல்லையெனப் பதில் வழங்க முடியாது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஆலோசனை கோரி கோப்பு ஒன்றை எமக்கு அனுப்பியிருந்தனர். 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர்கள் எம்மைச் சந்தித்தபோது முழுமையான தகவல்களுடன் வந்திருந்தனர். ஏன் அவர்கள் அதை முதலில் எமக்கு அனுப்பவில்லை?. திணைக்களத்தின் பக்கத்தில் எந்தத் தவறும் இல்லை. சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். சட்டமா அதிபர் திணைக்களம் ஸஹ்ரானை கைது செய்யுமாறு ஆலோசனை வழங்காமையாலேயே குண்டு வெடித்தது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை முழுமையாக மறுக்கின்றோம். 2017 ஜூன் மாதம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கொழும்பு நீதிவான் மன்றாலும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஸஹ்ரானுக்கு எதிராக இரண்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. (எ)

# கோத்தாவுக்கு சிக்கல்கள் இல்லை

## பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தவித தடையும் கிடையாது என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச போட்டியிடுவதில் எந்தச் சட்டச் சிக்கலும் கிடையாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமை கொண்டுள்ளதால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துசார இந்துனில் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே காஞ்சன விஜேசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ)

## பாலித்த, நிசங்கவுக்கு பிடியாணை

கொழும்பு, ஒக.3

ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ மற்றும் அவன்காட் நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி ஆகியோருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இவர்கள் இருவருக்கும் எதிரான வழக்கு விசாரணைகள் நேற்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

காலி கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்த அவன்காட் மிதக்கும் ஆயுதக் களஞ்சிய சாலையை நடத்திச் செல்வதற்கு அவன்காட் மெரிடைம் சர்விசஸ் நிறுவனத்துக்கு வாய்ப்பு வழங்குவதற்காக 355 இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்கியமை மற்றும் பெற்றுக் கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களே அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. (எ)

### தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க

# அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மத்தியஸ்தம் வகிக்க எந்த நாடு வரும்?

### பொறுத்திருந்து பார்க்கவேண்டும் என்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக. 3



தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க மூன்றாம் தரப்பின் உறுதிமொழியுடனான மத்தியஸ்தம் நல்லது. அதற்கமைய அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒருமித்து முடிவெடுப்பது வரவேற்கப்படக்கூடிய விடயமாக இருந்தாலும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகிக்க எந்தநாடு முன் வரப்போகின்றது? அவ்வாறு வருகின்ற நாடு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமா? என்றும் பார்க்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அரசதலைவர் தேர்தல் தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பிலும் இந்தத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் தமிழ் மக்கள் கூட்டணி முன்வைத்துள்ள யோசனை தொடர்பிலும் கருத்து வெளியிடும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையே இலங்கை அரசு மீறியிருக்கின்ற நிலையில், நடைபெறவிருக்கும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகித்தாலும் அதனை அரசு நிறை வேற்றுமா என்பது சந்தேகமே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் அடுத்த அரச தலைவர் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது சம்பந்தமாக எந்தவித முடிவும் எடுக்கவில்லை. ஏனென்றால் யார் வேட்பாளர் என்பது இதுவரையில் தெரியாது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பில் பலருடைய பெயர்களும் கூறப்பட்டுக் கொண்டிருக்கிறன.

ஆனால் போட்டியிடக் கூடிய வேட்பாளர் தமிழ் மக்களின் பிரச்சினை களை எப்படிக் கையாளர்வார் என்பதனையெல்லாம் ஆராய்ந்துதான் நாங்கள் சரியான முடிவை எடுக்கலாம்.

அடுத்ததாக இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்குப் பன்னாடுகளின் உதவியுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் எழுத்து மூல உத்தரவாதம் வழங்குமிடத்து ஆதரவை வழங்கலாமென்றும் அத்தகைய நிலைப்பாட்டை சகல கட்சிகளும் இணைந்து எடுக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கின்றது.

அதுவொரு நல்ல விசயம். ஆனால் அதில் இருக்கக்கூடிய பிரச்சினைகளில் முதலாவதாக எந்த நாடு இந்த விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்குமென்பது எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு ஒரு நாடு மத்தியஸ்தம் வகித்தாலும் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். ஏனென்றால் கடந்த காலங்களை நாங்கள் பார்த்தால் அதிலும் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்துப் போட்டுக் கொண்டு வந்த இலங்கை இந்திய ஒப்பந்தம் கூட மீறப்பட்டது மாத்திரமல்ல, அந்த ஒப்பந்தத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட பல விடயங்கள் கைவிடப்பட்டன.

அந்த ஒப்பந்தத்தை அரசு சரியாக நடைமுறைப்படுத்தவில்லை. மூன்றாவது மத்தியஸ்தத்தால் மாத்திரம் இந்த அரசுகள் அதனைச் செய்துவிடுமென்று சொல்லமுடியாது. மூன்றாவது தரப்பாக மத்தியஸ்தம் வகிப்பது யார்? அவர் எந்தளவு தூரம் அழுத்தம் கொடுப்பார்? என்ற பல விடயங்கள் இதிலே தங்கியுள்ளது.

அதற்காக இது பிழை என்று நான் கூறவில்லை. தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையாக நாங்கள் அனைவரும் நின்று இதனைச் செய்வோம் என்று கண்டால் அது நிச்சயமாக வரவேற்கப்படக் கூடியது - என்றார். (த-ரி1)



## சமுர்த்தி உரித்துப் படிவம் வழங்கல்

திருகோணமலை,ஒக்.3

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டோருக்கு சமுர்த்தி உரித்துப் படிவம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கும், புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பயனாளிகளுக்கும் சமுர்த்தி உரித்துப் படிவங்கள் வழங்கப்பட்டன.

குச்சவெளி பிரதேச செயலகத்தில் வைத்து துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப்பால் பயனாளிகளிடம் வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-40)

# தோட்டத் தொழிலாளர்களை அரசு ஏமாற்ற முற்படக்கூடாது

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஒக.3

நாளாந்த சம்பளமாக 1000 ரூபா வழங்கப்படும் என்று கூறி தொடர்ந்தும் தோட்டத்தொழிலாளர்களை ஏமாற்றும் செயற்பாட்டை அரசு முன்னெடுக்கக்கூடாது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் அரசிலுள்ள போதும், அவர்கள் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை குறித்து எவ்வித கவலையும் இன்றி இருப்பது வேதனையளிக்கின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களை நான்கரை வருடங்களாக அரசு ஏமாற்றியுள்ளது என்று அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருந்தோட்டத் தலைவர்களே கூறுவது துரதிர்ஷ்டவசமானது - என்றார்.

மகிந்த ராஜபக்சவின் கருத்துக்கு ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும், அமைச்சருமான கயந்த கருணாதிலக்க பதிலளித்தார்.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் 700 ரூபாவாகவும், மேலதிகமாக நாளாந்தம் 50 ரூபா நிலையான கொடுப்பனவாகவும், நாளொன்றுக்கு பறிக்க வேண்டிய தேயிலை கொழுந்துக்கு மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோகிராம் கொழுந்துக்கு 40 ரூபா வீதமும் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை தொழிலாளர்களுக்கு கிடைத்துள்ளது என்று அவர் தெரிவித்தார். (எ)

# 5ஜி கோபுரம் என்றால் பிடுங்கி எறியப்படும்

### நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

வவுனியா, ஒக. 3



வவுனியா, திருநாவற்குளம் விளையாட்டு மைதானப் பகுதியிலுள்ள கோபுரம், தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் 5ஜி தொழில்நுட்பத்துக்கான கோபுரம் என்று உறுதிப்படுத்தப்பட்டு ஆவணம்வழங்கும்பட்சத்தில், அந்தக்கோபுரம் உடனடியாக அங்கிருந்து பிடுங்கி எறியப்படும் என்று வவுனியா நகரசபை உறுப்பினர் சு. காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர சபைக்குட்பட்ட நகர்ப்பகுதிகளான பண்டாரிக்குளம், திருநாவற்குளம் ஆகிய பகுதிகளில் 5ஜி தொழில்நுட்பத்துக்குரியதென்று கூறப்படும் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தைச் சூழவுள்ள குடும்பங்களுக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்படவாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. 5ஜி கோபுர வலையமைப்பால் உடல், உள ரீதியான பாதிப்புக்கள் ஏற்படவாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன என்று ஆய்வுகள் சிலவற்றிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த நிலையில் எமது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கோபுரம் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றிவிடுமாறு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கோரியுள்ளனர்.

இந்த விடயங்கள் குறித்து உறுப்பினர் காண்டீபனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நகரசபை உறுப்பினர் கே. சுமந்திரனிடம் கேட்டபோது, அந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள கோபுரத்தை அகற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

நகரப் பகுதியில் மக்களுக்குத் தீமையை ஏற்படுத்தும் கோபுரம் நகரசபை உறுப்பினர்களின் அனுமதியின்றி அமைக்கப்பட்டு வரும் 5ஜி வலைமைப்பின் கோபுரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. அண்மையில் வவுனியா இறம்பைக்குளம் மயானப் பகுதியில் கோபுரம் அமைப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட வேலை, அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டதுடன் உடனடியாகவே அந்த நிறுவனம் அங்கு கோபுரம் அமைக்கும் பணியைக் கைவிட்டு, வெட்டப்பட்ட குழியையும் மூடிவிட்டுச் சென்றது. (த)

# விடைத்தாள் திருத்தும் பணி மூன்று கட்டங்களாக நடக்கும்

### பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.3

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றின் விடைத்தாள் திருத்தும் பணிகள் 3 கட்டங்களாக மேற்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்தார்.

முதலாம் கட்டம் இந்தமாதம் 28ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரையும், 2 ஆம் கட்டம் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் ஒக்ரோபர் முதலாம் திகதி வரையும், 3 ஆம் கட்டம் அடுத்த மாதம் 24 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 8 ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடைத்தாள் திருத்தும் காலப்பகுதியில் 12 பாடசாலைகள் முழுமையாக வும் 26 பாடசாலைகள் பகுதியளவிலும் மூடப்படும் என்றும் குறிப்பிட்டார். இந்தப் பாடசாலைகள் 3 ஆம் தவணைக்காக அடுத்த மாதம் 16 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இந்த மாதம் 15ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை 39 பாடசாலைகளில் இடம்பெறும்.

இதேவேளை - ஹஜ்ஜு பெருநாளை முன்னிட்டு 9 நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. முஸ்லிம் பாடசாலைகள் இந்தமாதம் 19 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ)

# சிறுவருக்கு எதிரான குற்றங்கள் 7 மாதங்களில் 7,503 வழக்குகள்

கொழும்பு, ஓக.3

வருடத்தின் முதல் 7 மாதங்களில் குற்றவியல் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில், சட்ட மா அதிபர் திணைக்களத்தினூடாக மாத்திரம் 7 ஆயிரத்து 503 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தாக்கல் செய்யப்பட்ட 7 ஆயிரத்து 503 வழக்குகளும் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், 2 ஆயிரத்து 901 குற்றவியல் வழக்குகள் தொடர்பிலும் ஆயிரத்து 881 சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய சட்ட மா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நீதிவான் நீதிமன்றில் ஆயிரத்து 646 வழக்குகளைத் தாக்கல் செய்யவும் அந்த வழக்குகள் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவும் பொலிஸாருக்கும் விசாரணைப் பிரிவினருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, போதுமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாத ஆயிரத்து 75 சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்கும் கடந்த 7 மாதங்களில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தினூடாக 2017 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 102 வழக்குகளும் கடந்த ஆண்டில் 3 ஆயிரத்து 717 வழக்குகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மேல் நீதிமன்றத்தில் 4095 வழக்குகள் தொடர்பில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டன. (எ)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்க நிலை

### கடலுக்குச் செல்வோர் அவதானம்

கொழும்பு, ஓக.3

வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் தாழமுக்க நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கடல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் மத்திய வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் எதிர்வரும் சில தினங்களில் காற்றின் வேகம் அடிக்கடி 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வரையில் அதிகரிக்கக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் கடல் பிரதேசம் அடிக்கடி கொந்தளிப்புடன் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், புத்தளத்தில் இருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையிலான கடல் பிரதேசம் மற்றும் அம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையிலான கடல் பிரதேசத்தில் காற்றின் வேகம் அடிக்கடி 55 கிலோமீற்றர் தொடக்கம் 65 கிலோமீற்றர் வரையில் அதிகரிக்கக்கூடும்.

இந்த பிரதேசங்களில் அடிக்கடி கடல் கொந்தளிப்புடன் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும்பொழுது கடும் காற்று வீசக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்த கடல் பிரதேசம் தற்காலிகமாக கொந்தளிப்புடன் காணப்படக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை குறைப்பதற்காக அவர்களைத் தெளிவுபடுத்தும் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் திலீப்வெத ஆராய்ச்சி கடற்றொழில் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இந்த காலநிலை தொடர்பாக கடற்றொழில் திணைக்களம் வழங்கும் ஆலோசனைக்கு அமைய செயற்படுமாறு அவர் கடற்றொழிலாளர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்வரும் சில தினங்களில் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறு அனைத்து கடற்றொழிலாளர்கள் மற்றும் கடல் நடவடிக்கையில் ஈடுபடுவோரிடம் கடற்றொழில் திணைக்களத்தின் தேடுதல் நடவடிக்கைப் பிரிவால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்புக்கு அமைய கடற்றொழில் திணைக்களத்தின் தேடுதல் நடவடிக்கைப் பிரிவு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. (எ)

# வாய்ச் சவால் விடாது உண்மையைக்கூறுக

### பெரமுனவுக்கு சவால் விடுகிறார் துமிந்த

கொழும்பு, ஓக.3

கோத்தபாய ராஜபக்ச வெளிநாட்டுக் குடியுரிமையை நீக்கியுள்ளார் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்ப்பு கூட்டு எதிர்க் கட்சியினர் வாயளக்காமல், அதற்கான ஆதாரத்தை முடியுமானால் ஊடகங்களில் வெளியிடட்டும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்கக் குடியுரிமையை நீக்கும் நடவடிக்கை இதுவரையில் நிறைவுபெறவில்லை. குடியுரிமையை நீக்கக் கோரி அமெரிக்கத் தூதரகத்தில் ஒப்படைத்த ஆவணங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச் சீட்டையே குடியுரிமை நீக்கப்பட்டதற்கான ஆதாரமாக காட்டி வருகின்றனர்.

அவ்வாறு இல்லையென்றிருந்தால், வெறுமனே வாய்ப் பேச்சுடன் இருந்துவிடாமல், மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (எ)

# எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தயார்

### அமைச்சர் ரிசாட் தெரிவிக்கிறார்

வவுனியா, ஓக. 3

நான் குற்றமற்றவன் என்று அறிவிக்கப்பட்ட பின்னரும் எதிர்கால அரசியலுக்காக சிலர் என் மீது பழி சுமத்துகின்றார்கள். ஆனால் எந்தகைய சவால்களையும் நான் எதிர்கொள்ளத் தயார் என்று வர்த்தக, கைத்தொழில், நீண்டகால அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.



வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி சிலர் அதில் குளிர்காய்கின்றனர் ஒரு சில அரசியல்வாதிகள், அதில் ஒரு சில மதகுருமாரும் சேர்ந்து என்மீது குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து முன்வைத்து வந்தார்கள். 30க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்களை என்மீது சுமத்தினார்கள். அனைத்தும் விசாரணை செய்யப்பட்டு சபாநாயகருக்கு பொலிஸ்மா அதிபர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். அதில் எந்தவித பயங்கரவாதக் குற்றசாட்டும் என் மீது கிடையாது. அப்படியிருந்தும் இன்னும் எனக்கு எதிராகக் கூக்குரலிடுகின்றார்கள்.

அது அரசியல் வங்குரோத்து நிலை. அவர்கள் கொண்டுவருகின்ற எந்தவொரு பிரச்சினையையும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் எதிர்கொள்ளத் தயார். அரசதலைவர் தேர்தலில் தங்களுடைய வேட்பாளர் யார் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்க வேண்டும். அந்த வேட்பாளருக்கு ஆதரவு கொடுப்பதா? இல்லையா? என்பதை எமது கட்சி ஆராய்ந்து முடிவெடுக்கும். எதிர்வரும் 3 ஆம் திகதி எங்களுடைய கட்சியின் உயர்பீடம் கூட இருக்கிறது. அதில் அரசதலைவர் வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாடுவோம் என்றார். (த-ரி4)

# நகர சபையின் தலைவருக்கு 5 ஆண்டுகள் கடூழியச் சிறை

கொழும்பு, ஓக.3

அம்பாந்தோட்டை நகர சபையின் தலைவர் எராஜ் பெர்னாண்டோவுக்கு ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி நேற்று ஹம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு 2014ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டைத் துறை முகத்திற்கு மேற்கொண்ட மேற்பார்வைப் பயணத்தின்போது, போலித் துப்பாக்கி ஒன்றைக் காட்டி, அவர்களை அச்சுறுத்தினார் என்று இவர் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வந்தநிலையில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் ஐந்தாவது பிரதிவாதியான எச்.ஐ விமலசேன என்பவருக்கும் ஐந்து ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு இன, மத நல்லுறவு அவசியம்

### மேல் மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், அதனை வலியுறுத்துவதுமே அமைதி, சமாதானம் மற்றும் சகவாழ்வுக்கான தேசிய மாநாட்டின் பிரதான நோக்கமாகும். உலகளாவிய ரீதியில் தீவிரவாதத்துக்கு எதிராகச் செயற்பட்டு, அதனை இல்லாதொழிப்பதற்கு இன, மதங்களுக்கு இடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவது அவசியமாகும்.



இவ்வாறு மேல்மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார்.

மேல்மாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைதி, சமாதானம் மற்றும் சகவாழ்வுக்கான தேசிய மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வதற்கு வந்த உலக முஸ்லிம் சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி முஹம்மத் அப்துல் கரீம் அல் ஈஸா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பிலுள்ள ஷங்ரிலா விடுதியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு மேல்மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கருத்து வெளியிடும்போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், அதனை வலியுறுத்துவதுமே அமைதி, சமாதானம் மற்றும் சகவாழ்வுக்கான தேசிய மாநாட்டின் பிரதான நோக்கமாகும். உலகளாவிய ரீதியில் தீவிரவாதத்திற்கு எதிராக செயற்பட்டு, அதனை இல்லாதொழிப்பதற்கு இன, மதங்களுக்கு இடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

நாட்டில் இடம்பெறும் அடிப்படைவாதச் செயற்பாடுகளை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம். இது ஒரு பௌத்த நாடு. பௌத்த தர்மம் மற்றும் கலாசாரத்துக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும்- என்றார். (எ)



வீதியில் தரித்து நின்ற முச்சக்கர வண்டி ஒன்று தீப்பற்றியதில் முழுவதும் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் கல்முனை 7 ஹனீபா வீதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்துத் தொடர்பாக கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

# நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தயார்

### சஜித் பிரேமதாச கூறுகின்றார்

கொழும்பு, ஓக.3

நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள தயாராகிவிட்டேன் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஒட்டுமொத்த நாட்டிலும் அரச தலைவர் தேர்தல் தொடர்பிலான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பொறுப்பை இறுதியில் யார் ஏற்றுக்கொள்வார் என்பதுதான் மக்களின் ஒரே கேள்வியாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், நான் ஒரு விடயத்தை வெளிப்படையாகவே கூறியுள்ளேன். அதாவது, இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கிறேன் என்று அறிவித்துவிட்டேன்.

இனிமேல் இந்த விடயத்தில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. யார் எந்தப் பிரச்சினையை எமக்கு ஏற்படுத்தினாலும், எவ்வாறான தடைகள் வந்தாலும் நான் இந்தப் பயணத்துக்குத் தயார் என்பதைப் பொறுப்புடன் கூறிக்கொள்கிறேன் - என்றார். (எ)



# புலிகளின் தென்னந்தோப்பு நேற்றுத் தீப்பற்றி எரிந்தது

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஓக. 3

கிளிநொச்சி, முட்கொம்பனில் சின்னபல்வராயன் கட்டில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தென்னந்தோப்பு நேற்று எரிந்துள்ளது.

போருக்கு முன் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தென்னந்தோப்பு, பத்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் பராமரிக்கப்பட்டு வந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னர் தற்போது தென்னந்தோப்பு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

தென்னந்தோப்புக்கு அருகில் உள்ள காணியின் பற்றைக்கு நபர் ஒருவரால் வைத்த தீ இந்த தென்னந்தோப்புக்கும் பரவியுள்ளது. வறட்சியான காலநிலை மற்றும் காற்று காரணமாக தீ தென்னந்தோப்புக்குள் வேகமாக பரவி, பல தென்னை மரங்களை எரித்துள்ளது என பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உடனடியாக பல தரப்பினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (ஒ.5)

## போர்க்....

'போர்க் காலத்தில் நடந்தவற்றைப் பேசிப் பயனில்லை. எத்தனை காலம் அதைப் பற்றிப் பேசுவது?. பேசிப் பேசி என்ன கிடைத்திருக்கின்றது?' என்று மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பீர்களா? என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி போர் நிறைவுக்கு வந்து ஒரு வருடம் முடிவதற்கு முன் 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி களமிறக்கிய பொதுவேட்பாளரான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கினார்கள். எனினும், அந்தத் தேர்தலில் அவர் படுதோல்வியடைந்தார். போருக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதியை விரும்பிய தமிழர்கள், அந்தப் போரில் பங்கேற்று சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த படையினரை ஏன் வெறுக்கின்றார்கள்? அந்தப் போர் வீரர்களை ஏன் போர்க் குற்றவாளிகள் என்று அழைக்கின்றார்கள்? தமிழர்களின் இந்த வெறுப்பு எதற்காக என்று இன்னமும் எமக்குப் புரியவில்லை. ஆனால், தமிழர்களை நாம் மனதார நேசிக்கின்றோம். நாம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியதும் அரசியல். தீர்வு உட்பட தமிழருக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் படிப்படியாக நிறைவேற்றியே தீருவோம். சிறைச்சாலையில் இருக்கும் அரசியல் கைதிகளுக்கும் விடுதலையைப் பெற்றுக்கொடுப்போம். எந்தக் காரணம் கொண்டும் போர்க்குற்றவாளிகள் என்ற பெயரில் எவரையும் தண்டிக்கவேமாட்டோம். போரின்போது படையினர் எவரும் போர்க்குற்றங்களைப் புரியவில்லை. அவர்கள், அப்பாவித் தமிழ் மக்களை விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து காப்பாற்றி வடக்கு - கிழக்கு என்று ஒட்டுமொத்த நாட்டுக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தார்கள் - என்றார். (ஒ.5,22)

## பால்மா...

மாவின் விலை 15 ரூபாவாலும், 400 கிராம் பால்மாவின் விலை 5 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## சுயநலம்தான்...

தலில் ஏற்படக்கூடும் என்பதாலேயே. ஆனால், சுயநலம் வென்று விட்டது. பொது நலம் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள கேள்வி பதில் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

**தேசியக் கட்சிகளின் வெற்றி**

ஒரே கொள்கையுடையோர் சேராது போனது, இதுவரை காலமும் கொள்கையை முன் வைத்து வாக்குப் பெற்று நாடாளுமன்றத்திற்குச் சென்று கொள்கை மறந்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று அந்தக் கொள்கை மறந்தவர்கள் நினைக்கலாம். ஆனால், எமது மக்கள் வித்தியாசமாகச் சிந்திக்கக் கூடும். நாடாளுமன்றத்திற்கு உள்ளே இதுவரைகாலமும் விடப்படாத கட்சிகளுக்கும் (அவ்வாறு அழைக்கப்படும்) தேசியக் கட்சிகளுக்கும் தமது வாக்குகளைப் பகிர்ந்து கொடுத்து மிக அபாயகரமான ஒரு நிலையை ஏற்படுத்தம் விதத்தில் அவர்கள் சிந்திக்கக்கூடும்.

தேசியக் கட்சிகளும் அவற்றின் பால் சார் கட்சிகளும் தலையெடுத்தால் எமது நிலை தற்போதைய நிலைக்கும் பார்க்க மிகவும் பரிதாபகரமான நிலையை அடையும். வட மாகாணத்தில் தேசியக் கட்சிகளில் இருந்தும் அவற்றைச் சார்ந்த கட்சிகளில் இருந்தும் தெரிவு செய்யப்படப் போகின்றவர்கள் தமிழரே. அந்த வகையில் ஆறுதல் கொள்ள நினைத்தாலும் கிழக்கில் தமிழர் அல்லாதோரே பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

அதன் பின் வடக்கிலும், கிழக்கிலும் பணம் எடுத்து வேலை கொடுக்கும் படலங்களும் தென்னவர்களின் கூடிய முதலீடுகளும், மருத்துவமனைகள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் போன்றவற்றில் கூடிய பெரும்பான்மையினர் உள்ளடக்கங்களும் நடைபெறுவன. அவற்றைத் தேசியக் கட்சிகளும் அவற்றின் சார்புக் கட்சிகளும் தடுக்க முடியாமல் போய்விடும். அவர்கள் வடக்கில் தமிழர்கள் என்றாலும் கிழக்கில் பல் இனத்தவர். அவர்கள் யாவரும் அவர்களின் கட்சியின் தலைமைத்துவத்துக்கு கட்டுப்பட்டே ஆகவேண்டும். அடம் பிடித்தால் பெரும்பான்மையினத் தலைவர்கள் மூலையில் இருத்தி விடுவார்கள்;.

சிறிசேன பதவிக்கு வந்தது தமிழ்ப்பேசும் மக்களின் வாக்கால். இதுவரை அவர் எமது தமிழ் மக்களுக்கான எந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றியுள்ளாரா? எமது தேசியக் கட்சிகளின் தமிழ் உறுப்பினர்களும் அவை சார்ந்த கட்சிகளின் உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு முண்டு கொடுக்கவேயன்றி தமிழர்தம் நியாயமான கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த இலாயக்கற்றவர்களாகவே இருப்பர்.

**மயக்க நிலைமை**

தமிழரின் வருங்காலம்சார் கொள்கையில்; ஒருமைத்துவம் கொண்ட மக்கள் பிரதிநிதிகள் கணிசமானவர்கள். இனிவரப் போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவார்களா என்றால் தற்போதைய நிலையில் ஒருவித மயக்க நிலைதான் காணப்படுகின்றது. அடுத்த தேர்தலுக்கு முன்னர் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது எனது கருத்து. அதாவது தற்போதிருக்கும் அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநித்துவம் கணிசமானது.

**கூட்டமைப்பு மாறுகிறது**


அதன் தலைவர்களின் பேச்சுக்கள் அண்மைக்காலமாக நாம் இதுகாறும் வலியுறுத்தி வந்தவற்றைப் பிரதிபலிப்பனவாகத் தென்படுகின்றன. உதாரணத்துக்கு அண்மையில் ஒருவர் தமிழர்கள்; வெறும் பொருளாதார நன்மைகள் பெறுவதால் எமது அரசியல் ரீதியான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது போய் விடும் என்ற கருத்தை முன் வைத்துள்ளார். அவ்வாறான சிந்தனைகள் வரவேற்கத்தக்கன. அவற்றின் நீட்சியாக தற்போது நாடாளுமன்றத்தில் வலுவான பிரதிநித்துவம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் ஏன் தமது தொகையினரை வைத்து சில பல காரியங்களை இயற்ற முடியாது என்ற கேள்வி எழுகின்றது.

தற்போதிருக்கும் நாடாளுமன்றம் இன்னும் சில மாதங்கள் நீடிக்கப்போகும் நிலையில் எமது மக்களுக்குத் தேவையான பலவற்றை ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சேர்ந்து அரசு பேரம் பேசி பெற்றுக்கொள்ளக்கூடாது என்ற கருத்தை முன் வைக்கின்றேன். தற்போதிருக்கும் 16 பேரைக் கொண்டதொரு தமிழர் சார் கட்சியின் அங்கத்தவர்களாக எமது பிரதிநிதிகள் வருங்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட முடியாதென்றால் ஏன் அவர்கள் இப்போதிருந்தே அரசை நெருக்கி ஒரு சிலவற்றையேனும் பெற முடியாது என்ற கேள்வி எழுகின்றது. கல்முனையில் தோல்வியடைந்தவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்தும் தோல்வியடையும் என்று எதிர்பார்க்காமல் தற்போது சேர்ந்திருக்கும் எம்மவர் எமது மக்களுக்கான மிக அவசரமான பல விடயங்களை அரசிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்றுள்ளது. (ஒ.5)

## அபிவிருத்திப்...

2 ஆயிரத்து 300 மீற்றர் நீளமான ஓடுபாதையும் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், பிராந்திய மட்டத்தில் வணிக வானூர்தி நிலையங்களை இயக்குவதற்கு, பலாலி, மட்டக்களப்பு, இரத்மலானை ஆகிய மூன்று உள்நாட்டு வானூர்தி நிலையங்




களையும் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த மூன்று வானூர்தி நிலையங்களும், பிராந்திய வானூர்திப் போக்குவரத்துகளை மேற்கொள்வதற்கு, இந்த வானூர்தி நிலையங்களில் எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நிறுவும் திட்டத்துக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கையின் எல்லைக் கட்டுப்பாடுகள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், ஆயத் திணைக்களம் என்பனவற்றினால் செயற்படுத்தப்படுகின்றன.

பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து அடுத்த மாதம் இந்தியாவுக்கான வானூர்திச் சேவைகள் இடம்பெறவுள்ளன. (ஒ.5)

## பருத்தித்துறை...

காவடிகள் பருத்தித்துறை வீதியூடாக மாத்திரமே உட்செல்ல அனுமதிக்கப்படும் என்று யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் அறிவித்துள்ளார்.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உற்சவகால முன்னாயத்தமாக நாளை மறுதினம் திங்கட் கிழமை மதியத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி நள்ளிரவு வரை வீதித் தடை நடைமுறைப்படுத்தப்படும். வீதித்தடையின் போது வாகன போக்குவரத்துக்கான மாற்றுபாதை ஒழுங்குகள் கடந்த ஆண்டுகளைப் போல இம்முறையும் நடைமுறைப்படுத்தப்படும். தேசிய பாதுகாப்பு என்பது முற்றிலும் பாதுகாப்பு பிரிவோடு சம்பந்தப்பட்டமையால் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப அடியார்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. இதேவேளை, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சுற்றாடலிலுள்ள குடியிருப்பாளர்கள் தமது வளர்ப்பு நாய்களை உடனடியாக கட்டி வளர்க்குமாறு ஒலிபெருக்கி மூலம் யாழ்ப்பாண மாநகர சபை அறிவித்துள்ளது. கட்டாக்காலியாக நடமாடும் நாய்களை மாநகர சபை இன்னும் ஒரு சில நாள்களில் பிடிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பிடிக்கப்படும் நாய்கள் யாவும் மிருக வைத்திய திணைக்களத்தால் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படும். இந்த நாய்களை பளையில் உள்ள நாய்கள் காப்பகத்துக்கு அனுப்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ.5,105,17)

## இந்திய....

யின்றி படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் நேற்று நினைவுகூரப்பட்டனர். 'வல்லைப் படுகொலை' என்று அழைக்கப்படும், வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற படுகொலையில் சாவடைந்த மக்களே நினைவுகூரப்பட்டனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற நினைகூரலில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் கோ.கருணாணந்தராசா, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

**வரலாறு**

1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி, வல்வெட்டித்துறையில் இருக்கும் ஊரிக்காடு, பொலிகண்டி இராணுவ முகாம்களிலிருந்து புறப்பட்ட இந்தியப் படையினர் அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்தனர். 2ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து 3 தினங்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு இந்தியப் படையினர் தமது வெறியாட்டத்தை நடத்தினர். 63 பொது மக்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர். இதில் பலர் நிலத்தில் கிடத்தப்பட்டு முதுகில் சுடப்பட்டிருந்தனர். 123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன. 45 கடைகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. வல்வை சனசமூக நிலையம் (நூலகம்) தீயிடப்பட்டிருந்தது. 176 மீன்பிடி வள்ளங்கள் எரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 30ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. (ஒ.5,26)

## இந்தோனேசியாவில்...

ஆபத்தில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் சுமத்ரா தீவில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. (ஒ.5)

## விபத்தில்...

டனர். அவர்கள், போலி இலக்கத் தகடுகளைப் பொருத்தியவாறும் தலைக்கவசத்துக்கு சலோரேப் ஒட்டி மறைத்தவாறு உந்துருளியில் வந்தனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் ஆலய பின் வீதியில் துர்க்கா மணிமண்டபத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

வீதியால் பயணித்த ஐஸ்கிறீம் வானுடன் உந்துருளி மோதி விபத்து இடம்பெற்றது.

உந்துருளியில் பயணித்தவர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தொலைபேசியில் வேறு ஒருவரைத் தொடர்பு கொண்டு சம்பவ இடத்துக்கு வருமாறு அழைத்துள்ளார்.

அத்துடன், சம்பவ இடத்துக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸாரும் வந்துள்ளனர். அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்த போது அங்கு மற்றொரு உந்துருளியில் இருவர் வந்திறங்கினர்.

அவர்கள் பயணித்த உந்துருளியின் முன் பக்க இலக்கத் தகடு டபிள்யூ பி என மேல் மாகாண பதிவு இலக்கமாகவும் பின்பக்க இலக்கத் தகடு சிபி என மத்திய மாகாண பதிவு இலக்கமாகவும் காணப்பட்டது. அதனை ஆராய்ந்த போது, இலக்கத் தகடுகளை மோசடியாக மாற்றி செய்தமை கண்டறியப்பட்டது. அத்துடன், இளைஞர்கள் இருவரில் ஒருவரின் தலைக்கவசத்தின் முகப்புக் கண்ணாடி, கறுப்பு சலோரேப்பால் ஒட்டி மறைக்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டது. அதனால் இளைஞர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ஒ.5,3





## ஒசாமா பின்லேடனின் மகன் அச்சுறுத்தலாக இருந்தார்

### அமெரிக்க அதிபர் தெரிவிப்பு



வோஷிங்டன்,ஓக.3
அல் கொய்தா ஆயுத அமைப்பின் தலைவர் ஒசாமா பின் லேடனின் மகன் ஹம்ஸா பின்லேடன் அமெரிக்காவுக்கு மிகுந்த அச்சுறுத்தலாக இருந்தார் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். ஆனால், ஹம்ஸா பின் லேடன்கொல்லப்பட்டாரா என்ற கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு அவர் மறுத்தார்.

ஒசாமாபின்லேடனைஅமெரிக்காகொன்றபின்னர், அவரின் மகன்ஹம்ஸாபின்லேடன்அமெரிக்காவுக்குஅச்சுறுத்தலாக இருக்கிறார் என்று கூறிவந்தது அமெரிக்கா. ஹம்சாபின்லேடன் அமெரிக்காவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையிலான காணொலிகளும் வெளியாகின.

ஹம்ஸா பின்லேடன் குறித்து தகவல் அளித்தால் 10 லட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் என கடந்த பெப்ரவரி மாதம்அமெரிக்கா அறிவித்தது. இந்தநிலையில், கடந்தபெப்ரவரி மாதத்துக்கு முன்பாகவே ஹம்ஸா பின்லேடன் கொல்லப்பட்டார் என அமெரிக்க ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்திவெளியிட்டன. இந்த நிலையிலேயே ட்ரம்ப், அமெரிக்காவுக்குக் ஹம்ஸா பின்லேடன் மிகுந்த அச்சுறுத்தலாக இருந்து வந்தார் எனத் தெரிவித்தார்.



## பெண்கள் வெளிநாடு பயணிப்பதற்கு ஆண்களின் அனுமதி தேவையில்லை

### கட்டுப்பாட்டைத் தளர்த்தியது சவூதி

றியாத்,ஓக.3
ஆண்களின்அனுமதி இல்லாமல்வெளிநாட்டுக்குப்பயணம் செல்வதற்குச்சவூதிப்பெண்களுக்கு அனுமதியளித்தது அந்த நாட்டு அரசு. இதன்படி சவூதிக்கு வெளியே செல்ல விரும்பும் சவூதியின்எந்தகுடிமகளும், விண்ணப்பம்அளித்தால்அவர்களுக்கான நுழைவிசைவு வழங்கப்படும் என்று சவூதி தெரிவித்தது.


ஆண்களின் அனுமதியின்றிஎந்தவொரு பெண்ணும்சவூதியில் வெளியே நடமாடமுடியாது என்று இதுவரை இருந்து வந்த பாரம்பரியம் மற்றும் சட்டங்கள் இதன்படி புற மொதுக்கப்பட்டன. இனிச்சவூதியில்21வயதைதாண்டியஎந்தவொரு பெண்ணும் அவர்களுடைய காப்பாளரின் அனுமதி இல்லாமல், வெளி நாடுகளுக்குப் பயணம் செய்யலாம். இதற்குச் சவூதியில், பெண்கள் அமைப்புகள் பெரும் வரவேற்பளித்தன.

சவூதியில்கடந்தசிலஆண்டுகளாகப்பெண்களின்முன்னேற்றத்துக்காகச் சவூதி மன்னர் சல்மானும், சவூதி இளவரசர் முகமதுபின்சல்மானும்பல்வேறுநடவடிக்கைகளைஎடுத்து வருகின்றனர்.

அதில் ஒரு பகுதியாக பெண்கள் மகிழுந்து ஓட்டுவதற்கான தடை நீக்கத்தை 2017 ஆம் ஆண்டில் சவூதி மன்னர் சல்மான் பின் அப்துலாஜிஸ் அல் சவுத் நடைமுறைப்படுத்தினார். விளையாட்டு மைதானங்களுக்குச் செல்லவும், வானூர்திநிலையங்கள், தொலைக்காட்சிநிலையங்களில் பணியாற்றவும் பெண்களுக்கு அங்கு அண்மையில் அனுமதியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய நாடுகளால் அநீதி போருக்கு நாங்கள் தயார்

### ஈரான் அதிபர் தெரிவிப்பு




**தெஹ்ரான், ஓக.3**
**நியாயமானதீர்வுஒன்றுஏற்படாவிட்டால் போர் புரியவும் தாங்கள் தயார் என்று ஈரான்அதிபர்ஹசன்ரவுகனிதெரிவித்தார்.**

கடந்த வியாழக்கிழமை ஈரானின் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாங்கள்பேச்சுகள் ஊடாகவோ, அல்லது ஒப்பந்தங்கள் ஊடாகவேஎங்களின்பிரச்சினை முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கவில்லை. ஐரோப்பியநாடுகள் அணு ஆயுதவிவகாரத்தைத் தங்களுக்குச் சாதமாகப் பயன்படுத்திச் சுயநலமாகச்செயற்படுகின்றன. தவிர அமெரிக்க ஈரான் மீது விதித்த பொருளாதாரத் தடையை நீக்குவதற்கான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. வர்த்தக ரீதியில்எங்கள்நாட்டுக்குச்சாதகமான எந்த உதவியும் ஐரோப்பிய நாடுகளால் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் அதன் போது மேலும் தெரிவித்தார்.

**பின்னணி**
ஜேர்மனி, பிரான்ஸ், சீனா, ரஷ்யா, அமெரிக்க, பிரிட்டன்போன்றபலநாடுகளுடன்ஈரான், அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டது. இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சென்றஆண்டுவெளியேறினார். அத்துடன்ஈரான்மீதுபொருளாதாரத்தடைகளைவிதித்தார். குறித்த அணு ஆயுத ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ்உட்பட்டநாடுகளிடம்தங்கள் நாட்டின் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஈரான் கோரியது. பொருளாதாரத்தடைநீக்கப்படாவிட்டால்குறித்த ஒப்பந்தத்தைமீறி, யுரேனியச்செறிவை அதிகரிக்கப் போவதாகக் கூறியது ஈரான். ஐரோப்பிய நாடுகள் பேச்சுகளுக்கு முன்வராத சூழலில் தனது யுரேனியச் செறிவை அதிரடியாக அதிகரிக்க அறிவித்தது. இப்போது அமெரிக்கா, ஈரான், பிரிட்டன் என்ற நிலையில் முறுகல் தொடர்கிறது.



## வெனிசுலா அரசு கவிழ்க்கப்படும் உறுதிபடத் தெரிவித்தார் ட்ரம்ப்



வோஷிங்டன். ஓக.3
வெனிசுலாவைத் தனிமைப்படுத்தி, அதன் சகல நடவடிக்கைகளையும் முடக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் கடந்த வியாழக்கிழமை நடந்த பன்னாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

வெனிசுலாவின் தற்போதைய அதிபர் நிக்கோலஸ் மதுரோவைப்பதவிநீக்கம் செய்வது தனது நோக்கம் என்றும்இதன்போதுட்ரம்ப் தெரிவித்தார். அத்தோடு வெனிசுலாவுக்கு எதிராக எந்த இராணுவ நடவடிக்கைகளிலும் அமெரிக்கா ஈடுபடாது என்றும் அவர் இந்தச் சந்திப்பின் போது கூறினார்.

**பின்னணி**
அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடிய வெனிசுலாவின் முன்னாள் அதிபருக்கு அடுத்து, அந்த நாட்டு அதிபரானார் நிக்கோலஸ் மதுரோ. மறுபடியும் தேர்தல் மூலமாக அவரேவெனிசுலாஅதிபரானார்.

அவர்தேர்தலில்முறைகேடாகவெற்றிபெற்றார்எனக் கூறி, அமெரிக்காவுக்குச் சார்பானவராக இனங்காணப்படுகிற அந்த நாட்டின் எதிர்க் கட்சித்தலைவர் குவன் குவைடோ மதுரோவுக்குஎதிராகப்போராட்டங்களை மேற்கொண்டு வருகிறார். அவருக்கு மேற்குலக நாடுகள் சிலவும் ஆதரவுவளங்குகின்றன.

ரஷ்யா, சீனா, ஈரான் போன்ற நாடுகளின் பக்கப் பலத்துடனும், தனது நாட்டின் பாதுகாப்புப்படைகளின் ஆதரவோடு மதுரோ தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளப் போராடுகிறார்.

இந்த அரசியல் நிலையற்ற தன்மையாலும் ஏலவே அங்கு நிலவிய பொருளாதாரக் கொள்கைகளாலும் வெனிசுலா மக்கள் பசி, பட்டினி என அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது

இந்தோனேசியாவின் சுமத்ராதீவில்நேற்றுவெள்ளிக்கிழமை மாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆகப் பதிவாகியது. தெலுக் பிடங் நகரத்திலிருந்து227கிலோ மீற்றர்தூரத்தில்கடலில்59 கிலோ மீற்றர் ஆழத்தில் இது ஏற்பட்டது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள்குறித்ததகவல் ஏதும் உடனடியாக வெளிவரவில்லை. 2004 ஆம் ஆண்டில்இந்தோனேசியாவிலுள்ள சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட சுனாமியால் பெருமளவானோர் சாவடைந்தமைகுறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் போர் நிறுத்தம்

சிரியாவில் ஆயுததாரிகளின்பகுதியில்வான்வழித் தாக்குதல்கள் நடத்துவதை நிறுத்தியுள்ளதாகச் சிரிய அரசு அறிவித்தது.

ஆயுததாரிகளின் கட்டுபாட்டுப் பகுதியான இட்லிப் மாகாணத்தில் கடந்த சில மாதங்களாகக் கடும் தாக்குதலை அரசபடைகள் நடத்தின. இந்த நிலையில் போர் நிறுத்தத்துக்கு அரசு தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்தே வான்வழித் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன.

# காஷ்மீர் விவகாரத்தில் நடுவராக நான் தயார்

## ட்ரம்ப் மீண்டும் தெரிவிப்பு

வோஷிங்டன்,ஓக.3

இந்தியா - பகிஸ்தானிடையே நிலவுகின்ற காஷ்மீர் விவகாரத்தில் நடுவராகச்செயற்படுவதற்கு நான் தயார் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெரிவித்தார். பத்திரிகையாளர்கள் சந்திப்பு ஒன்றிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிதான் நான் நடுநிலை ஏற்பது குறித்து முடிவு எடுக்க வேண்டும். நீண்டகாலமாகஇருக்கும்காஷ்மீர்பிரச்சினையில் எவராவது மத்தியஸ்தம் செய்து உதவினால், இரு நாடுகளும் நல்லதீர்வைப்பெறமுடியும். நான்காஷ்மீர்பிரச்சினைக்குத்தீர்வு காண விரும்புகிறேன். இரண்டுநாடுகளும்என்னை நடுவராகச் செயற்பட அழைத்தால், நான் கட்டாயம் தலையிட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்- என்று மேலும் தெரிவித்தார் ட்ரம்ப்.

**பின்னணி**

பாகிஸ்தானின் தலைமை அமைச்சரானதிலிருந்து இம்ரான் கான் இந்தியாவுடன் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முயற்சிக்கின்றார். ஆனால், பேச்சுக்களுக்குப் பின்வாங்கு கிறது இந்தியா. அதேநேரம் பாகிஸ்தானில் இருந்து செயற்பட்டு வருகிற ஆயுத அமைப்புகளை ஒடுக்குமாறு கோருகிறது.

இந்தநிலையில், கடந்தவாரம்அமெரிக்காவுக்குப் பயணித்த இம்ரான் கான், ட்ரம்ப்பைச்சந்தித்துப்பேசினார். அதன் பின்னர் பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதில் அளித்த ட்ரம்ப், காஷ்மீர் பிரச்சினையில் என்னால் உதவ முடியும். இரண்டுநாடுகளும்விரும்பினால், காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யும்நபராகஇருக்கவிரும்புகிறேன். ஜப்பானில் நடந்த ஜி20 மாநாட்டின் போது, இந்தியத் தலைமை அமைச்சரைச் சந்தித்துப்பேசினேன். அப்போது, காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யும் நபராகச் செயற்படமுடியுமா என்றுமோடிஎன்னிடம்கேட்டார் எனத் தெரிவித்தார்.

பின்னர்மோடிஅவ்வாறுகோரவில்லை என்று இந்தியத் தரப்பிலிருந்து விவாதங்கள் கிளம்பின. காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாவது நாடு தலையிடுவதை விரும்பவில்லைஎன்றுஇந்தியத்தரப்பு மேலும் தெரிவித்தது. இந்த நிலையிலேயே ட்ரம்ப் மீண்டும் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

# பாகிஸ்தானுடன் மட்டும்தான் காஷ்மீர் பற்றிப் பேசுவோம்!

## இந்தியா தெரிவிப்பு

புதுடெல்லி,ஓக.3



காஷ்மீர் விவகாரம் பற்றிய எந்தவிடயமானாலும்பாகிஸ்தானுடன்மட்டும்தான் பேசப்படும் என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார். இதுகுறித்துஅமெரிக்கஅதிபர் ட்ரம்ப் தெரிவித்தமைக்குப் பதிலடியாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தியா-பாகிஸ்தான்இடையிலானகாஷ்மீர்பிரச்சினையில் இரு நாடுகளும் கேட்டுக்கொண்டால் மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று அதிபர் ட்ரம்ப் மீண்டும் கூறியுள்ள நிலையில், தாய்லாந்தில் நடக்கின்ற கிழக்கு ஆசிய நாடுகள் அயலுறவு அமைச்சர்களின் 9ஆவது மாநாட்டிலும், ஆசியப்பிராந்தியக்கூட்டமைப்பின் 26ஆவது மாநாட்டிலும் பங்கேற்ற ஜெய்சங்கர், குறித்த மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோவிடம் பேசிய போதே 'காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுடன் மட்டுமே பேச்சு நடத்துவோம், இந்த இரண்டு நாடுகள் மட்டுமே பேச்சு மேடையில் இருக்கும்-எனத் தெரிவித்தார்.



# காஷ்மீரில் அதிக படை இந்தியா அறிவிப்பு

## பதற்றத்தில் மக்கள்

புதுடெல்லி,ஓக.3

கூடுதலான படைகள் காஷ்மீருக்கு அனுப்பப்படும் என்று இந்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. இதனால் காஷ்மீர் மக்கள் பதற்றத்தில் உள்ளனர். காஷ்மீர் பகுதிக்குத் துணை இராணுவப் படைகள் கூடுதலாக அனுப்பப்படும் என்ற இந்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவு கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி வெளியாகியதில் இருந்து மக்களின் இந்தப் பதற்றம் தொடர்ந்தது. பொது வெளியில் பரவும் இந்தத் தகவல்களால் காஷ்மீர் மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் முடங்கின.

இதனால்மக்களின்இயல்புவாழ்க்கைபாதிக்கப்பட்டது. இந்த நிலையில் காஷ்மீருக்கு 10 ஆயிரம் துணை இராணுவப்படையினர் அதிகமாக அனுப்பப்பட்டுள்ளனர் என்று இந்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது. அந்தப் பகுதிமக்களிடையேஏற்பட்டிருந்தபதற்றம்இதனால்மேலும் நீடிக்கிறது.



யேமன் இராணுவத்தில் புதிதாக ஆள்சேர்ப்புச்செய்யப்பட்ட சிப்பாய்களுக்கான பட்டமளிப்புவிழா, அங்குள்ள ஏடன் நகரில்நடந்தது. அதன்போதுஇராணுவஅணிவகுப்புமீதுஏவுகணைத்தாக்குதல்நடத்தப்பட்டது. அதன்பின்னரான நிலையை ஒளிப்படமாகப் பதிவு செய்தார் பன்னாட்டு ஊடகமான 'ரெய்டர்ஸ்' இன் செய்தியாளர் ஒருவர்.



# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நல்லசெயல்களை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவதால் மட்டுமே, எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். சீரான அளவில் பணவரவு பெறுவீர்கள்.

**இடபம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும்.உங்கள் செயல் திறனை, பிறர் உணர்ந்து பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து, வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும்.

**மிதுனம்:** வழக்கத்துக்கு மாறான பணி தொந்தரவு தரலாம்.செயல் நிறைவேறக் கூடுதல் கவனம் உதவும்.தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டதிட்டம் தவறாமல்பின்பற்றவும்.சிக்கனச்செலவு

**கடகம்:** நட்பின் பெருமையை உணருவீர்கள். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில்ஒற்றுமைவளரும்.

**சிம்மம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் பேச வேண்டாம்.மனஅமைதியை பாதுகாப்பதால், செயல்கள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை சரி செய்வீர்கள்.

**கன்னி:** உங்கள் நண்பரிடம் சொந்த விஷயங்களை பேசுவீர்கள்.நல்ல தீர்வுக்கான ஆலோசனை கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு எளிதில் நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**துலாம்:** சமூகத்தில் உங்களைப் பற்றி நல்ல மதிப்பீடு உருவாகும். நண்பரிடம் கேட்ட உதவி எளிதாக கிடைக்கும். தொழில்,வியாபாரத்தில்வளர்ச்சிப்பணி நிறைவேறும். வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** சிறு செயலும் உங்களுக்கு கடினமாகத் தோன்றலாம்.குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் பாதுகாக்கவும்.

**தனுசு:** உங்கள் மனதில் இனம் புரியாத சஞ்சலம் ஏற்படலாம்.நண்பரின் ஆலோசனை நல்வழியில் செயற்பட ஊக்கம் தரும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் உண்டு.

**மகரம்:** செயல்களில் சமூக பொறுப்புணர்வு கலந்திருக்கும். இதனால் நல்லோர்கள் விரும்பி அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி, திட்டமிட்டபடி நிறைவேறும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் நியாயம் நிறைந்திருக்கும்.பலரும், உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சி சீரான முன்னேற்றம் தரும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். அன்றாட பணிகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவான மந்தநிலை மாறும்.





### தேசிய ரீதியில் இடம்பெற்ற

# குத்துச் சண்டைப் போட்டியில் 7 வயது மாணவன் சாதனை

வடக்கு மாகாணத்தின் மிகக்குறைந்த வயதில் குத்துச்சண்டை யில் தங்கப்பதக்கம் வென்ற சாதனையாளன் ஆர். கே. மைக்கல் நிம்றொத்துக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியில் இரண்டாம் தரத்தில் கல்வி பயிலும் 7 வயது மாணவன் ஆர்.கே. மைக்கல் நிம்றொத் 2019 ஜூன் மாதத்தையில் இடம்பெற்ற தேசிய ரீதியிலான குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கத்தை சுவீகரித்ததுடன், 15 இலிருந்து 20 கிலோகிராம் உட்பட்ட எடைப்பிரிவில் 2019ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை சம்பியனாக அறிவிக்கப்பட்டார்.

தேசிய ரீதியில் நடைபெற்ற 'கிக் பொக்சிங்' குத்துச்சண்டையில் கலந்து கொண்டு தங்கப்பதக்கத்தை வென்று வடமாகாணத்துக்கும், கல்வி கற்றும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்த மாணவனின் சாதனையை பாராட்டி மதிப்பளிக்கும் முகமாக கல்லூரி அதிபர் பூபாலசிங் கம் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அதிதிகள் இந்தச் சிறு வயதில் சாதனை புரிந்த மாணவனை அரச தலைவர் பாராட்டி மதிப்பளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். அந்த மாணவனை சந்தித்து பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

இந்த மாணவன் வடக்கு மாகாணத்தின் வூசூ பொக்சிங் பயிற்றுவிப்பாளரும், ஏழாம் அறிவு தற்காப்பு கலை சங்கத்தின் தலைவருமான எஸ்.நந்தகுமாரின் மாணவனாவார். (ரி-1)

### தடகளப் போட்டியில் வெற்றியீட்டிய

# தனுசியாவுக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்.ஓக.3

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையில் அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மாகாண மட்ட தடகளப் போட்டியில் பங்குபற்றிய வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலய மாணவி ஜெ.தனுசியா 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்றமைக்காக பாடசாலை சமூகத்தினரால் மதிப்பளிக்கப்பட்டார்.

முன்னதாக பாடசாலை பாண்ட் வாத்திய இசையுடன் ஜெ.தனுசியா பாடசாலையின் பிரதான மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டார். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக் கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சி.பத்மநாதன் கலந்து கொண்டார். ஜெ.தனுசியாவின் பயிற்றுனர் நவநீதனுக்கும் மதிப்பளிக்கப்பட்டது. (23)







# ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஓக.3

வசவிளான் மத்திய கல்லூரியின் கனடா நாட்டில் வாழ்கின்ற பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட பளுதூக்கும் பயிற்சி நிலைய ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை கல்லூரி அதிபர் வி.ரி.ஜயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவுநர் வேலாயுதம் கணேஷ் கலந்து நிலையத்தை திறந்து வைத்தார். (23)

# பாடும்மீன் – குறிஞ்சிகுமரன் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம்,ஓக.3

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் 'சுப்பர் 8' அணிக்களுக்கு இடையிலான ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குறிஞ்சிகுமரன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (23)

# இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஓக.3

வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம் தூய அன்னாம்மாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு நடத்தும் அமதி கொண்சால் வேஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மூன்றாம் பிட்டி சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஓக.3

இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அமரர் அப்புத்துரை தம்பிராசா ஞாபகார்த்தமாக வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 7.30மணிக்கு இடம் பெறவுள்ளன. இதில் தாவடி காளி அம்பாள் விளையையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,ஓக.3

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் 'சுப்பர் 8' அணிக்களுக்கு இடையிலான ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அன்னை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்.ஓக.3

தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான திறந்த வயதுப் பிரிவினருக்கான பளுதூக்கல் போட்டி நடைபெறவுள்ளன. இதற்கான தெரிவு போட்டிகள் இன்று சனிக்கிழமை கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (422)

---

யாழ்ப்பாணம்.ஓக.3

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரச திணைக்களங்கள். மற்றும் வடக்கு மாகாண ரீதியாக நடத்திய மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய புதிய விளையாட்டு மைதானததில் இடம் பெறவுள்ளன. இதில் அரச திணைக்களங்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்டச் சுகாதார திணைக்கள அணி மோதவுள்ளது. வடக்கு மாகாண ரீதியான இறுதியாட்டத்தில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு விருந்தினார்களாக துரைசிங்கம் புவனேந்திரன், நகராஜா அஞ்சுபிற், அஜந்தன் தட்சாயிணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

---

யாழப்பாணம்.ஓக.3

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர் உதயச்சந்திரன் உஜாந்தா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான மின்ஒளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான மின்ஒளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இதில் 'பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்துநல்லூர் நொதேன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மாரட்சி ரீதியாக நடத்தும் தனஞ்சேயன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் பங்குபற்று 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சன்க்கிழமை காலை 9 மணிக்கு கைதடி சரஸ்வதி சனசமூ நிலைய மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இந்த மென்பந்தாட்டத் தொடரில் 30 கழகங்கள் பங்கு பற்றுகின்றன. (23)

## வடமாகாண ஆணழகன் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஒக.3
வடக்கு மாகாண ஆணழகன்களுக்கு இடையிலான போட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தப் போட்டியானது இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என்று உடல் கட்டழகு மற்றும் உடற் தகைமைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



தீவிர பயிற்சியில் ஈடுபடும் யுவன்டாஸ் அணி வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ.

யுவேந்திர சாகலுக்கு

## கிரிக்கெட்டுக்கான கற்றல் செஸ்ஸிலிருந்து பிறந்தது

தந்தை பெருமிதம்

இந்திய அணியில் முக்கிய துருப்புச் சீட்டாக சுழற்பந்து வீச்சாளர் யுவேந்திர சாகல் விளங்குகின்றார். இவர் தனது சிறு வயதில் இந்தியாவின் செஸ் சம்பியனாக இருந்துள்ளார். இந்தத் தகவலை அவரது தந்தை வெளியிட்டுள்ளார்.
இது குறித்து அவர் தெரிவிக்கையில்;
சாகலுக்கு ஆறு வயதிலேயே செஸ்ஸை அறிமுகம் செய்துவிட்டேன். மையை வெளிப்படுத்திய போதிலும் மகனின் முதல் விருப்பம் கிரிக்கெட்டே.
அவனிடம் எதனையாவது சாதிக்கவேண்டும் என்ற வெறி காணப்பட்டது. எனது மகன் இன்று இந்த நிலையிலிருப்பதற்கு இதுவே காரணம்.
செஸ் என்பது மூளையை, மனதை பயன்படுத்தி விளையாடும் தீவிரமான மற்றும் கடுமையான விளையாட்டு. சாகல் வழ



அவர் ஆக்கபூர்வமான விடயமொன்றில் கவனம் செலுத்தவேண்டும் என்பதே எனது முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது .
சாகல் 2003 ஆம் ஆண்டு இந்தியாவுக்காக பன்னாட்டு போட்டிகளில் பங்கெடுத்தான். எனினும் செஸ்ஸில் இத்தனை திறமைக்கு மாறாக சிந்திப்பதற்கான திறனை அவன் அதிலிருந்தே பெற்றான்.
தனது பந்தில் சிக்சர் அடிக்கப்பட்டாலும் அமைதியாகயிருந்து விட்டு மீண்டும் சிறப்பாக பந்து வீசுவதற்கான திறன் செஸ் விளையாட்டிலிருந்தே மகனுக்கு கிடைத்தது - என்றார்.

# நான் கிரிக்கெட்டுக்காக மீண்டு வந்துள்ளேன்

ஸ்மித் பெருமிதம்



நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவேனா எனத் தெரியாத நிலையிருந்தேன் என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் தெரிவிக்கையில்;
ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டியில் கடுமையாகப் போராடி 144 ஓட்டங்களைப் பெற்றேன். நான் மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவேனா எனத் தெரியாத நிலையிலிருந்தேன்.கடந்த 15 மாதத்தில் நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவேனா எனத் தெரியாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.
எனது உடலில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக அறுவைச் சிகிச்சைக்கு என்னை உட்படுத்திக்கொண்டவேளை நான் அவ்வாறு சிந்தித்தேன்.
நான் கிரிக்கெட் மீதான விருப்பத்தை இழந்தேன். குறிப்பாக அறுவைச் சிகிச்சையின் பின்னர் நான் ஆர்வமிழந்தேன்.
இந்த ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸில் அணியை இக்கட்டான நிலையிலிருந்து மீட்டமை குறித்து பெருமிதம் கொள்கிறேன்.எனது சிறந்த சதங்களில் இதுவும் ஒன்று.
இதேவேளை, இங்கிலாந்து ரசிகர்களின் கூச்சல், கேலிகளை நான் கவனத்தில் கொள்ளவில்லை - என்றார்.

தடையின் பின்னர்

## ஸ்மித்தின் கடுமையான உழைப்பு அவரின் சதத்தில் தெரிகிறது

தந்தை பீட்டர் ஸ்மித் நெகிழ்ச்சி

தென்னாபிரிக்கா டெஸ்ட் போட்டி ஒன்றில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்மித், வோர்னர், பேங்கிராப்ட் சிக்கிய போது ஸ்மித்தின் தந்தை தன் மகன் மீதுள்ள கோபத்தில் அவரது கிரிக்கெட் மட்டையைத் தூக்கி எறிந்தது அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது.
ஆனால் ஓராண்டுகாலத் தடைக்குப் பின்னர் மீண்டும் ஆஸ்திரேலிய அணியில் இணைந்தார். நேற்று முன்தினம் ஆரம்பமான ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட இலக்குகள் இழக்கப்பட ஸ்மித் தன் அபாரமான ஆட்டத்தால் அணியை மீட்டெடுத்தார். அவர் 144 ஓட்டங்களைக் குவித்தார்.
இது குறித்து ஸ்மித்தின் தந்தை பீட்டர் ஸ்மித், தெரிவிக்கையில்;
"ஸ்மித்துக்கு இது பெரியதொரு ஆரம்பம். நாமும் அவருடன் இதனைப் பகிர்ந்து கொள்கிறோம். மீண்டும் வந்து இந்தச் சதத்தை எடுத்ததன் பின்னணியில், ஸ்மித்தின் மிக மிகக் கடுமையான உழைப்பு இருந்தது. மிகவும் கடினமான இன்னிங்ஸ் இது. இந்தச் சதத்தில் அந்தக் கடினம் தெரிந்தது. இது அவனிடம் ஏற்படுத்திய விளைவிலிருந்து நாம் அதை ஊகிக்க முடிகிறது. தடைக்காலம் மிகவும் மோசமானது. அதனால்தான் அவனுடனேயே நாங்களும் செல்ல வேண்டியிருந்தது.
ஆனால் ஸ்மித் சதத்தை நெருங்கும் போது எனக்கு எப்போதும் இல்லாத அளவுக்கு நடுக்கமும் பயமும் இருந்தது. அதனால் இப்போது உணர்ச்சிவயப்பட்ட நிலையில் உள்ளேன். சதம் எடுத்ததைப் பார்த்த போது உணர்ச்சி வசப்பட்டோர். இன்னும் கூட நான் உணர்ச்சிகரமாகத்தான் இருக்கிறேன்.
ஆனாலும், கடந்த ஆஷஸ் தொடரில் பிரிஸ்பனில் ஸ்மித் அடித்த சதம்தான் என்னைப் பொறுத்தவரையில் சிறந்த சதமாகும். ஆனால் இந்தச் சதம் அணியின் இக்கட்டான நிலையில் பெறப்பட்டதால் இதுவும் பெரிய சதம்தான் - என்றார்.

# வோர்னரை கிண்டல் செய்த இங்கிலாந்து ரசிகர்கள்

ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணி வீரரான டேவிட் வோர்னரை இங்கிலாந்து ரசிகர்கள் கடுப்பேற்றினர்.
பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் இருந்து மீண்டு வந்த வோர்னர், ஸ்மித், பேங்கிராப்ட் இந்த ஆஷஸ் தொடரில் இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில், ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முக்கிய தொடராக பார்க்கப்படும் ஆஷஸ் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.
டேவிட் வோர்னர் , பான்கிராப்ட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். இதில் வோர்னர் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.
வோர்னர் ஆட்டமிழந்து வெளியேறும் போது இங்கிலாந்து



ரசிகர்கள் பலரும் அவரை கடுப்பேற்றும் விதமாக, உப்புத் தாளை வெகுநேரம் காண்பித்து வழியனுப்பினர்.

**வேலையாள்கள் தேவை**

புடவைக்கடைக்கு விற்பனையாளர் தேவை. ஆண் /பெண் இருபாலாரும் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. CS27073(16)18

**077 303 0918**

**வேலையாள்கள் தேவை**

நல்லூரில் இயங்கும் சுற்றுலா விடுதிக்கு

- முகாமையாளர்,
- வரவேற்பாளர் - பெண் தேவை.
- ஆங்கிலம், கணினி தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
- தேவையேற்படின் தங்குமிடம், உணவு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். (தூர உள்ளவர்களுக்கு)

**077 248 7642**

**GROUP CLASSES**
**ENGLISH and TAMIL MEDIUM**

- MATHS • SCIENCE • ICT (O/L & A/L)
*GRADE - 6 to O/L*
- O/L MATHS GROUP CLASSES COMMENCING ON 5th SEP 2019 11.00 A.M

**CONTACT: 077 205 5224**

**காணி வீடு விற்பனை**

12/11, மூத்ததம்பி வீதி, மானிப்பாயில் 1 பரப்பும் 15.8 குளியும் கொண்ட காணியும் அதனுடன் அமைந்த நவீன வசதியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. மூன்று (3) பெரிய அறை இணைந்த குளியலறை (1)

- தரகர் அல்லாத நேரடித் தொடர்புக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

**077 401 6745**

## ஆஷஸ் தொடர்;
## இங்கிலாந்து எங்களை தோற்கடிக்கும் - வோர்னர்

ஆஸ்திரேலிய அணி ஆஷஸ் கிண்ணம் இல்லாமல் வெறுங்கையுடன் நாடு திரும்பும் நிலையை இங்கிலாந்து அணி உருவாக்கும் என ஆஸ்திரேலிய அணி வீரர் டேவிட் வோர்னர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; இங்கிலாந்து அணி அதிக ஆக்ரோசத்துடன் விளையாடி எங்களை தங்கள் சொந்த மண்ணில் தோற்கடிக்க முயலும். அவர்கள் எங்கள் காயங்களை அதிகமாக்க முயல்வார்கள். நாங்கள் வெறுங்கையுடன் ஆஷஸ் கிண்ணம் இல்லாமல் நாடு திரும்புவதை உறுதி செய்ய விரும்புவார்கள்.

அவர்கள் ஆடுகளத்தில் மாத்திரமன்றி ஆடுகளத்துக்கு வெளியேயும் எவ்வளவு அழுத்தங்களை பிரயோகிக்கின்றனர் என்பது எங்களுக்குத் தெரியும்.

பென்ஸ்டோக்ஸ் மிகச்சிறந்த வீரர். அவர் பெரிய முன்னேற்றங்களை கண்டுள்ளார். அவர் மீண்டும் வந்து கடுமையாகப் போராடிய விதத்தைப் பாராட்டவேண்டும். அவர் முன்னரை விட தற்போது அதிக வேட்கையுடன் உள்ளார்.

உலகக் கிண்ண அரையிறுதியில் இங்கிலாந்திடம் தோல்வியடைந்தமை எங்களுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும். நாங்கள் அரையிறுதியில் தோற்பதை விரும்புவதில்லை.

**வடஇந்தியா, காசி, சீரடி, திருப்பதி யாத்திரை**

ஆரம்பம்:05.09.2019 | நாட்கள்:16 | யாத்திரிகர்:15

**செல்லுமிமிடங்கள் சுருக்கமாக:** **டெல்லி:** நாராயணர்கோவில் மற்றைய இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா**. தாஜ்மகால். **மதுரா**. கிருஷ்ணஜென்மபூமி. பிரேம்மந்திர்தரிசித்தல். **அலகாபாத்**. கங்கா. ஜமுனா. சரஸ்வதி. திருவேணிசங்கமம் வேறுஇடங்களும் காணலாம். **கயா** காலமானவர்களுக்கும் சிரார்த்தம் செய்யுமிடம். அகால மரணமானவர்களுக்கும் சேர்த்து செய்யலாம். புத்தகயா. பலநாடுகள் கட்டிய புத்தாலயங்கள். **சீத்தாமடி**. சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம். **காசி** விஸ்வநாதர் உட்பட்ட 15 இடங்கள் காசியில் தரிசிக்கலாம் அத்துடன் **கங்கா பூசையும்** காணலாம். 3 நாட்கள் காசியில் தங்கல் பின்பு **மும்பாய்**. சீரடிபாபா. தரிசனம். சனிசிங்கனாப்பூர். சனிபகவான்கோவில். திரியம்பகேஸ்வரர்ஜோதிலிங்க தரிசனம் வேறு இடங்களும் காணலாம். பின்னர் **இராமேஸ்வரம்** தீர்த்தமாடி காசி யாத்திரை நிறைவு பின்னர் நவபாஷாணம் உத்திரகோசமங்கை. சிவன் ஆலயம். திருப்புலானி தரிசித்து மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர். தரிசனம் முடித்து **திருப்பதி** காளகஸ்திரி. அலமேலுமங்கா. திருத்தணி. தரிசனம் முடித்து **சென்னை** வருகை 1நாள் சென்னையில் சொப்பிங் முடித்து 21.09.2019 நாடு திரும்பல்

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:** 5 விமானப்பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு, 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், (மினரல் வாட்டர்), யாத்திரிகை முழுவதும் AC வாகன வசதி வீட்டிலிருந்து விமானநிலையம் செல்லவும் திரும்ப வீட்டிற்கு வரவும் வாகன வசதி (யாழ் கொழும்பு யாழ்) வாகன வசதி செய்து தரப்படும். விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

குறைந்த கட்டணம் நிறைவான தரிசனம்

"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"
"பூரண பாதுகாப்பான யாத்திரைப் பயணம்"

**கலாநிதி T. ஸ்ரீ ரெங்கநாதன் மகன்:ராஜன்**

Office: City Center Shoping Complex 3rd Floor, No.59, 3/6, Sea Street, Colombo - 11
Email: sriranganathan2601@gmail.com Facebook: sridevisriranganathan thuraiappa
Tel: 0777680102, 0777362154

**இலங்கை கணக்காளர் சேவை III**
**திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நவம்பர் 2019 இற்கான வகுப்புக்கள்**

இலங்கை கணக்காளர் சேவையில் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்பட்டு கணக்காளராக பணிபுரியும் தலை சிறந்த விரிவுரையாளர் குழாமினரால் வகுப்புக்கள் நடத்தப்படும்.

**ஏனைய சிறப்பம்சங்கள்**

- முன்னைய பரீட்சைகளில் அதிகூடிய சித்தி வீதங்களை கொண்ட நிறுவனம் -
- இலகுவாக அடையக்கூடிய வகையில் யாழ். பஸ் நிலைய பின்புறமாக உள்ளது
- பரீட்சை பாடத்திட்டத்தை அடிப்படையாக கொண்ட விரிவுரைகள் மற்றும் 100 % பரீட்சை வினாத்தாள்

**இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்**

**மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு**

முகாமைத்துவ / வணிக / பொருளியல் துறை பட்டதாரிகள்

**அல்லது**

கணக்கியல் உயர் டிப்ளோமா (HNDA) தகுதி உடையோர்

**அல்லது**

பட்டயகணக்காளர் பரீட்சையில் CAB 1 மற்றும் CAB 2 பூர்த்தி செய்த அல்லது Business Level பூர்த்தி செய்தவராக இருத்தல்

**திறந்த பரீட்சைக்கு**

ஓய்வூதியம் பெறக்கூடிய அரசசேவையில் 5 வருட சேவை பூர்த்தி

**வகுப்புக்கள் ஆரம்பம்**
**Batch - 1 4.8.2019**
**Batch - 2 10.8.2019**

**IBM INSTITUTE OF BUSINESS MANAGEMENT**
No.01, 2nd Lane, Power House Road, Jaffna.
021 222 7770, 077 707 1601, 077 763 3915,
எமக்கு வேறு கிளைகள் கிடையாது

# வடமாகாண G.C.E.(O/L) க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் வழங்கப்படும் முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

## நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
| --- | --- | --- |
| 07.08.2019 – புதன் | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | காலை 7.00 - பி.ப. 3.00 |
| 08.08.2019 – வியாழன் | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | காலை 7.00 - பி.ப. 3.00 |
| 09.08.2019– வெள்ளி | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | காலை 8.00 - பி.ப. 3.30 |
| 10.08.2019 – சனி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.00 - பி.ப. 3.30 |
| 11.08.2019 – ஞாயிறு | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை 7.00 - பி.ப. 3.00 |
| 12.08.2019 – திங்கள் | கூட்டுறவு மண்டபம் A9 வீதி, கிளிநொச்சி | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 13.08.2019 – செவ்வாய் | ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம், முல்லைத்தீவு | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 14.08.2019 – புதன் | மாகாண தொழில்நுட்பக் கல்லூரி A9 வீதி, மாங்குளம் | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 15.08.2019 – வியாழன் | வவுனியா நகர சபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 16.08.2019 – வெள்ளி | மன்னார் நகர சபை மண்டபம் | காலை 8.00 - பி.ப 3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
| --- | --- |
| கணிதம் | 1. வே.தேவசேனாதிபதி LLB, சட்டத்தரணி<br>2. K. வசந்தன் (Trained Teacher Colombo)<br>3. S.மணிமாறன் (Trained Teacher Jaffna)<br>4. M.லிங்கேஸ்வரன் B.sc, PGDE Teacher St.John's College Jaffna. |
| விஞ்ஞானம் | 1. வே.சுந்தரேஸ்வரன் Rtd.D.G.M, தேசிய லொத்தர் சபை<br>2. V. பிரேம்குமார் P.H.I யாழ்ப்பாணம். |
| தமிழ், வரலாறு | 1. ஆர்த்திகன் B.A<br>2. S. நடராஜா B.A (Hons) |

- நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- அனைத்துப் பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- கடந்த கால வினாவிடைக் கொத்து இலவசமாக வழங்கப்படும்.

**மாணவர்கள் கட்டாயமாக பாடசாலை சீருடையில் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்**

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர்
சட்டத்தரணி வே.தேவசேனாதிபதி LLB
தொ.இல. 077 113 3400, 011 232 7524

அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்

(J/10291)(11)

**தொடர்பு:- பே.இளமுருகன் - 076 644 3385 ஆ.முருகானந்தன் - 071 856 1252**
**கே.சத்திதரன் - 077 842 9649 எஸ்.ஐங்கரன் - 077 715 7779**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.